உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] துந்துபி- ஹு மார்கழி-மீ [பகுதி உ.

Vol. XXI. December—January—1922-1923. No. 2.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

சிறப்புப்பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

1. உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும், நீங்கலா
அல(கு)இ லா விளை யாட்(டு)உடை யாரவர்
தலைவர் : அன்னவர்க் கே சரண் நாங்களே.

இதன் பொருள்:—(நாம் வாழும் பூமியையுள்ளிட்டதும், சூரியனை நடுவாக உடையதுமான அண்டத்தையும் அதுபோலவே மற்றைப்) எல்லா அண்டங்களையும் தோன்றச்செய்தலும் (தோன்றியவைகளை)நிலைக்கச்செய்தலும் (நிலைத்தவைகளை) ஒடுங்கச்செய்தலும் (ஒடுங்கியவைகளைத் திரும்பத்தோன்றி நிலைத்து ஒடுங்கச்செய்தலுமாக மாறிமாறிப் படைப்பு முதலான முத்தொழில்களையும் காலதேசவரையறையின்றி எக்காலத்தும் எவ்விடத்தும்) ஓயாத அளவிலடங்காத விளையாட்டாக உடையவரே (எல்லா உலகங்களுக்கும்) முதல்வர். (அவரன்றி வேறு பற்றுக்கோடில்லாமையால்) அவருக்கே நாம் அடைக்கலம்.

யாவை தாமும் உள எனக் கூட்டித் தாம் என்பதைப் பகுதிப் பொருள் விகுதியாக்கிப் பொருள்கூறப்பட்டது. தாம் என்பதற்குத் தாமே (-அசகாயகர்த்தாவாய்-வேறு துணை வேண்டாராய்)என்று பொருள் கூறலும் பொருந்தும். அஸஹாயசூரன் என்பதை மொழிபெயர்த்துக் "கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ"ன் என வாலிவதைப்படலத்தில் அழகிதாகக் கூறப்பட்டிருப்பதை நோக்குக.

உள ஆக்கல்-உள்ளன ஆகச்செய்தல் (-படைத்தல்). நினைவுறுத்தல் நினைவுறச் செய்தலெனவும் பயமுறுத்தல் பயமுறச் செய்தலெனவும் பொருள்படல்போல, நிலைபெறுத்தல் நிலைபெறச்செய்தல் (-காத்தல்) என்று பொருள்பட நின்றது.

'ஜீவேச்வரஜகத்' என வைணவரும் 'பசு பதி பாசம்' எனச் சைவரும் உயிர் ஈசுரன் உலகம் என்னும் முப்பொருள்கள் சிருட்டிக்கப்படாமல் என்றும் உள்ளனவென்னுங் கொள்கையையுடையோராதலால், உலகம் உள ஆக்கல் என்றது சூக்குமநிலையிலிருந்த உலகத்தைத் தூலநிலையடையச்செய்த லெனவும், நீக்கலும் என்றது திரும்பச் சூக்குமநிலையடையச்செய்தலெனவும் கொள்க. இது *சற்காரியவாதம்; சூனியவாதத்திற்கு மறுதலை.

நீங்கலா-இடையறாத. அலகிலா-அளவிலாத. நீங்கலா அலகிலா விளையாட்டுடையார்- (சிருட்டியாதி முத்தொழில்களையும்) இடையறாமலும் அளவில்லாமலும் செய்யும் விளையாட்டாகவுடையவர். நீங்கலா அலகிலா விளையாட்டுடையா ரென்பதற்கு (ஷ முத்தொழில்கள்) நீங்கலாக (-அன்றி) அளவில்லாத (வேறு) விளையாட்டுக்களை யுடையவரென்றும் பொருள்கூறுவர். அவர், "ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும்" என விளையாட்டு மூன்றென்றதனால், அவைகளையே அளவிலா விளையாட்டு என்று கூறல் பொருந்தாதென்பர். ஆக்கல், நிலைபெறுத்தல், நீக்கலென்றதனால் விளையாட்டுக்கள் மூன்றுவகையென்றும் அவை ஒவ்வொன்றும் அளவில்லாதனவென்றும் கொள்ளலாம்.

---

*சற்காரியவாதம்—முன்பில்லதது இடையே தோன்றுதென்றும் காரியம் அழிந்தகாலத்துக் காரியவடிவம் காரணத்தில் அழியாது சூக்குமமாய் நிலைத்திருக்குமென்றும் வாதித்து நிலைநாட்டுவது,

விளையாட்டுடையார்—விளையாட்டாக உடையவர். ஆக என்பது தொக்குநின்றது. "விளையாட்டுடையாரவர் தலைவர்" "விளையாட்டுடையாரெவர் தலைவர்" என இரண்டுபாடங்கள் காணப்படுகின்றன. "விளையாட்டுடையாரவர் தலைவர்" என்ற பாடங்கொண்டவர்கள், விளையாட்டுடையாராகிய அவர் தலைவர் என 'ஆகிய' என்னும் சொல்வருவித்துப் பொருள் உரைத்தார். "விளையாட்டுடையாரெவர் தலைவர்" என்ற பாடங் கொண்டார், விளையாட்டுடையார் எவரோ அவரே தலைவர் என "அவர்" என்ற சொல் வருவித்துப் பொருள் உரைத்தார். விளையாட்டுடையாரவர் என்பதில் உள்ள அவர் என்பதை "சிவனவனென் சிந்தையுணின்றவதனால்"* என்பதில் உள்ள 'அவன்'போலப் பகுதிப்பொருள் விகுதியாகக்கொண்டு விளையாட்டுடையாரவர் என்பதற்கு இங்கே ஒரு சொல்லும் வருவியாமல், பொருள்கூறப்பட்டது. ஆரணியகாண்டக் காப்பில்'ஆதிதேவர் அவர்'என்பதில் உள்ள அவர் இந்த அவர்போன்றது.

'அவர்' என்பதனால் கம்பர் கடவுளை அவர்க்குரிய இயற்கைப் பெயர்ச்சொல்லாலன்றிச் சுட்டுப்பெயர்ச்சொல்லாற் குறித்தாரெனவும் கொள்ளலாம். "அவன் அசையாமல் அணு அசையாது," "எல்லாம் அவன்செயல்" "எல்லாம் அவர்செயல்" என்னும் உலகவழக்கில் 'அவன்' 'அவர்' என்பவை பலர் அறி சுட்டுப்பெயராய்க் கடவுளைக் குறித்தல் காண்க. இவ்வாறே "அது நீ ஆனாய்" என்ற மகாவாக்கியத்தில் 'அது' என்ற சுட்டுப்பெயர் பரம்பொருளைக் குறித்தலையும் நோக்குக.

இறைவனுக்குச் சிருட்டியாதித் தொழில்கள், 'இஃது இவ்வாறுக' என்ற சங்கற்பமாத்திரையானே நிகழ்வனவாம். அத்தொழில்களை விளையாட்டென்றார். †"விளையாட்டென்றது ஐங்கலப்பாரம்பொறுத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பதுபோல, அத்துணை எளிதிற்செய்யும் ஆற்றலுடைமைபற்றியே". அன்றிச் சிறுவர் தட்டாடல் பெரியர் சீட்டாடல் போன்றதன்று; வீண்தொழிலும் அன்று; ஆன்மாக்கள் தனுகரண புவன போகங்களைப் பெற்று அவற்றைக்கொண்டு அடையும் அநுபவத்தால் படிப்படியாகப் பக்குவம் அடைந்து முத்திபெறும் பயன்கருதிச் செய்யப்படுவதாம்.

---

* திருவாசகம்.

† சிவஞானபாடியம் 2-ம் சூத்திரம் க-ம் அதிகாரம்.

இப்பாட்டில், கடவுளது பொது இலக்கணம் கூறி, அடுத்த "சிற்குணத்தர்" என்னும் பாட்டில் "மூன்றனுள் முற்குணத்தவரே முதலோர்" எனச் சாத்விககுணமுடையவரென்னும்விட்டுணுவே முதற் கடவுளெனக் குறிப்பாகப் புலப்படும்படிகூறி, இறுதிக் கடவுள்வாழ்த்துக் கவியாகிய "ஆதிஅந்தம்அரி" என்னும் பாட்டில் 'அரி'யென்று விட்டுணு நாமத்தை வெளிப்படையாகக்கூறி, அவன் "பாத மல்லது பற்றலர் பற்றிலர்" என்றதனுல், கம்பர், தம் இராமாயணத்தைப் பலமதத்தின ரும் உள்ளசபையில் அரங்கேற்றும் ஆரம்பத்தில், அவர்களெல்லாரும் அங்கிகரிக்கும்படி முதற்பாட்டையும், எல்லாச்சமயிகளும் தத்தம் கடவுள் முக்கியாமிசத்தில் சாத்துவிககுணச்சிறப்புடையவரென்பது பற்றியும் வைணவர் தம்கடவுளே சாத்துவிககுணமுள்ளவரென்பது பற்றியும் இருதிறத்தாரும் ஒப்பும்படி இரண்டாம்பாட்டையும், தம் கதாநாயகன் விட்டுணுவின் அவதாரமென்பதற்கு இயைய மூன்ரும் பாட்டையும் உய்த்துணரும்படி இயற்றினரென்பது பொருந்தும். இப் பாட்டினுல், விட்டுணு, இந்நூலுக்கு ஏற்புடைக் கடவுளாதலேயன்றி, இந் நூலாசிரியர்க்கு வழிபடுகடவுளுமாகக் கொள்வதற்கு ஆதாரமாகப் புறச்சான்று ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. *அகச் சான்று உண்டோவென்பதை ஆராய்வாம். திருஅவதாரப் படலத்தில்,

கரு முகில் தாமரைக் காடு பூத்து, நீ(டு)
இரு சுடர் இரு புறத்(து) ஏந்தி, ஏந்(து) அலர்த்
திருவொடும் பொலிய, ஓர் செம் பொற் குன்றின் மேல்
வருவ போற் கலுழன் மேல் வந்து தோன்றினன்.

எழுந்தனர் கறை மிடற்(று) இறையும், தாமரைச்
செழுந் தவி(சு) உகந்த அத் தேவும்; சென்(று) எதிர்
விழுந்தனர், அடி மிசை, விண்ணு ளோரொடும்;
தொழுந்தொறும் தொழுந்தொறும் களி து ளங்குவார்.

---

* அகச் சான்று (இந்நூலின்) உள்ளேயே உள்ள சாட்சி; புறச்சான்று வெளியே(கன்னபரம்பரை வரலாறு முதலியவற்றில்) உள்ள சாட்சி; இவற்றுள் முன்னது மறுக்கக்கூடாத வலிமைமிக்கது.

என்ற பாட்டுக்களில் விட்டுணுவுக்குப் பரத்துவம் கூறி, அக்கடவுளே தம் வழிபடுகடவுளெனக் கம்பர் புலப்படுத்தினரென்பது ஓர் அகச் சான்றும். இதனை ஆட்சேபிப்போருள்ளே சிலர், * கறைமிடற்றிறை யென்பது தப்பான பாடமென்றும்; இப் பாடம் உண்மையானதா யிருந்தால், கம்பராமாயணம் ஆதிசைவ சிரேட்டராகிய தில்லைத் தீட்சிதர் களால் அங்கீகரிக்கப்பட்டதாகக் கேட்கப்படுகிறபடி அங்கீகரிக்கப்பட் டிராதென்றும், கம்பர் என்ற பெயரானது கம்பநாடுடையார் கம்பரென்ப தாக இருப்பதன்றிக் காஞ்சிபுரத்துச்சிவன்பெயராகிய கம்பராகவும் இருப் பதனாலும், கம்பர்மகன்பெயர் அவர் பெயர்போற் கவர்படுபொருள் மொழியாயில்லாமல் தெளிவாகச் சிவநாமமாகிய அம்பிகாபதியாக இருப் பதனாலும், சைவருக்குத் திருமாலின் பெயரிடுவது வழக்கமாயினும் வைணவர் சிவ நாமம் பூண்பது மரபாயில்லாதிருப்பதனாலும், தாம் இயற்றிய ஏரெழுபது என்னும் நூலில் விநாயகதோத்திரம் செய்திருப்ப தனாலும் சைவரெனத் துணிதற்பாலராகிய கம்பர் சிவனை யிழித்துக் கூறியிராரென்றும்; ஆதலால் † 'கறையடிக்கிறை' யென்றுள்ள பாடமே சரியானதென்றும், ‡ வான்மீகத்தில், இந்தச் சந்தர்ப்பத்திற் கூடிய பிரமாதிதேவர்களின் கூட்டத்திற் சிவன் இருந்ததாகக்கூறப்படவில்லை யென்றும்; அந்தக்கூட்டத்தின்முன் பிரசன்னமாக எழுந்தருளிய விட்டு ணுவைப் பிரமன்வணங்காமையும் தேவர்கள் வணங்கினமையும் தெளி வாக விளங்குகின்றனவென்றும்; கம்பராமாயணத்தில் இன்னும் இரண் டோரிடங்களிற் சிவனை விட்டுணுவுக்குத் தாழ்த்திக்கூறும் பகுதிகள் தப்பாக மாற்றப்பட்டவை அல்லது இடைச்செருகல்களென்றும் கூறு வர். வேறுசிலர், மேற்கூறிய சமயத்திற் சிவன் விட்டுணுவைவணங்கின தாக வைத்துக்கொண்டாலும், அவ்வணக்கம், அக் கடவுள் தம் குமாரக் கடவுளை ஒரு தருணத்தில் வணங்கியதாகக் கேட்கப்படும் வணக்கம் போலவும், தற்காலமுறைப்படி ஒருசபையில் தலைமை வகிப்பவரை வாகனத்தில் பவனிவரச்செய்து அவருக்குத் தாழ்ந்தோரேயன்றிச் சம மானோரும் உயர்ந்தோரும் பாதசாரிகளாய்ச் சென்று கவுரவிப்பது போலவும், விட்டுணு தேவசபைத் தலைமைவகித்த சமயத்திற் செய்த

* கறைமிடற்றிறை—சிவன்.

† இந்திரன். ‡பண்டித நடேசசாஸ்திரி வால்மீகிராமாயணவசனம் பால காண்டம் 61—63-ம் பக்கங்களைப் பார்க்க.

உபசாரமேயாமென்று கூறுவர். அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள பிரதிக ளெல்லாவற்றிலும் "கறைமிடற்றிறை" என்பதே பாடமாயுள்ளது. அந்த வெளிவந்துள்ள பிரதிகளைக்கொண்டே நம் ஆராய்ச்சியைநடத்து வாம்.

* "ஓரேனந்தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்தொருவன்" எனச் சிவனை விட்டுணுவினும் உயர்த்தியும் †"கடவுட்கங்கை நீர்முடித் தான் இரவொழித்த நீ" என விட்டுணுவைச் சிவனினும் உயர்த்தியும் அவ்வவ் அமயத்துக்கு ஏற்றவாறு இருபெருங்கடவுளரில் ஒருவரை ஏற்றமாகப் பலவிடங்களிற் கூறும் வில்லிபுத்தூரார் பாரதம்போலக் கம்ப ராமாயணமும் சைவ வைணவ பாரபட்சமில்லாத இதிகாசமென்பது அதனை முற்றப்படிப்போர்க்குத் தெற்றெனப்புலப்படும். மேற்கூறிய "ஆதி அந்தம் அரி" யென்னும்பாட்டிற் கம்பர் விட்டுணுவை உயர்த்துக் கூறியவாறே, தாடகைப்படலம் 3-ம் பாட்டில், சிவன் யோகிருந்த காம னுச்சிரமவருணனையில்,

"பற்(று) அவா வேரொடும் பசை அறப் பிறவிபோய்
முற்ற வால் உணர்வு மேல் முடிகினுர் அறிவு சென்(று)
உற்ற வா னவன்."

எனச் சிவனை மேம்படுத்துக்கூறியுள்ளார். இவ்வாறு விட்டுணுவை ஓரிடத்தும் சிவனை ஓரிடத்தும் சிறப்பித்துக் கூறியவர் சிவ விட்டுணுக் களைப்பற்றிப் பொதுப்படக்கூறநேர்ந்த சமயங்களில்,

‡"அரன் அதிகன் உல(கு) அளந்த அரி அதிகன் என்(று) உரைக்கும் அறிவிலோர்க்குப்—பரகதி சென்(று) அடைவரிய பரிசே

---

* பாரதம் அருச்சுனன் தவநிலைச்சருக்கம் அஎ.

† ஷை கிருட்டினன் தூதுச்சருக்கம் கடு.

‡ இப் பாட்டுப்பகுதிக்கு வெளிப்படையான செம்பொருளுக்குவிரோதமாக வைணவசமயவாதிகள், '(விட்டுணுவே பரம்பொருளென்பது நிச்சயமாயிருக்க வும்) அரன் அதிகன்..............பரிசேபோல்' என்றும், சைவசமயவாதிகள், 'அரன் அதிகன்; (இவ் உண்மைக்கு மாறாக) உலகளந்த அரி அதிகன்......... பரிசேபோல்' என்றும் பொருள்கூறுவர். இப்பாட்டு நாடவிட்டபடலத் துள்ளது.

போல்" என்றும், * "யாரினும் உயர்ந்த மூலத் தொருவராம் இருவர்" என்றும் இருவரையும் சமமாகக்கூறுவர்.

மேற்கூறிப்போந்ததனால், கம்பர், சைவ வைணவ சமயங்களை ஏற்றந்தாழ்வில்லாத இரண்டுகண்கள்போலக் கருதினரென்னலாம். அவர் உயிருக்குயிராகவும் உணர்வுக்குணர்வாகவும் கொண்ட கடவுள், எவ்வெத் தொழில்களையும் நடத்துவோரையும் நடத்துவிக்கும் முழுமுதற் கடவுளாய்ச் †"சமயவாதிகள், தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றிமலைந்தனர்' அப்படி நின்ற சமயாதீதப்பழம் பொருளாய் ¶"மூன்றுகவடாய் முளைத்தெழுந்த மூல"மாய் உயர்வொப்பில்லாத பரமபதியே என்பது, அவர் மேற்கூறியவாறு, "யாரினும் உயர்ந்த மூலத்(து) ஒருவர்" என்று விட்டுணுவின் ஓர் அவதாரபுருடராகிய பரசுராமர் கூற்றுகக் கூறியதனுலும் $"செங் கண் மால் நான்முகன் சிவனென் றேகொலோ—எங்கள் நாயகனையும் நினைந்தது ?" என்று தம் கதா நாயகி சீதாதேவி கூற்றுகக் கூறியதனுலும் விளங்கும்.

"ஆதி அந்தம் அரியன்" என்றும் பாடமுண்டெனச் செல்வக் கேசவராயமுதலியார் "கம்பர்" என்றபுத்தகத்திற் கூறியுள்ளார். இந்தப் பாடங்கொண்டால், மேலே விவகரித்த மூன்று கவிகளுமே நாத்திகரொழிய எம்மதத்தினரும் சம்மதித்திடும் பொதுத்தெய்வவணக்கமாம்.

அவையடக்கம்.

2\. நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற் றேன்,எனை!
வைத வைவின் மரா மரம் ஏழ் துளை
எய்த எய்தவற்(கு) எய்திய மாக் கதை
செய்த செய் தவன் சொல்நின்ற தேயத்தே!

---

* பரசுராமப்படலம் உஅ.

† திருவாசகம்.

¶ கவந்தப்படலம் சஉ. $ நிந்தனைப்படலம்.

இ-ள். (பெரியோர்) சபித்த சாபம் (பலியாமல் தப்பாதது)போல (க் குறிதப்பாத ஓர் அம்பினால்) ஏழு மாமரங்கள் (ஒருங்கே) துளைபடும் படி எய்த (இராக) வனுக்கு (உரியதாக) அமைந்த பெருங்கதையைக் கூறிய (வான்மீகி) முனிவனது (பிரபலமான வலிய) காவியம் நிலைபெற் றுள்ள தேசத்திலேதானே அற்பத்தினும் அற்பமான (எளிய) சொற்க ளால் (அக்கதையையே) யான் கூறப்புகுந்தேன். என் அறியாமை இருந்த வாறு என்னே!

நொய்யின் நொய்ய - மெல்லிதினும் மெல்லிய - அற்பத்தினும் அற்பமான. நூற்கல் - நூல்செய்தல். எனை - என்னை! இது ஆச்சரியம் அல்லது இகழ்ச்சிகுறித்து என் அறிவு இருந்தவாறு என்னே! என்னும் பொருள்பட நின்றது. வைதவைவின் - (முனிவர்) சபித்த சாபம் (தப் பாதது) போல. எய்த எய்தவன் - பொருந்தும்படி (அம்பு) எய்தவன். செய் தவன் - செய்யப்பட்ட தவத்தையுடையவன் அல்லது செய்தற் குரிய தவத்தையுடையவன். சொல், ஆகுபெயராய் நூலை உணர்த்தி நின்றது; ஔவையாரது 'தேவர்குறளும்' என்னும் வெண்பாவில் வரும் 'சொல்' போல.

எ(ன்)னை வைதவைவின்—என்னை யானே வைதுகொண்ட வசவு போல என்றும் பொருள்கூறுவர். இப்பொருள்கொண்டால், எ(ன்)னை வைத வைவின் நூற்கலுற்றேன் எனக் கூட்டுக. மேற்கூறிய பொருள் கள் *"அல்லாமலும் 'வைத வைவில் மாமர மேழ் தொளை யெய்த வெய் தவற் கெய்திய மாக்கதை செய்த செய்தவன்' என்பது வேறொரு முக் கிய விஷயத்தை உட்கொண்டு நிற்பதாம். என்னெனில்:—வான்மீகர், ஒருநாள் உச்சிப்போதில், தமசாநதிக்கு நீராடப்போகையில், ஆணும் பெண்ணுமாகக்கூடிக் களித்திருந்த கிரௌஞ்சமென்னும் பக்ஷிகளில் ஆண்பறவையை ஒருவேடன் அம்பெய்துகொல்லப் பெண்பறவைகண்டு துடிக்கும்பரிதாபநிலையை(முனிவசர்)நோக்கி மனம்பொறாமல் 'மாநிஷாத

* விவேகபாநு தொகுதி 2, பகுதி 1, புக்கம் 16, சாமிசரவணப்பிள்ளை.

ப்ரதிஷ்டாந்தம்' என்னுந்தொடக்கத்துச் சுலோகம் தானே தமது வாக்கில்வர, அதனால் அவ்வனசரனைச் சபித்துச்சென்று நீராடி மீண்டு வந்தபின்னர், அச் சுலோகத்தின்மேற் சிந்தையோட, அதில் ஸ்ரீராமசரித்திர சங்கிரகப் பொருள் தொன்யார்த்தமாக விளங்கக்கண்டு, இது என்னையோ எனத் தெளியாது நிற்கையில், பிரமதேவர் அங்கு எழுந்தருளி ராமாயணத்தை உபதேசித்துப் பாடச்சொன்னதாகப் பிரசித்தி வழங்கி வருதலால், அப் பொருளையுங் குறிப்பித்தவாறும். இப்பொருளுக்கு 'வைதவைவில் எய்தியமாக்கனம்' எனக் கூட்டி, வேடனைவைதவசை மொழியில் மராமரந்துளைத்த 'ஸ்ரீராமனுக்குத் தொன்யார்த்தமூலமாகக் கிடைத்த மகத்துவமான கதையெனப் பொருள்கொள்க. இந்தச் சுலோகந்தான், முதன்முதலாகச் செய்யுள்வடிவமாக வெளிப்பட்டதென்றும், சோகக்காரணமாக வெளிவந்ததனால் அதற்குச் 'சுலோகம்'என்று பெயராயிற்று என்றும் வான்மீகம் ஆதிகாவ்யமென்றுங் கூறுவர்."

பஞ்சைக்கொண்டு இராட்டினத்தில் நூல்செய்தல்போலச் சொற்களைக் கொண்டு நூல் (—காவியம்) செய்தலை நூற்கல் என்ற சொல்லாற் குறிப்பித்தார். தம் சொற்கள் பஞ்சுபோல மெல்லியனவென்றும் அச் சொற்களைக்கொண்டு செய்யும் நூலும் நூல்போலவே நொய்யதென்றும் உய்த்துணரவைத்தார்.

பஞ்சி தன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ் சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாய் ஆகக் கதிரே மதி ஆக
மை யிலா நூல் முடியு மாறு.

என்ற வெண்பா மேற்கூறிய கருத்தை இனிது விளக்கும்.

காளிதாசமகாகவி, இரகுவமிச சரிதம் வலிய வயிரமணியென்றும், தம் மதி மெல்லிய நூலென்றும், அச் சரிதையாகிய வயிரமணியுள் தம் மதியாகிய நூல் புகுந்து செல்லும் வன்மையில்லாததென்றும்,

ஆயினும் அவ் வயிரமணி வான்மீகி முதலிய ஆன்றோரது மதியாகிய வயிர ஊசியால் முன்னமே துளைக்கப்பட்டிருத்தலால், அம் மணியுள் அவ் வூசி துளைத்துச் சென்ற வழியே தம் மதியாகிய மெல்லிய நூல் எளிதாக நுழைந்து செல்ல வல்லதாயிற்று என்றும் இரகுவமிசகாவிய அவையடக்கத்திற் கூறியிருப்பதை மேலே கூறிய நூல் என்ற சொல் நினைவுறுத்தாநின்றது.

3. வையம் என்னை இகழவும், மா(சு) எனக்(கு)
எய்த வும், இ(து) இயம்புவ(து) யா(து) எனின்,
பொய் இல் கேள்விப் புலமையி னோர் புகல்
தெய்வ மாக் கவி மாட்சி தெரிக்கவே.

இ-ள். (மேற்கூறியவாறு வான்மீகம் வழங்கும் இடத்திலே இந் நூலைக்கூறத்தொடங்கிய உடனேயே இது நகைக்கிடமாமென்று தெரிந்த யான்) என்னை உலகம் பரிகசிக்கவும் குற்றம் அடையவும் இதனை (முடிவளவும்) கூறியது எதன்பொருட்டென்றால், ('நிழலருமை வெய்யிலில் நின்றறி'தல் போல, இதனைப்பார்ப்போர் சீ, இது எவ்வளவு கேவலமாயிருக்கிறது, இதனை நோக்க வான்மீகம் எவ்வளவு சிறப்பாயிருக்கிறது என்று சிந்திக்கச்செய்து) வான்மீகி கூறியுள்ள தெய்விக மகா காவியத்தின் மகிமையைத் தெரிவிக்கும்பொருட்டே என்க.

வையம்—உலகம்—உலகத்தார். யாதெனின்—யாதால் எனில்—எதன் பொருட்டென்றால்; யாதால் என்பது யாது என ஆல் உருபு தொக்கு நின்றதாகவாவது, யாது என்பது என் என்னும் பொருளில் வந்ததாக வாவது கொள்க. "யாது ஆவது"—என் ஆவது, அதாவது "இதனால் வருந்தீங்கு என் என்பதில் யாது என்று பொருள் படுவதைச் சீவக சிந்தாமணி அரும்பதவுரையிற் பார்க்க. தெரிக்க—தெரிவிக்க—தெரிவிக்கும்பொருட்டு.

முற்பாட்டில் வான்மீகி புகழைமட்டும் புகழ்ந்தார்: இப்பாட்டில் அவர்புகழை * அநுவாதமாகக் கூறினுரென்று கொள்ளலேயன்றிப் "பொய் யில் கேள்விப் புலமையினேர்" என்பதைப் பொதுப்படக்கூறியதாகக் கொண்டு, மற்றைய ஆரிய திராவிட கவிசிரேட்டரையும் புகழ்ந்தாரென்று கொள்ளலுமாம்.

4. அறையும் ஆ (டு) அரங் கும் மடப் பிள்ளைகள்
தறையில் கீறிடில் தச்சரும் காய்வரோ?
இறையும் ஞானம் இ லாத என் புன் கவி
முறையின் நூல் உணர்ந் தாரும் முனிவரோ?

இ - ள். (விரகறியாத) பேதைப்பிள்ளைகள் சிறுவீடும் (பெரிய) நடனசாலையும் (போல வடிவம் தோன்றும்படி) தறையிலே (கோடுகள்) கீறி (விளையாடி)னுல், (அவைகளைப்பார்த்து அவைகள் சிற்பநூற்படி இல்லையென்று) சிற்பம்வல்லார் கோபிப்பாரோ? (கோபியார்: அவ்வாறே நூல்களுக்குரிய) முறையினை உடையநூல்களை (க்கற்று) அறிந்தோர் (ஆகிய வித்துவான்கள், அப்படிப்பட்ட) அறிவு சிறிதும் இல்லாத என்னுலியற்றப்பட்டிருக்கிற (முறையற்ற) அற்பநூலை (நோக்கி, இத் தகைய குற்றங் குறைகள் உள்ள நூலை ஏன் செய்தாயென்று என்னைக்) கோபிப்பாரோ? (கோபியார்).

அறை—சிறுவீடு. ஆடரங்கு—ஆடு அரங்கு—(கூத்து) ஆடும் சபை—நாடகசாலை. பட—உண்டாக—தோன்ற. மடம்—அறியாமை. இறையும்—சிறிதும். முறையின்—முறையினைஉடைய.

ஆற்றுப்படலம்.

5. ஆச லம் புரி ஐம் பொறி வாளியுட்
காச லம்பும் முலையவர் கண் எனும்

---

*அநுவாதம்—முன்னர்க்கூறிய ஒருபொருளை ஒரு நிமித்தத்தாற் பின்னும் எடுத்துக்கூறுதல். (சங்க அகராதி).

பூச லம்பும் நெறியின் புறம் செலாக்
கோச லம் புனே ஆற்(று)அணி கூறுவாம்.

இ - ள். (மன்மதனது) பஞ்ச பாணங்களும் மாதரது கண்ணம்புகளும் (முறையே விரதியர் துறவியர்பாலும் கணவரல்லார்பாலும்) நன்னெறிக்குப் புறம்பாக (க் காமக்கருத்து உண்டாகுமாறு) செல்லாத (படி செய்யும் மகத்துவமுடைய புண்ணிய தேசமாகிய) கோசலநாட்டினே அலங்கரிக்கும் (சரயு என்னும்) ஆற்றின் அழகை (யாம் வருணித்துக்) கூறுவாம்.

ஆசு அலம்புரி—குற்றத்தையும் (மனச்) சுழற்சியையும் செய்கின்ற. ஐம்பொறிவாளி—ஐந்து (என்னும் எண்) ஆகிய அடையாளமுள்ள (மன்மத) பாணங்கள்; (ஐம்பொறி) வழியாக அவற்றிற்குரிய புலன்களே அடைதற்கு அவாவும்படி மனத்தைத்தூண்டும்) அம்புகள் எனலுமாம். காசு அலம்பு — இரத்தினம் (—இரத்தினுபரணம்) ததும்பிய (—நிறைய அணிந்த). பூசல் அம்பு—போராடலேயுடைய அம்பு. நெறியின்புறம்—(நல்ல) நெறிக்குப் புறம்பானது — தீயநெறி. கோசலம்புனே — கோசல நாட்டினே அலங்கரிக்கின்ற.

இப்பாட்டுத் திரிபாக அமைக்கப்பெற்றது. திரிபின்வனம் சிதை யாதபடி திரிபுப்பகுதியான சீர்கள் சந்திபிரியாமல் விடப்பட்டன.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

விஞ்ஞான தீபம்

மொழிபெயர்ப்புமுறை.

(யாழ்ப்பாணத்துத் தமிழ்வளர்க்கும் பெருங்கழகத்தார்முன்னிலையிற் படிக்கப்பட்டது.)

ஒருமொழியிலுள்ள நூலினை மற்றொருமொழியிற் பெயர்த்து எழுதுமிடத்து முதனூற்பொருள், நடை, இயைபு முதலியவற்றை மாறுபடவிடாது மொழிபெயர்ப்புநூலினுள்ளுங் காட்டுதல்வேண்டும். முதனூல் செய்யுள்நடையினதாயின் மொழிபெயர்ப்புநூலுஞ் செய்யுள் நடையினதாகித் தக்க யாப்பினாற் பொருத்தமுற்று நிற்கவேண்டும். விஞ்ஞானநூல் உண்மைநிச்சயிக்கிற அளவைநூல் ஆதலால் மொழி பெயர்ப்புநூலுந் திரிபில்லாத பொருளினதாக முதனூற்கருத்தொடு மாறுகொள்ளாததாக விருத்தல்வேண்டும். மொழிபெயர்ப்புமுறையை ஆராய்வதற்குமுன் தமிழ்மொழிச்சொற்களின் சிறப்பியல்பையும், ஆற்ற லினையும் ஆராய்வாம்.

தனித்தமிழ்மொழிகள் ஓரெழுத்தாலும் ஈரெழுத்தாலும் ஆகிய மணிபோன்ற சிறியமொழிகளாம். திருமுருகாற்றுப்படை யகவலை யுற்று நோக்குக. பின்னுந் தமிழ்மொழியில் ஒற்றுமையும் வேற்றுமையும் பொருந்திய இணைச்சொற்கள் ஒத்த எதுகையின. அறம், மறம்; அன்பு, வன்பு; இன்பம், துன்பம் என்றாற்போல. மேலுந் தமிழ் மொழியில் ஒரே தொடரான சொற்கள் ஒரே விகுதியையுடையன; செம்மை, கருமை என்னும் பண்புப்பெயர்களை நோக்குக. பிறபாஷை களிலிருந்து தமிழ்மொழிக்குச் சேர்க்கப்பட்டசொற்கள் இயற்றமிழ்ச் சொற்களேபோன்று முதனிலை இடைநிலை ஈற்றுநிலைமுதலிய யாவும் தமி ழிலக்கணவரம்பு கடவாது பொருந்தநிற்பன. புதியமொழிகளை ஆக்கிக் கொள்ளுமிடத்தும், திசைச்சொற்களை எடுத்தாளுமிடத்தும் மேற்காட் டிய குறிப்புக்களைக் கைக்கொண்டு சுருக்கம், விளக்கம், தெளிவு, தமிழுரு வம் இவைபொருந்த மொழிகளை ஆக்கிக்கொள்ளுதல்வேண்டும். தமிழ்

மொழியில் ஆட்சியிலுள்ளசொற்களைப் புறக்கணித்தல் கூடாது. ஆதலால் முதற்கண் தமிழ்நூல்களையாராய்ந்து அவற்றுட் பொதிந்து கிடக்கிற விஞ்ஞான நூன்மொழிகளையெல்லாம் தெரிந்தெடுத்து அவற்றின்பொருளை நிச்சயம்பண்ணிக்கொள்ளுதல்வேண்டும்.

இங்ஙனம்செய்யில், தமிழ்மொழியில் வைத்திய நூல்கள், தத்துவ நூல்கள் முதலியவற்றுள் மறைந்து கிடக்கிற ஆயிரக்கணக்கான சொற்கள் வழக்குக்கு வருவனவாம். முன்னுளில் நூலியற்றிய ஆசிரியர் சிலர் மண், நீர், தீ, வளி, வான் என்ற தமிழ்வழக்கிருக்கப் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னுந் தமிழ்மொழிகளைப் புறக்கணித்து ஸப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்றும், நிறுத்தல், நிறைத்தல், விடுத்தல் என்னும்மொழிகளை யாட்சிக்குக் கொண்டுவருதல் தகுதியென்பதைமறந்து கும்பக, பூரக, ரேசகம் என்றும் வழங்கினமையால் வடமொழிகளே வழக்குச்சொற்களாகவும், தனித்தமிழ்மொழிகள் வழக்கில்சொற்களாகவும் ஆய்விட்டன. தமிழ்மொழி யில்லாதவழிப் பொருத்தமுள்ள பிறமொழியை ஆளுதல் தகுதியாகும். தமிழ்வழக்கிருப்பின் உள்ளமொழியையே ஆட்சிக்குக் கொண்டுவருதல்வேண்டும். ஆரியமொழியினும் ஏற்புடையனவற்றை யாளுதலிழுக்காகாது. ஆதலாற் பொருணூன்மொழி வரையறைசெய்யப்புகுவோர் முதற்கண் தமிழ்மொழிவழக்கிலுள்ள பொருத்தமுள்ள சொற்களைக் கண்டெடுப்பது கடனாகும்.

இனிப் பொருணிச்சயம்பண்ணுவது எவ்வாறு என்பதை ஒரு உதாரணத்தால் விளக்குவாம். தொல்காப்பியனார் உயிர்ப்பொருள்களை வகைப்படுத்தும்வழி,

"ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே
இரண்டறிவதுவேயதனொடுநாவே
மூன்றறிவதுவேயவற்றொடுமூக்கே
நான்கறிவதுவேயவற்றொடுகண்ணே
யைந்தறிவதுவேயவற்றொடுசெவியே
யாறறிவதுவேயவற்றொடுமனனே
நேரிதினுணர்ந்தோர்நெறிப்படுத்தினரே" எனவும்,

"மாவுமாக்களுமைஐயறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"
"மக்கடாமேயாறறிவுயிரே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"

எனவும் உரைத்த சூத்திரங்களுக்கு உரைகாணும்வழி "மனம்" என்னும் சொல்லினது பொருளை நிச்சயம்பண்ணுதல்வேண்டும். ஆசிரியர் மாக்களென்றும், மக்களென்றும் வேறுபாடுசெய்துகொண்டது முதற்கண் ணோக்கற்பாலது. இனிப் படிப்படியாக ஒன்றுமுதல் ஆறுவரையும் அறிவுந்தரியவாயில்களை வகைப்படுத்துச் சொல்லினானன்றோ? அங்ஙனஞ்சொல்லிய வியல்பை யாராயுமிடத்து நான்கறிவுள்ள நண்டுக்கு இல்லாததாகிய செவியென்னும் வாயில் ஐயறிவுள்ள குரங்குக்குண்டு. ஏனைய நான்குவாயிலும் அடைப்புண்டிருக்கும்பொழுதும் குரங்கு ஐந்தாவது வாயிலாகிய செவியினால் அறிவைப்பெறும்; அங்ஙனமே ஆறறிவுள்ளமக்களும் ஏனையஐந்துவாயிலும் அடைப்புண்டிருக்கும்பொழுது மனம் என்னும் ஆறுவதுவாயிலினால் அறிவினைப் பெறுதற்குரியர். இவ்வறிவும் ஏனைய வாயில்களினாற்பெறுதல் கூடாத அறிவாயிருத்தல்வேண்டும். நித்திரையிற்காணுகிற கனவினில், கண்முதலிய ஏனையவாயில்களாற் பெறப்பட்டு நினைப்பிற் பதிந்துகிடந்த தோற்றங்களே மீண்டும் புலப்படுகின்றனவாதலால் அங்ஙனம் பெறுமறிவு ஏனைய வாயில்களாற்பெறாத புது அறிவு ஆகாது. இவ்வாறு முந்திய தோற்றங்களை நினைத்திருக்கும் நினைப்பும், ஒரு தோற்றத்தோடு பிறிதொன்றனை ஒப்பிட்டுப்பார்க்கு மாற்றலும், பயம், உவகை, வெகுளி முதலியனவும் விலங்கினங்களுக்குமுண்டு. ஆசிரியன் மனவுணர்வினைத் தனித்த ஒருவாயிலாகச் சொல்லுதலால் ஐம்பொறியுணர்வுக்கு நிலைக்களனாகவிருப்பது மனம் என்று வரைவிலக்கணஞ்செய்துகொண்ட பிற்காலத்தார் "மனம்" என்னும் மொழிக்குக் கொண்ட கருத்தும் ஆசிரியன்கொண்டகருத்தும் தம்முள் வேறுபாடுடையனவாம்.

இங்ஙனம் ஆராயுங்கால் "மனம்" என்னும் மொழியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது ஆசிரியர் தொல்காப்பியனார்கொண்ட கருத்தினை யுள்ளவாறுணர்த்துவதாயின் "Intuitive faculty" என மொழிபெயர்ப்பது ஒருவாறு தக்கதாகும். ஏனைய ஐந்துவாயிலும் "Perceptive faculties" என அடங்குவ,

மேற்காட்டிய குறிப்புக்களுக்கியைய இரசாயனநூலுக்குரிய சில மொழிகளை ஆக்கிக்கொண்டமரபினைச் சுருக்கமாகச்சொல்லுவாம். இரசம்- பாதரசம் ; அயனம்- பிறப்பு. முன்னாளிற் பொன்னைப் பிறப்பிக்கலாமென முயன்ற இந்திய, அராபிய, ஐரோப்பிய இரசவாதிகள் அது இரசத்தைக் கட்டுதலினாலாகுமெனப் பலபொருள்களை ஒருங்குசேர்த்துக் காய்ச்சுவதுங் கலப்பதுஞ் செய்ததனாற்கண்ட முடிபுகள் பின்னாளிற் றொகுத்து வகுத்து நூலாயினமையால் அந்நூல் இரசாயனநூல் எனப்பட்டது. "Elements," "Mixtures," "Compounds" என்னுஞ் சொற்களை முறையே தனிப்பொருள், சலவைப்பொருள், கூட்டப்பொருள் என்று வழங்கலாகும். தனிப்பொருள்கள் எண்பதின்மேற்பட்ட தொகையின. இவற்றுட் டமிழ்வழக்கிலுள்ளன பொன் (Gold), வெள்ளி (Silver) செம்பு (Copper), இரும்பு (Iron), ஈயம் (Lead), கரி (Carbon), சுண்ணமூலம் (Calcium)-சுண்ணம் "சுடு" என்னும் வினையடியினின்றும் பிறந்தது. வங்கம் (Tin), நாகம் (Zinc), தீமுறுவல் (Phosphorus)-இதனைச் சுருக்கநோக்கி "முளி"யென்று வழங்குவாம். ரசம் (Mercury), கந்தகம், சிலை (Sulphur), பாஷாணம், விஷம் (Arsenic)என்பன. ஏனைய தனிப்பொருள்களுக்குப் பெயர்கோள்வதற்கு முன் வைத்தியநூல்களை ஆராய்ந்து பெறக்கூடியசொற்களைப் பெற்றுக் கொள்ளுதல்வேண்டும். ஒவ்வொரு தனிப்பொருளுக்கும் ஒவ்வொரு எழுத்து அறிகுறியாய்நிற்றல் நன்று. ஆதலால் இனி இட்டுக்கொள்ளும் மொழிகள் வேறுவேறு எழுத்துக்களை முதனிலையாகக்கொண்டுநிற்றல் நன்று. சின்னஞ்சிறிய சொற்களை ஆக்கிக்கொள்ளுதல் அழகு. கண்ணிற்றீட்டும் மையிலுள்ள தனிப்பொருளாகிய "Antimony" என்னும் பதத்தை "மை" என்பாம். "நிறம்" என்னும் பொருளினதாகிய யவனமொழித் தாதுவினின்றுபிறந்த "Chlorine" என்னும் பதத்தை "நிறம்"என்பாம். களிமண்ணினின்றுபெறும் "Aluminium" "தலம்" எனப்படும். பாரத்தைக்குறிக்கும் யவனமொழித்தாதுவி

னின்றும் பிறந்த "Barium" "பாரம்" எனப்படும். சூரியனைக்குறிக்கும் பவனமொழித்தாதுவினின்று பிறந்த "Helium" என்பதனை "எல்" என்பாம்.-Barium, Helium என்பவற்றுக்கும் "பாரம்" "எல்" என்பவற்றுக்கும் பொருட்பொருத்தத்தோடு ஒலிப்பொருத்தமுமுண்டு.—லவண மூலமாகிய "Sodium" என்பதனை "லவம்" என்பாம். பவனத்திலுள்ள இரண்டுதனிப்பொருள்களாகிய "Oxygen", "Nitrogen" என்பன அறிவும், உடலும்போன்றிருத்தலால் முறையே "மதி", "சடம்" என்றும், நீரின் மூலப்பொருளாகிய "Hydrogen" என்பதை நீரைக்குறிக்கும் "அம்பு" என்னும் மொழியின் பாகமாகிய அம் என்றும் குறியீடுசெய்வாம். வைக்கோல்நிறமாகிய "Fluorine" என்னும்பொருளை "வை" என்பாம். பிறவும் இவ்வாறே. நாம் இட்டுக்கொண்ட பெயர்கள் யாவும் வேறுவேறு முதனிலையையுடையன. ஆதலினால் ஒரு தனிப்பொருளைக் குறிப்பதற்கு ஒரு எழுத்தையே உபயோகித்தல்கூடும். இனி, மை, வை, மதி, சடம், நிறம் என்னாது அன்ரிமணி, வ்ளூஓறின், ஆக்சிஜன், நைத்ரஜன், க்ளோறின் என்று ஆரவாரமொழிகளாற் சொல்லின் அவை தமிழுமாகாது, ஆங்கிலமுமாகாது, மாணுக்கனுடைய நாவுக்கு இடர்விளைப்பனவாய் முடியும். நீண்டசொற்களைக் கண்முன்வரவொட்டாது துரத்தவேண்டும். ஹிந்தி, வங்காளி யாகியபாஷைகளில் விஞ்ஞான பரிபாஷையெழுதியவர்கள் நீண்டசொற்கள் சிலவற்றையுபயோகிக்க அவை வழக்குக்கு வந்தில என்னும் முறையீடு நம் செவிக் கெட்டியது. ஆதலால் அழகுபொருந்திய பைந்தமிழிற் சொற்களையமைக்கவிரும்பும் நாமும் சிறியசொற்களைத் தெரிந்தெடுத்தாள்வோம். சிறியசொற்களின் ஆற்றலை மேல்வருவனவற்றாலும் உணர்ந்துகொள்ளலாம். "Oxides" என்னும் வகுப்புப்பொருள்களைப் பொன்மதி (Gold Oxide), வெண்மதி (Silver Oxide), செம்மதி (Copper Oxide), கரிமதி, சிலைமதி, வங்கமதி, நாகமதி, ஈயமதி, விஷமதி, முளிமதி, சடமதி என்று இவ்வாறு பெயரிட்டாளுதல் எவ்வளவு அழகாகவிருக்கின்றது. "Hydrogen" என்பதை "அம்" என்று

குறியிட்டோமாதலால் (O H) கொண்ட "Hydroxides" என்னும் பதார்த்தங்களே "மதியம்" என்னும் விகுதிதந்து வழங்கலாகும். அவை 'பொன்மதியம்' வெண்மதியம், நாகமதியம், வங்கமதியம், தலமதியம், லவமதியம் எனவருவன. பொன்மதியம் என்பதற்குப்பதிலாக வடமொழியும் பிறமொழியுங்கலந்து "சுவர்ண ஹைதராக்சிஜம்" என்றால் அது "திலகாஷ்டமகிஷபந்தனம்"போல ஆரவாரச் சொல்லாய்முடியும். "Hydrogen" என்னும் ஒரு பதார்த்தத்திற்குமாத்திரம் "அம்"என்னும் மொழியோடு அகர முதனிலையையேயுடைய "அணி" என்னும் மொழியையும் உபயோகிப்பின், (H o H) அணிமதியம், (HCL)அணிநிறம் என்றாகும்.

"Acids", "Alkalis" என்னும் இருவகுப்புப்பொருளேயும் முறையே "காடி", "காரம்" எனவழங்குதல் கூடும். மேற்குறித்த சொற்களைப் பிரயோகித்துக்காட்டுவோம்.

காடியுங் காரமுஞ்சேர்வுழி உப்பும் நீரும் பிறக்கும் என்பது இரசாயனநூன்முடிபு. பெருவழக்காகப்பாவிக்கப்படுகிற காடிகள், கரிக்காடி Carbonic Acid) சிலேக்காடி (Sulphuric Acid) சடக்காடி (Nitric Acid), நிறக்காடி (Chloric Acid), அணிநிறக்காடி (Hydrochloric Acid) என்பனவாம். பெருவழக்கிலுள்ள காரங்கள் லவக்காரம் (Na O H) உரக்காரம் (KOH) சுண்ணக்காரம், ஈயக்காரம் முதலியன.

$$\text{லமஅ} + \text{அநி} = \text{லநி} + \text{அ}_2\text{ம.}$$

என்னுங் குறியீட்டினல் விளங்கக்கிடப்பது எதுவென ஆராய்வாம். இக்குறியீட்டை "லவ்வொன்று மவ்வொன்று அவ்வொன்று உடன் அவ்வொன்று நிய்யொன்று சமம்; லவ்வொன்று நிய்யொன்றுடன் அவ்விரண்டு மவ்வொன்று" என்று வாசிப்பாம். ல=லவம், ம=மதி, அ=அம், அணி, நி=நிறம் ஆதலால் லவமதியமும் அணிநிறமுஞ்சேரின் லவநிறமும் அணிமதியமும் பிறக்குமென்பது பொருள். அதாவது லவக்காரமும் அணிநிறக்காடியுஞ்சேர லவநிறமும் அணிமதியமும் பிறக்குமென்பது. லவநிறம் இரசாயனப்பெயர்; கறியுப்புப் பொதுவழக்கு.

சு(ம அ)$_2$ + க ம$_2$ = சு க ம$_3$ + அ$_2$ ம

என்பதை இங்ஙனமே ஆராயிற் சுண்ணக்காரமுங் கரிக்காடியுஞ்சேர்வுழி சுண்ணக்கரிமதி (சுண்ணக்கல் பொதுப்பெயர்)யும் நீருமாகும் என்பது பெறப்படும். இங்ஙனம் தமிழ் எழுத்துக்களாற் குறியீடுசெய்வதேயன்றி மொழிபெயர்ப்புநூலினுள் ஆங்கிலமொழியெழுத்துக்களை மேலும் மேலும் இழுத்துக் கொண்டிருப்பது தகுதியாகாது.

ஒளிநூலுக்குரிய சில சொற்களை யாராய்வாம். "Plane" "Spherical" என்னும் சொற்களை "மட்டம்" "வட்டம்" என்று கொள்வாம் Mirror=கண்ணுடி; பரிபாடலினுள்ளும் "வான்றுகள்மாசறக் கண்ணடிவயக்கி" என்றூர். கண்ணுடியென்னுஞ்சொல்லைப் பொதுவழக்கில் "Glass" என்பர். இருவேறுபொருளுக்கு ஒருசொல்லைக் குறியீடு செய்தாளுதல் மலைவுறுதலுக்கு இடமாகுமாதலால் "Glass"என்பதனைப் "படிகம்"என்று கொள்வாம். ஆகவே மட்டக்கண்ணுடி(Plane Mirror), மட்டப்படிகம் (Spherical Mirror), மட்டப்படிகம் (Rectangular Prism) முக்கோணப்படிகம் (Triangular Prism) பலகோணப்படிகம் (Poly Gonal Prism) எனவரும்.— Poly - பல; Gonos - கோணம். இவை தமிழ்மொழிகள் யவனமொழியிற்சென்று வழங்கிய தற்கு உதாரணமாகும். கோணம் என்பது கோடு என்னும் வினையடியினின்று பிறந்தது.—வட்டப்படிகம் (Lens) "Concave" "Convex" என்னும் மொழிகளை உள்வட்டம், புறவட்டம் என்று கொள்ளுதல் கூடும். "Ray" என்னும் மொழியைக் கதிர் என்று கொள்ளலாம். Pencil, கதிர்த்திரள்; Converging Pencil, குவிகதிர்த்திரள்; Diverging Pencil; விரிகதிர்த்திரள்; Parallel Pencil, நேர்கதிர்த்திரள்; Reflection, கதிரெழுச்சி; Refraction, கதிர்ப்பாய்ச்சல்; Incident Ray, விழுங்கதிர்; Reflected Ray, எழுங்கதிர்; Refracted Ray, பாய்கதிர்; Image, படிமம் (இது படு என்னும் பகுதியிலிருந்துவந்த தமிழ்மொழி; தொல்லாசிரியர் கண்ணுடியைப் படிமக்கலம்

என்றதை நோக்குக). Real Image, மெய்ப்படிமம், Virtual Image பொய்ப்படிமம் (உருவம் என்னும் சொல்லை Figure என்னும் ஆங்கில மொழியை யொத்ததாகக் கொள்ளலாம்) Focus மையம்; Centre நடு என்று இவ்வாறு கொள்ளலாகும்.

பௌதிகசாஸ்திரத்தின்பாலவாகிய ஏனைய சொற்களனைத்தையும் மேற்காட்டிய குறிப்புக்களுக்கமைய ஆக்கிக்கொள்ளுதல் கூடும். தாவர சாஸ்திரத்துக்குவேண்டிய சொற்கள்பல பத்துப்பாட்டிலொன்றாகிய குறிஞ்சிப்பாட்டிற் செறிந்துகிடக்கின்றன. இரசாயனமொழிகளும், மூலிகைகளின்பெயரும் வைத்தியநூல்களிற் காணப்படுவன; மன நூலுக்குரியமொழிகள் சித்தாந்தசாஸ்திரங்களிற் காணப்படுவன; இரேகாகணிதத்துக்குரிய மொழிகள்பல நிகண்டு வடிவுபற்றியபெயர்த் தொகுதியுட்காணப்படுவன; வடமொழி நூல்களுட் சாங்கியம், வைசேடிகம், நியாயம், யோகம் என்னும் வஸ்துநிச்சயநூல்களுள்ளும், அர்த்த சாஸ்திர நூல்களுள்ளும் வராஹமிஹிரம் முதலிய வானநூல்களுள்ளும் பல மொழிகள் உள்ளன. தமிழ்மொழி, வடமொழி பிறமொழி என்னும் முறையிற் சொற்களைத் தேடி யாராய்ந்தமைத்துக்கொள்ளுதல் நலமாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை.

பண்டித-மயில்வாகனன்
B. Sc. (Lond)

உ

டால்டன்கல்விமுறை.

மேனாட்டார் எழுதும் நூல்களைத் தமிழர் கற்பதில்லையென்றும், அவர்கள் நூல்களில் இன்னதுசொல்லியிருக்கிறதென்றுகூடப் பொதுவாகக்கவனிப்பதில்லையென்றும் அலருரைநிகழ்கின்றது. ஆங்கிலபாஷாவிற்பன்னர்களும் மேதாவிகளும் இதுவிடயத்திற் கவனம் செலுத்துவார்களாயின் இக்குறை வெகுசீக்கிரத்தில் நீங்குமென்பதில் ஐயமில்லை. யான் வாசித்த Education on the Dalton Plan என்னும் நூலைக் கூடியவரை சுருக்கி எழுதித் தமிழ்நாட்டுப் பழையமுறையோடு ஒப்பிடுவது ஒருவாறுநலமாகுமென்றெண்ணி ஈண்டு எழுதலானேன். அதனிற் குறைகளிருக்குமாயின், குற்றங் களைந்து குறைபெய்து முடித்துக் கொள்ள அறிஞர்களைவேண்டிக்கொள்ளுகிறேன்.

இக்கல்விமுறையானது முதன்முதல் அமெரிக்கா ஐக்கியநாட்டு மாதான ஏலன்பார்க்ஹேர்ஸ்ட் (Helen Parkhurst) டால் முதன்முதற் குறிப்பிடப்பட்டு அமெரிக்காவிலுள்ள டால்டன் என்னுமூரில் கையாளப்பட்டதால் இதற்கு டால்டன் (Dalton) முறை என்று பெயரிடப்பட்டது. இம்முறையானது அமெரிக்காவிற் பலஇடங்களிலும் இங்கிலாந்திற் சிலஇடங்களிலும் கையாளப்பட்டுப் பெருநன்மைகளைத் தருகின்றதென்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. இந்நாட்டிலும் அக்கல்விமுறையை ஏற்படுத்துவது குணத்தைத் தருமோவென்று சிலர் எண்ணுகின்றனர். அதன் வன்மை மென்மைகளைப் பெரியோர்களே அறிந்துகொள்வான்வேண்டுகிறேன். இனி ஏலன்பார்க் ஹேர்ஸ்டு கூறியபடி அம்முறை வருமாறு:—

நான் உபாத்திமைத்தொழிலில் முதன்முதலாக ஒரு நாட்டுப்புறத்துப் பள்ளிக்கூடத்தி லமர்ந்தேன். அங்கே நாற்பதுபிள்ளைகள் எட்டு வகுப்பாக வகுக்கப்பட்டிருந்தார்கள். நான் ஒருவகுப்பைக் கவனிக்கும்போது மிகுதியான ஏழுவகுப்பும் தமக்குத்தாமே வேலைசெய்யும்படிவிட வேண்டிய தவசியமாயிற்று. அதன்பொருட்டு என்னசெய்யலாமென யோசித்தேன். பிள்ளைகளை அவர்கள் கல்விக்குத்தக்கவாறுபிரித்து மாணுக்கர்களிற் பெரியோர்களைச் சிறியவர்களுக்குப் போதிக்கும்படி ஏற்

படுத்தினேன். அது சிறிது சௌக்கியமாயிருந்தாலும் எனக்குத்திருப்தியைக் கொடுக்கவில்லை. இவ்வாறு இருக்கையில் யான்விடுமுறையின்போது ஒருநாள் புகைரதத்திற் பிரயாணம் போகநேர்ந்தது. அக்காலை என்முன்னிருந்த ஒருவர் பேசத்தொடங்கியபொழுது புகைவண்டியில் அங்குக் கூடியிருந்த ஒருகூட்டத்தைக் காண்பித்து இது தற்கால நாகரிக ஏற்பாடாயினும் இன்னும் இம்மனிதர்களை அவர்களிஷ்டப்படிவிடவில்லை' இவர்களை அவர்களிஷ்டப்படிவிட்டிருப்பார்களானால் இவ்வேலைகளை வெகுசிக்கிரத்தில் முடித்திருப்பார்கள் என்றார். ஏன் அப்படி விடப்படுவதில்லை என்றேன். அவர் இவர்களுக்குத் தலைவன் ஒருவன் இருக்கிறான். அவன்புத்திக்கு எட்டியதைத்தான் இவர்கள் செய்யவேண்டும். அவர்களை இவன் மேய்த்துவருகிறான் என்றார். யான் ஏன் நீங்கள் இவர்களையும் கலந்து செய்யக்கூடாது என்றேன். இப்பொழுது அப்படிப்பட்ட தலைவர் ஒருவர் ஏற்பட்டிருக்கிறார். அவ்விதம் சீக்கிரம் நடைபெறுமென்றார். இதுவே என்னையும் கல்விச்சீர்திருத்தத்திலும் அப்படிப்பட்டஐக்கிய ஏற்பாடுசெய்யமுடியுமாவென்று யோசனைசெய்யத் தூண்டிற்று. அநேகவிதமாக யுக்திசெய்து கடைசியாக இந்தமுறை மேலானதென்று கண்டேன். இதனை யாராய்ச்சிசெய்யப் போதியசாவகாசமில்லாமற்போயிற்று. ஆயினும், யான் சிறுகச்சிறுக உண்டாக்கிய மாறுதல்களில் ஏற்பட்ட பலனைக் கண்ட பெற்றோர்களும், மேலதிகாரிகளும் என்னை மேலானவேலைகளுக்கு மாற்றி முடிவில் உயர்தரக்கலாசாலைப் போதகாசிரியராகச் செய்தனர். அக்காலத்தில் எட்கர்ஜேம்ஸ் ஸ்விப்டு (Swift) என்பவர் எழுதிய திருத்தப்படும் மனம்; அறிவுவிருத்தியில் ஒருகூறு (Mind in the Making; A study in Mental Development) என்ற நூல் கிடைத்தது. அதனை வாசிக்கையில், பின்வரும் வாக்கியமொன்று காணப்பட்டது. "மாணவர்களோடு வேலைசெய்து அவர்களுக்குக் கல்வியில் உற்சாகத்தையுண்டாக்கி அதனில் அவர்களை முழுகச்செய்து அதனால் ஏற்பட்ட அறிவை விருத்திசெய்து அதைச் சுத்தம்செய்தல் நல்லமுறையாம். இப்பொழுது கற்பிக்கும் முறை மத்தியகாலமுறையாகும். அந்தமுறையின் அவசியம் இப்பொழுது இல்லாவிடினும் இதுவே மேலாடிவருகிறது. இந்த மத்தியகாலக் கற்குவியல்களை நீக்க உபாத்திமார்களின் அறிவை விருத்திசெய்வதே முதல்வேலையாகும். பிறகு அவர்கள் மாணவர்களுடைய மனோபாவத்தைக் கவனிக்கக் கலா

சாலை ஒரு ஆராய்ச்சிச்சாலையாகும்; அவர்கள் சக்தி கைத்தொழிலபி விருத்தியோடு நிற்காது. அக்கம்பக்கத்தில் நடப்பவைகளைக் கவனித்து அதனால் உண்டாகும் முயற்சி சரிவரக் கவனிக்கப்படவில்லை. மாணவர்களுடையஅறிவைப் பெருக்குவதில் உபாத்தியாயர் அதிகமுயற்சி எடுத்துக்கொள்ளவிரும்புகிறார். எந்தமாணவனை உபயோகமில்லையென்று உபாத்தியாயர் குறைகூறுகிறாரோ அவனே பெரியோனாகலாம்" என்று இவ்விதமாக எழுதியிருப்பதை வாசித்தபிறகு யான் அதைப் பலரிடத்திலும் காண்பித்தேன். இப்படிப் பலநாள்கழிந்தபிறகு துணிந்து வேலைசெய்யஆரம்பிக்கப் பிரயத்தனப்படுகையில், போதனாமுறைச்சாலை உபாத்தியாயினி ஒருத்தி என்முறையில் நம்பிக்கையில்லாவிடினும் ஒத்துழைக்கத் தீர்மானித்தாள். அதன்மேல், கொஞ்சம்கொஞ்சமாக மாறுதல்கள்செய்துவந்தேன். இதன் நடுவில் 1914ல் மாண்டஸோரிப்பேரறிவாட்டியின் முறைகளைக் கற்க இதாலிதேசம் சென்றேன். அங்கும் என் நண்பர்களோடு என்முறைகளை யாராய்ந்துவந்தேன். திரும்ப அமெரிக்கா தேசம்வந்து மாண்டஸோரிப் பேரறிவாட்டியின் உதவியாக இரண்டு வருடம் வேலைபார்த்து அதையும் விட்டு முடிவில் 1919-ம் ஆண்டு முதுவேனிற்பருவத்தில் என்முறையை மர்ரேகிரேன் (Murray crane) பெருமாட்டியிடம் தெரிவித்தேன். அவர் அதை அங்கீகரித்து முதலில், பெர்க்ஷயர் கூன்பாடசாலையில் பரீட்சிக்க அநுமதியளித்தனர். அப்பாடசாலை விருத்தியடைந்ததைக் கண்ட அப்பெருமாட்டி தன் சுதேசமான மாஸசூஸட்ஸைச் சார்ந்த டால்டனிலுள்ள மாணவர்பாடசாலையில் இம்முறையை ஏற்படுத்தினர். அக்காலத்திலேதான் இங்கிலாந்திலே கல்விஅபிவிருத்திக்காக உழைத்த மிஸ் பெல்ரென்னி என்பார் இப்பள்ளியைப் பார்வையிட வந்தார். அவ்வம்மையார் இதனைக் கண்ணுற்று இதன் மேம்பாட்டையும் குறித்துக்கொண்டு தமது ஜன்ம தேசத்திலே வேலைசெய்ய ஆரம்பித்தார். இதற்கு ஆராய்ச்சிச்சாலை என்ற பெயர் பொருந்துமாறில்லை என்று அவ்வம்மையார் கூறினார்களாயினும் எனக்கு அதனிடத்துள்ள பற்றால் அதனைவிடச் சம்மதியாமல் டால்டன்ஆராய்ச்சிச்சாலைமுறை Dalton laboratory plan என மாற்ற இசைந்தேன். இதனினின்றும் இம்முறை வெகுதூரம் பரவலாயிற்று.

முறைவிவரம்

பொதுப்படப் பேசுவோமாயின், பழையமுறை போதனைக்கும் புதியமுறை பழக்கத்திற்குமாக இருக்கின்றன. என்முறையோ இவ்விரண்டினையும் சேர்த்து ஒருவழிப்படுத்துவது. போதனை அல்லது அறிவு உண்டாயின், பழக்கமுண்டாகுமென்பதுண்டெனினும், அது பள்ளியை விட்டு வெளிவந்தபிறகேயாம். அப்படியில்லாமல், பள்ளியிலேயே இது உண்டாகுமாயின் நன்மையைத் தருமென்பேன். இதற்கு முக்கியம் சுயேச்சை. சுயேச்சையைக்கண்ட மாணவன் தன்னந்தனியேவிடப்பட்டு ஒழுங்குமீறுவதென்று பொருளல்ல. தன் இஷ்டப்படி நடப்பது சுயேச்சையென்றாலும், இம்முறைப்படி கொடுபடும் சுயேச்சை மாணவனது முயற்சியைத் தட்டியெழுப்பி அவனைக் கல்வியிற் புத்தியைச் செலுத்தும்படி செய்வது. இதனால் அவனதுபுத்திக்குச் சுயேச்சையும் நன்னடக்கையிற் சுயேச்சையுந்தான் உண்டாகும். ஜனசமூகத்திற்கு விரோதமான காரியங்களெல்லாம் பிழையானவழியில் திருப்பப்பட்ட முயற்சியால் உண்டாவது.

இந்தச் சுயேச்சை ஒருவகுப்புமாணுக்கரிடத்திலாவது உபாத்தியாயரிடத்திலாவது தனித்தனி இருக்கக்கூடாது. அது கலாசாலை முழுவதும் பரவவேண்டும். மாணுக்கனுக்கு உபாத்தியாயரிடம் எப்படிப்போய்க் கேட்பது என்ற அச்சம் விலகவேண்டும். இம்முறையில், சுயேச்சைதான் முக்கியமானவிடயம். அதாவது ஒருகலையில் ஊக்கமுண்டாகுமானால் அதனில் முன்னேறிச்செல்ல விடுவதாம். அப்படி மாணவனைவிடுவதால், அவன்கல்வி அதிதீவிரமாயிருக்கும். அவனறிவு அதனைப்பற்றிக்கொண்டுமேற்செல்லும். அவ்வாறில்லாமல் அவன் ஊக்கங்கொள்ளுஞ் சமயத்தில் அவனைத் திடீரென்றுநிறுத்தி வேறுதுறையில் திருப்புவோமானால் இதுவுங்கெட்டு அதுவுங்கெட்டுத் திண்டாடுவான். இம்முறைப்படி மணி அடிப்பதில்லை. கால ஏற்பாடென்னும் இராக்கதன் மறைகிறான். ஏனெனில் ஒருவனை அவனவன் சக்திக்குத்தக்கவாறு பயிலவிடாதவரையில் அவன் ஒன்றும் பயிலுவதில்லை. இதனால்தான் சுயேச்சை கொடுக்கப்படுகிறது.

இரண்டாவது ஒற்றுமை: அல்லது கூடி ஒத்துழைத்தல். கல்வியும் ஜனங்கமும் என்னுநூலில் அதனாசிரியர் ஜனங்கக்கல்வியென்

பது ஒருவன் தன்னைச்சேர்ந்த கூட்டத்தோடு தானும் முற்றுப்பெற்றவனென்பதற்கன்று; அக் கலாசாலைமுழுவதும் ஒற்றுமைப்படவேண்டுமென்பதே என்பர். அது எவ்விதம் உண்டாகுமெனின் மாணவர்கள் ஒருகலையைப் பயிலும்போது அவர்களுடன் பயில்பவன் மந்தனுயினும், தீவிரபுத்தியுடையனுயினும் அவனைச் சேர்த்துச்செல்வார்களேயன்றிக் கைவிடமாட்டார்கள்.

பழையஏற்பாட்டின்படி ஒருமாணவன் தன்வகுப்பினேடுசேர்ந்துஞ் செல்வன்; சோாமலு மிருப்பன், அவன் பாடஒழுங்கில் (Curriculam) கட்டுப்பட்டவன். இதனால் இவன் ஜனசமூகத்தோடு (Social) ஒத்து வருபவனுகக்காட்டினுலும் எவ்வளவுதூரம் சமூகத்தில் உறவுகொள்ள வேண்டுமோ அவ்வளவு கொள்ளாமற்போகின்ருன்.

சமூகஉறவு என்பது ஒருவரோடொருவர் வார்த்தையாடிச் செல்வதென்று பொருளல்ல; அதைவிடமேலானது ஒருவருடன் ஒருவர் கலந்து உழைப்பது. இப்படிக் கலாசாலையிலேயே ஒருவருடன் ஒருவர் சேர்ந்து பழகினுலன்றிக் கலாசாலையைவிட்டு வெளியேறியபிறகு ஒத்துழைத்துத் தேசத்திற்கு நன்மைசெய்ய இயலாது. இந்த டால்டன்முறையால் அதற்குற்ற சாதனங்கள் ஏற்படுகின்றன. அவனவன் தகுதிக்கேற்ப உறவு ஏற்படுகிறது. சமூகவாழ்வுக்குப் புறம்பானவன் அப்பொழுதே கண்டிக்கப்படுகிருன். கண்டனை தண்டனைமுதலியவைகள் மாணுக்கர்களுக்குள்ளேயே ஏற்படுகின்றன இவைகளுக்குக் கலாசாலைகளில் உபாத்தியாயர்கள் ஒழுங்குகள் ஏற்படுத்த இயலாது. மாணவர்கள் ஒருவரோடொருவர் கலந்து நெருங்கிப் பழகும்படி செய்யவேண்டும். மேலும், ஆசிரியனும் மாணவனும் பிரிந்துநிற்கக்கூடாது. வெளியிற் காணும்போது அதிக அன்போடு நடத்தும் ஆசிரியர்கள் கலாசாலையில் நுழைந்ததும் வேருெருமேற்போர்வை போர்த்து அதிகாரம்செய்வதை நாமெல்லோரும் அறிவோம். அவ்விதம் செய்யாவிடில் தமது மானம் அழிந்துவிடுமென்று பலர் எண்ணுகின்றனர். அது பிழையான எண்ணம். அப்படிச்செய்வதால் மாணவனுடைய வலுக் குன்றிக் கட்டுப்பாட்டினின்றும் தவறுகிருன். இதுபோலவே மாணவனுக்குவிளங்காத பலவகை எண்களையும் பிறவற்றையும் செய்யச்சொல்லும்போது அவன் அதிகக்கவலுற்றுக் கன்றுகிருன். டால்டன் முறைப்படி அவனுக்கு ஒன்றில்

எட்டியமட்டிற்செய்து மிகுதியைக் கொஞ்சம்கொஞ்சமாகச் செய்யத் தூண்டப்படுகிறான். இதற்கு அடிப்படையாக மாணவன் முதலிற் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்களில் ஓராண்டில் இவ்வளவுதூரம் முன்னேற வேண்டுமென அறிவிக்கப்படுகிறான். அவ்வாறுதெரிந்துகொண்ட வுடனே அம்முடிவை அடையத்தக்க சாதனங்கள் எவை என்று நாடு கிறான். சாதாரணமாக ஒன்றைப் பற்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியை நாடுகின்றனர். அது மனித இயற்கை. மாணவனும் அவ்விதமே தனது கடமையைமுடிக்கப்பலவழிகளை ஆராய்ந்து ஒன்றைத் தேடியெடுத்துவிடுகிறான். அப்படி அவன் ஆராயும்பொழுது அவனது தோழர்கள் அவனுக்கு உதவிபுரிகின்றனர். இவ்விதமாகத் தான் எடுத் துக்கொண்ட கருமத்தைச் செய்துவிடுகிறான். இதுதான் கல்வி. இந்த அறிவைத் தனது மனோதிடத்தாலும் கூட்டுறவாலும் வளர்க்கிறான். இப்பொழுது அவன் பயிலுமிடம் கலாசாலையாவதில்லை. வாழ்நாளா கிறது. எமெர்ஸன் சொல்லுவதாவது :—

"கல்வியின்ரகசியம் மாணவனைநடத்தும் முறையிலிருக்கிறது. அவன் என்ன பயிலவேண்டும்; யாதுசெய்யவேண்டுமென்பது உமது கட்டளையல்ல. அது முன்னரே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனுண் மையை மாணவனே அறிவான். நீர் அவனை அதிகாரஞ்செய்வதாலும் கட்டளையிடுவதாலும் அவன் தனது நோக்கத்தினின்று விலக்கப்பட்டுக் கேடுறுகிறான். சிறுவனைக் கௌரவியும். கடவுளின் அமைப்பைக் கூர்ந்து பாரும். இயற்கைவிநோதம் ஒருபொருளின் உவமானங்களை ஒரு தடவை சொல்ல விரும்புகிறதேயன்றிப் பன்னிப்பன்னிச் சொல்லவிரும்ப வில்லை. சிறுவனைக் கௌரவி; இருந்தாலும் அவனதுபெற்றோருக்கு அதிக இடம் கொடாதே. அவனது ஏகாந்தத்தில் பிரவேசிக்காதே."

"நான் இவ்விதமாகச்சொல்வதற்கு எதிராக நீர் இவ்விதமாகச் சிறு வனது ஒழுங்கைக் கைவிட்டுவிடுவீரா; இச் சின்னஞ்சிறுவனை அவனது இஷ்டப்பிரகாரம் ஏதேச்சையாகவிடுவதைச் சிறுவனதுமனோநிலையின் கௌரவம் என்பீரா? என்ற எதிரொலியைக் கேட்கிறேன். என்னுடைய விடை, சிறுவனைக் கௌரவி; கடைசிவரையில் அவனை விடு; ஆயினும், உனது கௌரவத்தையும் இழக்காதே; அவனது மனோபாவத்திற்குத் தோழமை கொள்; தோழனுக்குத்தோழனாயிரு; அவனதுநன்னடக்கை

யைவிரும்பு; ஆயினும், அவன்கேட்டை அவமதி; அவன் தான் செய்வது நியாயமென்று விவகரித்துப் பக்கத்திலுள்ளாரைச் சான்றுக் கழைப்பான். தன்கருத்தை வெளியிடக்கூடியமொழிகளுக்கும் உரைநடைக்குந் தடுமாறி இந்த ஊரில் தன்னை அறிய ஒருவருமில்லையெனினும் வேறு ஏதாவது ஒரு ஊரில் யாராவது ஒருவர் இருப்பரென்றெண்ணுவான்; இவ்விதமாகத் திருப்தியான எண்ணத்துடன் பட்டினங்களிலும் நாடுகளிலும் காடுகளிலும் அலைந்து திரிவான். அவன் நன்மை தீமையான பேச்சுக்களோடும் நல்லார் பொல்லாரோடும் இணங்கட்டும். அது தானே திருந்தும். அது முடிவில் உண்மையாளரது கூட்டத்திற் சேர்க்கும்."

"நாம் மக்களை அவர்கள் எண்ணப்படியும் மனப்பாங்கின்படியும் நடக்கவிடக்கூடாதா? நீ அவனை உன்னைப்போல ஆக்க முயலுகிறாய். நீ ஒருவன் போதும்."

"அல்லதூஉம், மாணவர்களது புத்திக்கூர்மையை, நாமறியாது அவரதுபுத்தியிற் பதிந்துகிடப்பவற்றை நாமறியாத ஒருவழியிற் றிருப்பமுயலுவது முன்னம் யவனர்கள் தங்கள்நாட்டிற் செய்துவைத்திருந்த சிறந்த சிற்பங்களையும் சித்திரங்களையும் துருக்கர் அழித்ததை யொக்கும். அன்றி, பிள்ளைப்பருவத்திருந்தபடியே தானேவளரும் ஆண்மகனை நாம் அடைவோம்; அவர்கள் சிறந்த செய்கைளைச்செய்ய வலுவும் புத்தியுமுடையவர்கள். நாம் அடிக்கடி காணும் வலுவில்லாததேகத்தோடு புத்திகூர்மையுடையவர்களாயிரார்."

"அவர்கள் பொய்யினின்றும் மெய்யை வைத்தியனைப்போல வெகு சீக்கிரத்தில் கண்டுபிடிக்கவல்லவர்கள். அவர்களுனது முகத்திலிருந்தே நீ வாய்திறந்துசொல்ல ஒரேழ்நாண்முன்னரே அறிந்துகொண்டு உதவிசெய்யமுற்படுகின்றனர். அவர்கள் பிழைசெய்வதில்லை; பெரும்பேச்சுப் பேசுவதில்லை யென்றுலும் தமது அனுபவத்தில் நம்பிக்கை கொள்ளுகின்றனர்."

இங்கே எமர்சன் ஆசிரியர் (Emerson) வினோதமாகச் சொல்லியிருப்பதே டால்டன்முறையின் நோக்கம். அது ஒருவழியைக்காட்டுகின்றது; அது தான் கலாசாலையை மாணவர் விரும்பச்செய்யும் நல்வழி என்பது திடமான எண்ணம். அப்படிச்செய்வோமானுற்றான் பயமற்ற

தீர்களை நாம் உண்டாக்கலாம். இம்முறையில், சுயேச்சை ஒரு முக்கிய அம்சமாகையால், முறையை எங்கும் ஒரேவிதமாக அநுசரிக்க ஏற்படுத்தவில்லை. அது நிலைக்குத்தக்கவாறு மாற்றப்படவேண்டும். இதனிற் செய்யவேண்டிய முதற்கடமை எதுவெனின், பிள்ளைகள் தாங்களறிவதற்குத் தடையாயிருப்பவைகளை நீக்கவேண்டுவது. அவனை அவனது ஐயத்தினின்றும் நீக்காவிட்டால் அவன் அந்த ஐயத்தை மறைப்பதிற் சமர்த்தனாகிறான். இதுவரை அவனது அறிவின் மேற்பாகத்தைச் சோதித்தோமே யொழிய அவனது ஆழ்ந்த அறிவு எது என்று சோதித்தோமில்லை. ஆகவே, அவனையே எல்லாவற்றையும் அறிந்துகொள்ளவிடவேண்டும். இதற்கு ஆசிரியர் உதவி வேண்டும். பழைய ஆசிரியர் கடுமுறையை ஆசிரியன்மார் நீக்கிவிட்டுப் புதுச் சட்டை புனையவேண்டும்.

அநுபவமுறை.

இனி, இதை அநுபவத்தில் எப்படிநடத்தவேண்டுமென்று காட்டுவேன். இம்முறையைக் கையாடப் பாடஏற்பாடும், (Curriculam) வகுப்புமுறையும் ஒழியவேண்டும். என்றாலும் இவையிரண்டும் இம்முறையிற் சம்பந்தப்பட்டேநிற்கும். ஒவ்வொரு மாணவனும் இன்ன வகுப்புக்குத் தகுதியுடையவனென்று வகுக்கப்படுவான். அவ் வகுப்புக்கு அதிகமாகப் பயிலுவது இதுவெனவும் இதற்குக்குறைவுபடுதல் தகாதெனவும் ஒரு பாடஏற்பாடு உண்டு. ஆயினும், ஒருவருஷத்துக்கு மாணவன் செய்யவேண்டியவேலை இதுவென்று முன்னரே அறிவிக்கப்படும். அது அவனுக்குக் குத்தகையாகிறது. இப்பிள்ளைகள் வகுப்பிற் சேர்க்கப்படுமுன் ஒரு உறுதிமொழிக் கையெழுத்திடவேண்டும். அது

…………………வகுப்பில் பயிலும் மாணவனாகிய…………………
நான் இந்த…………………பாடங்களைப் பயிலச் சம்மதிக்கிறேன்.

கையெழுத்தும் தேதியும்.

ஒரு வருடத்திற்குப் பாடஏற்பாடாகையால், அப்பாடங்களை, முக்கிய பாடங்கள் என்றும் சாதாரணபாடங்கள் என்றும் பிரிக்கிறோம். முக்கியபாடங்கள், கணிதம், சரித்திரம், பூதபௌதிகசாத்திரம், ஆங்

கிலம், பூகோள ககோளங்கள், அந்நியபாஷைகள் முதலியவை. மற்றவை சாதாரணம். இவைகளை ஒருவருடமுழுவதும் போதிப்பதென்றால் ஒவ்வொன்றிலும் ஒருமாதத்திய இடைவிடாப்படிப்பாகும். ஆகவே அவைகளைப் பகுக்குங்கால் இவ்வளவுதான் பயிலவேண்டுமென நிச்சயமாகிவிடுகிறது. மாணவனிடம் இத்தொகுதியை ஒப்பித்தவுடன் அவன் தான் எந்தப்பாடத்தில் தேர்ந்தவனென்றும், எதிற் குறைவுபட்டவனென்றும் உடனே தெரிந்துகொள்ளுகிறான். குறைந்த பகுப்பில் தன் முழுக்கவனத்தையும் செலுத்த முற்படுவான். எவனுக்கு எக்காலத்தில் ஒருவிஷயத்தில் ஊக்கமுண்டாகிறதோ அவன் அதனைக் கற்பானாயின் அது அவனதுமனதில் நன்குபதியும். ஆயினும், அவனை ஒவ்வொரு மாதத்திற்கு இவ்வளவுதான்செல்லவேண்டும் என்றமுறையைத் தாண்டவிடக்கூடாது. அப்படிவிடுவோமாயின் ஒன்றை அதாவது தனக்குப் பிடித்தபாடத்தைக் கவனிக்கவும் பிடித்தமில்லாததைப் புறக்கணிக்கவும் தலைப்படுவான். ஆகையால் அவன் வேண்டிய ஒவ்வொன்றிலும் சமத்துவமடையும்படியாகக் குறைவாகநிற்கும்பாடத்திற்கு அதிகநேரமும், தேர்ச்சியுடையதற்குக் குறைந்தநேரமும் செலவழிக்கப் பார்க்கவேண்டுமென்றாலும் அவனைக் கட்டாயப்படுத்தக்கூடாது. இதுவிஷயத்தில் ஆசிரியன்மார் வெகுஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சாதாரணமாக அவ்வகுப்புப்பிள்ளைகளை எவ்வளவு கற்கவியலுமோ அவ்வளவுதான் பயிலும்படி விடவேண்டும்.

இனி மாணவர்களைவிட்டுக் கலாசாலையைப்பற்றிப்பேசுவோம். கலாசாலை பலபகுதிகளாகப் பகுக்கப்படவேண்டும். அவைகளில் எந்தப் பாடம் பயில வமைக்கப்பட்டிருக்கிறதோ அந்தப்பாடம் பயில்வதற்குள்ள சகல சாதனங்களும் அமைக்கப்படவேண்டும். அந்தப்பாடத்தில் தேர்ச்சியுடைய ஒருவரே இருந்து கண்காணிக்கவேண்டும். புஸ்தகங்களில் இப்பொழுதுள்ள குறுகியநோக்கமான இதைத்தான் பிள்ளைகள் பயிலலாம்; இதைப் பிள்ளைகள் தொடக்கூடாது; இதுதான் ஆசிரியன்மாரது சொந்தமென்பதை மறந்து அந்த வினாடிவரை ஏற்பட்ட சகல நூல்களையும் எம்மாணவனும் எளிதிற் படிக்கும்படியானவிதமாக அமைக்கப்படல்வேண்டும். மாணவனது அறிவுவளர்ச்சிக்குப் பெருந்தடையாயிருப்பது கால ஏற்பாடு. இது ஒழியவேண்டும். இக் காலவேற்பாட்டை ஏற்படுத்துமுன் தாங்கள்படுங் கஷ்டங்களைக்கூறிய

எத்துணையோ தலைமை ஆசிரியர்களை யறிவேன். அம்மம்மா! அவர்கள் துன்பம் பெரிதே. இவ்வளவுகல்வி பயிலவேண்டுமென்று தீர்மானித்த பின்னர்க் காலவேற்பட்டால் என்னநன்மையுண்டாகும்.

பாடம் பிரித்தல்.

ஆயினும் பாடம்பயிலப் பாடம் எப்படிப் பிரிபடவேண்டுமென்று கவனிப்போம். அதனில்தான் அவன்கல்வி சார்ந்திருக்கிறது. பொதுவாகப் பாடத்தைப் பிரித்துக்காட்டினால் அவன் செய்யவேண்டியவேலை இவ்வளவுதானென்று தெரிந்துகொள்ளத் தகுதியிராது. சரியான பிரிவுக்கு முதற்காரணமாகநிற்பது எழுத்துமூலமாகச் சொல்வதாகும். மாணவன் செய்யவேண்டியது இதுதானெனத் திட்டமாகக் குறித்துவிடுவதே நலம். ஆசிரியர்கள் தங்கட்குப் பாடப்பிரிவை ஏற்படுத்தவில்லையென்பதையும், குறிப்பது மாணவனுக்கு என்பதையும் மனதிலிருத்தி எழுதவேண்டும். எவ்விதமாக அப்பிரிவு ஏற்படவேண்டுமென்றால் அது ஒப்பந்தமேற்ற மாணவன் கல்வியை எளிதிற் பயில ஏற்றதாகவிருக்கவேண்டும். சிறுவர்கட்கு இவ்விதமாக வேலைசெய்வதென்று முதலில் தெரியாது. டால்டன்முறை இதற்காகவே ஏற்பட்டிருப்பதால், சிறுகச்சிறுகப் பாரத்தை ஏற்றவேண்டும். பல்வகைத் திறமை (Versatility), சமயோசிதம், பொது அறிவு இவைகள் ஒப்பந்தமேற்படுந் திறமையைப்பொறுத்து விருத்தியாகும். ஒருபொழுதும் அவன் தகுதிக்கு மேற்போகக்கூடாது. ஒருவகுப்பின் பாடப்பிரிவைச் சிலர்முடித்தும், சிலர்முடிக்காமல் தகுதியற்றவர்களாய் இருப்பின் அந்தவகுப்புக்குக் குறைவானபகுதியொன்றும் தகுதிப்பகுதியொன்றுமாக வகுக்கவேண்டும். நாளடைவில் இம்முறையின் நன்மையால், குறைவுப்பகுதியிலிருப்பவன் தகுதிபெற்றால் நிறைவுப்பகுதிக்கு மாற்றப்படலாம். இவ்விதமாகக் குறைந்த அறிவுடையவனும் முன்னேறுவான்.

முதன்முதலாக மாணவனிடம் ஒரே ஒருமாத அட்டவணையே கொடுபடவேண்டும். அதுவும் 4 வாரமாகப் பிரிபட்டுச் செய்யவேண்டிய வேலைகளின் முதற்குறிப்புடையதாக விருத்தல்வேண்டும். இன்னின்ன வினாக்க ளெழக்கூடுமென்றும், விடையிறுத்த லமையு மெனவும் மாணவன் அறியும்படியாக விருக்கவேண்டும். இவைகட்குப் பொறுப்புநகல்

(Interest Pocket) என்றுபெயர். இவைகள் எழுதப்படும்விதத்திலும் கவனம்செலுத்தவேண்டும். பிள்ளைகளை நீ இன்னின்னது முடிக்கவேண்டுமென்று சொல்வதைவிட, இன்னின்ன நூல்கள்படித்தால் எடுத்த கருமத்திற்கு அநுகூலமாயிருக்குமென்று சொல்லுதல் பொருத்தமாயிருக்கும். இவ்விதமாக ஏற்படும் காலப்பகுதியை உதவியாசிரியனெனக் கூறலாம். இவைகள் முடியுந்தறுவாயில் ஆசிரியர் தன்னிடம் வரும்படி சொன்னல் மேல்நடக்கவேண்டியதைத் தெரிவிப்பதாகக்கூறலாம். இப்பாடங்கள் வகுக்கும்போது கவனிக்கவேண்டியவைகள்.

மனதிலிருத்தவேண்டியவைகள்.

மாதவேலைக்கு முகவுரை.

முதல்வாரம்.

1. விஷயம் (Topic)
2. செய்கைகள் (Problems)
3. எழுத்துவேலை
4. மனனம் (Memory Work)
5. கூட்டுறவும் சம்பாஷணையும்
6. ஆராய்ச்சி (References)
7. சமநிகழ்ச்சி (Equvalents)
8. சம்பந்தமான கல்வி (Bulletin Study)
9. பகுதிக்குறுக்கம் (Departmental Cuts)

இதேமாதிரியாகச் சிலவற்றை நீக்கியும் சேர்த்தும் மற்றவாரங்களுக்கும் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இதன்விரிவாவது :—முகவுரையாவது ஆடம்பரமின்றிச் சாதாரணமாக விஷயம் இன்னதெனவிளங்கும்படி சொல்லுதல்.

1. பெயர் அல்லது விஷயம் :—இதை ஆங்கிலத்தில் டாபிக் (Topic) என்பது. சீனதேசம், மண்ணெண்ணை நளன் என்பன. உதாரணமாகப் 'பூகோளம்' எடுப்போம்.

2. செய்கைகள் :—ஆங்கிலத்தில் பிராபிளம் (Problems) என்பது. இதனில் பலவிஷயங்கள் அடங்கும். அவை படம்வரையும்போது கணக்கிடுதல், பலதேசங்கள்செல்லும்வழி கண்டுபிடித்தல், அந்நிய பாஷையிலிருந்து மொழிபெயர்த்தல் முதலியன.

3. எழுத்துவேலை இது கற்றதையும் கற்கவேண்டியதையும் குறிப்பதாகும்.

4. மனனம்:-எது முக்கியமானதோ அதனை மனனம்செய்து ஞாபகப்படுத்தல்.

5. கூட்டுறவும் சம்பாஷணையும் :-இது ஒருவிஷயத்தைப்பற்றி ஆசிரியரும் பிள்ளைகளும் கூடிப்பேசுதல். அக்காலத்துத்தான் பிள்ளைகள் தங்கள் ஐயங்களை யகற்றித் திரிபின்றிவர அவகாசமாகும்.

6. ஆராய்ச்சி :-இதனில் எடுத்தவிஷயம் சம்பந்தமான புத்தகங்கள் யாவை? அவை எங்கேகிடைக்கப்பெறும்? என்பது முதலான குறிப்புக்களும் விவரங்களும் இருக்கவேண்டும்.

7. சமநிகழ்ச்சி:-இது புதியது; விநோதமானது. ஒருவன் வேலைசெய்தது இவ்வளவெனக் குறித்துக்கொள்வது. அது கிராப் (Graph) முறைப்படி குறித்துக்கொள்வது.

8. பத்திரிகைகள் படித்தலாவது:- எவ்வெப்பொழுது புதிதான விஷயங்கள் பத்திரிகைகளிற் காணப்படுகின்றனவோ அவைகளைக் கவனித்தல்.

9. பகுதிக்குறுக்கமாவது:-ஒரு மாணவன் ஒருபகுதியைச் செவ்வனேசெய்து தகுதியுடையவனுகி மற்றொருபகுதியிலும் திறமையுடையவனுவானெனின் அதற்காகஏற்பட்ட காலத்தையும் குறுக்கிக்காட்டுதல்.

இவைகளுக்கெல்லாம் முதன்மையாகநிற்பது சிறுவர்சிறுமிகளின் மனப்பாங்கையறிதல். அதனை ஆசிரியர்கள் நன்கு அறிவார்களாயின் இவ்வேலை இனிது நடைபெறும்.

இவ்விதமாக இப்புத்தகம் எழுதப்பட்டு முன்னர்க்கூறியபடி அமெரிக்காதேசத்தில் அநேக இடங்களிலும் இங்கிலாந்திற் சிலஇடங்களிலும் கையாளப்பட்டுவருகின்றது. இதுதான் டால்டன்முறையிலுள்ள முக்யாம்சம்.

இனி இதாலிதேசத்து மாண்டஸோரிமுறையைப்பற்றி மற்றொருமுறை எழுதுவேன்.

சோமசுந்தரதேசிகர்.

உடம்படுமெய்.

"இ ஈ ஐவழி யவ்வு மேனை
யுயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்"

என்பது நன்னூற்சூத்திரம். இச்சூத்திரத்தால், இ ஈ ஐ என்னு மூன்றெழுத்துக்களையு மீறாகவுடைய மொழிகள் யகரத்தையும், அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னு மேலெழுத்துக்களையும் ஈறாகவுடையமொழிகள் வகரத்தையும், ஏகாரத்தை யீறாகவுடைய மொழிகள் யகாமும் வகாமுமாகிய இரண்டனையும் உடம்படுமெய்யாகப் பெறுமென்பதாயிற்று. எகரம் மெய்யோடீறாகாமையின் இங்கே ஒழிக்கப்பட்டது. அங்ஙனமாதற்குக் காரண மென்னையென இங்கே ஆராயுங்கால் பெரும்பாலும் முயற்சிப் பிறப்பொற்றுமையே அதன் காரணமாகின்றது. எங்ஙனமெனின், இ, ஈ, ஐ என்னுமூன்றும் அண்ணவியையுற்றுப் பிறப்பன. அது, "இ, ஈ, எ, ஏ, ஐ என விசைக்கு—மப்பா லைந்து மவற்றோ ரன்ன—வவைதா—மண்பன் முதனா விளிம்புற லுடைய" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தானும், "இ, ஈ, எ, ஏ, ஐ அங் காப்போ—டண்பன் முதனா விளிம்புற வருமே" என்னும் நன்னூற்சூத்திரத்தானும் பெறப்படும். அங்ஙனமே யகாமும், அண்ணத்தையுற்றுப் பிறப்பது. அது, "அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை—கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தானும், "அடிநா வடியண முறயத் தோன்றும்" என்னு நன்னூற்சூத்திரத்தானு மறியப்படும். அதனால், அண்ணவியை புற்றுப்பிறப்பனவாகிய இ ஈ ஐ என்னு மூன்றெழுத்துக்களும், அவ்வியையுற்றுப்பிறப்பதாகிய யகரத்தை உடம்படுமெய்யாகப் பெறுவனவாயின. உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஐந்துஎழுத்துக்களும், இதழியைபுற்றுப்பிறப்பன. அது, "உ, ஊ, ஒ, ஓ, ஔ என இசைக்கு—மப்பாலைந்து மிதழ்குவிந் தியலும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானும், "உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவிவே" என்னும் நன்னூற்சூத்திரத்தானும் பெறப்படும். அங்ஙனமே வகாமும் இதழியைபுற்றுப் பிறப்பது. அது, "பல்லித ழியைய வகாரம் பிறக்கும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்

தானும், "மேற்பல் விதழுற மேவிடும் வவ்வே" என்னும் நன்னூற் சூத்திரத்தானும் பெறப்படும். அதனால், இதழியைபுற்றுப்பிறப்பன வாகிய உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னு மைந்தெழுத்தும், அவ்வியைபுற்றுப் பிறப்பதாகிய வகரம் பெறுவனவாயின.

அங்ஙனமாயின் அண்ணவியைபுற்றுப்பிறப்பதாகிய ஏகாரம், யகரமும் வகரமுமாகிய இரண்டையும் பெறுவதென்னையெனிற், கூறுதும். ஏகாரம் அண்ணவியைபுற்றுப்பிறப்ப உச்சரிப்பின் யகரமும், அதனோடு இதழியைவுமுற உச்சரிப்பின் வகரமும் பெறும். ஆதலால் அவ்வுச்சாரணமுறையே காரணமாம். அதனை, 'அவனே யழகன்' 'சேயடி' என வருமுதாரணங்களையும், 'ஏவெலாம்,' 'சேவடி' என வருமுதாரணங்களையும் உச்சரித்துணர்ந்துகொள்க. இவ்வியைபுபற்றிவருதலாற்றான் இதனை இயல்புப்புணர்ச்சி என்றுங் கூறுவாருளராயினார் போலும். இவ்வியைபின்றி, இகரமும், எகரமும், அகர உகரங்களோடொத்து வகரம்பெறுதலினாற்போலும், எகரவினா முச்சுட்டின்முன் வரும் வகரத்தைத் தோன்றல்வகரம் என்றனர். அன்றி, உடம்படுமெய் நிலைமொழிநோக்கியதெனவும் தோன்றல்வகரம் வருமொழிநோக்கியதெனவும் கொள்ளினு மமையும்.

இனி, அகர ஆகாரத்தை உகாமுதலியவற்றோடுசேர்த்து வகரம்பெறுமென்றதென்னையெனின், அவற்றையுச்சரிக்குமிடத்தும் சிறிது இதழின் முயற்சிகூடுதலின் என்க. அங்ஙன மாசிரியர் கூறிற்றிலரேயெனின், அது, "எடுத்தல் படுத்த னலித லுழப்பிற்—றிரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்" என்பதனாற் கூறினாரென்பது. அகர ஆகாரம் இதழும் சிறிதியைந்து பிறத்தலை, அவிடை எனவும், ஆவிடை எனவும் வருமுதாரணங்களை உச்சரித்துணர்ந்துகொள்க.

இனி வடமொழியினு மிவ்வாறே, இவ்வியையுபற்றி ஐ ஔ யகாத்தையும், ஏ, ஐ என்பதையும், ஓ, ஔ என்பதையும், உ, ஊ, வகரத்தையும், ஒ, ஔ என்பதையும், ஔ, ஆவ் என்பதையும் ஆதேசமாகப் பெறுகின்றன. உதாரணம் முறையே, த்ரி+அம்பகஃ–த்ர்யம்பகஃ எனவும், நதீ+அத்ர–நத்யத்ர எனவும், ஜே+அதி–ஜயதி எனவும், கை+அதி–காயதி எனவும், கௌ+அயஃ கவயஃ

எனவும், வய-பி + சூஷா-வய்யாஷா எனவும், ஹோ + கதி-ஹவதி என வும், தௌ + ஐஹ-தாவிஹ எனவும் வரும். இதனை, "ஐகோயணஜி" எனவும், ஷஓஷாzயவாயாவஃ எனவும்வரும் வியாகரண சூத்திரங்களா னறிக.

இனி உயிரீறு இவ்வுடம்படுமெய்பெறாமலும் வழங்கியதாக, உரை யாசிரியர் "எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே—உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்" என்னுஞ் சூத்திரவுரையில், வரையார் என் றமையான் உடம்படுமெய்கோடல் ஒருதலையன்று. என்றுகூறி, கிளி அரிது, மூங்கா இல்லை எனக் கூறினமைபால் முற்காலத்திலே உடம்படு மெய்பெறாமலே வழங்கியிருத்தல்வேண்டும் என்பது ஊகிக்கத்தக்கது. இங்ஙனமே விட்டிசைத்துவருஞ் சுட்டுக்களும் எகாவினாவும் வகரம் பெறாதுவருகின்றன. அது, "அஅவனும் இஇவனும் உஉவனும் கூடியக்கால்—எஎவனை வெல்லா ரிகல்." என்பதனா லுணரப்படும். இங்ஙனம் செய்யுளில் வருதலால் இவ் வசையை நேரசையாகக்கொள்வர். இவ்வெழுத்துக்கள் வகரம் பெற்றாலும் நேரசையேயாதலால், இவ்வகரத் தைத் தோன்றல்வகாரமென்றுரெனினு மமையும். இங்ஙனமே வட மொழிக்கண்ணும், க கநംத, ஐ ஶംஶ்வு, உ உஷேஶ எனச் சந்தி பெறாமல் வருதல் காண்க.

இங்ஙனம்,

சி. கணேசையர்,

புன்னாலைக்கட்டுவன்.

அரிசில்கிழார்.

(This Copy Right is Reserved to the Author)

அரிசில் என்பது சோழநாட்டுள்ள அம்பர்நகரைச்சூழ்ந்த ஓர் யாற்றின்பெயர்.

"உயர் கொடி அம்பர் சூழ்ந்த
அரிசிலந் தெள்ளற லன்ன"

என்பது நற்றிணை 141-ம் பாட்டிற்கண்டது. அப் பிரதேயத்தைச் சார்ந்தவர் அரிசில்கிழார்.

கிழார் – வேளாளர். "ஊரும் பெயரும்" [தொல்-மரபி-72] என்றதன் உரைநோக்கி யறிக.

இவர் கடைச்சங்கக் கன்மாப்பலகையேறி வீற்றிருந்த புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாக்களுள், குறுந்தொகை 193-ம்பாட்டு ஒன்றொழிய ஏனையயாவும் புறத்திணையைச் சேர்ந்தவைகளே.

இவர் கடையெழுவள்ளல்களுள் ஒருவனுன வேள்பேகன் காலத்தவர். அவ்வேள் பொதுமகள்வயத்தனுகித் தனக்குரிய மனைவியைத் துறந்து உலகநெறிவிலங்கியபொழுது இப் புலவர் அவ்வேளின் இல்லறத்துணைவி கண்ணகியை அவனிடம் பெயர்த்துச்சேர்த்துமாறு அவனைவேண்டிப் பாடினர். [புறம் - 146].

பேய்க்காஞ்சித்துறைக்கு இலக்கியமாக இவர் பாடிய புறப்பாட்டு [281] ஒன்றே இக்காலம் கிடைத்துள்ளது.

தகடூரை எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, அதிகமான்நெடுமானஞ்சியின்மீது வெகுண்டு அவனது தகடூரின்மீது படையெடுத்துச் சென்றவழி, அச் சேரவரையனுடன்சென்ற புலவர்களுள் இவரும் ஒருவர். இவருடன்சென்ற மற்றொருபுலவர் பொன்முடியார் என்பவர்.

தகடூர் கொல்லிக்கூற்றத்தில் உள்ளது.—பெரியமதிலரண்களையுடையது.[1] மிக்க வீரமுடைய வெல்போராடவர் பலராற் காக்கப்படும் சிறப்புடையது.[2]

---

1. பதிற்று - எட்டாம் - பதிகம்.
2. ௸ ௸ 8, (9-10- அடிகள்).

அந்நிலையில் அச் சேரலிரும்பொறை உழிஞைமலர்சூடி மதிலை முற்றுகையிட்டான். அதிகமான் தன் துணைப்படைவருமளவும் சேரனுடன் எதிர்த்துப் போர்புரியாது வாய்மதிலைமூடித் தகடூரகத்தே தங்கியிருந்தான்.[3] அக்காலை இப்புலவர் சேரமான்வலனும் ஆண்மையும் புலப்படத் தானே அதிகமானிடம் சென்று தெரிவித்தனர்.[4] அவனோ தன் அரணின் பெருமையையும் படைவலியையும், தன் துணையாகவரும் இருபெருவேந்தர் ஆற்றலையும் மேம்படமதித்து இப்புலவர்வாக்கைப் பொருட்படுத்தாது அரணகத்தே வீற்றிருந்தான்.[5]

பிற்றைத்திங்கள் முடியுடைவேந்தர் இருவர் (சோழபாண்டியர்) [6], அதிகமானுக்குத் துணையாகிவர இருகட்சியினர்க்கும் பெரும்போர் தொடங்கிற்று.

நொச்சிமலர் அணிந்து அதிகமான்படைவீரர் எயில்காத்தனர். அதனையறிந்து[7] மேல்எழுந்த சேரமான்படையினர் எயிலைவளைத்துத் தாக்கி அரும்போர்விளைத்தனர். அக்காலை அதிகமான் படைத்தலைவருள் ஒருவன் என்றெண்ணப்படும் நெடுங்கோளன் அமரில்மடிய[8] அவன்படை சிதறிப் பிளவுபட்டுப் போர்வீரரும் களிறும் மிக்குமடிய, அதிகமான் வெகுண்டு பெரும்பாக்கன் என்னும் சிறந்தவீரனை முனைப்படைத்தலைவனாக்கிப் பல சிறப்புகள் அளித்துப் போர்முகத்துவிடுத்தான்.[9]

அவன் சேரன்படையினை ஒருபொருளாகக்கருதாது மேல் எதிர்ந்து போர்புரிந்தவழிச் சேரன்படை தன்நிலைதளர்ந்து நிலையாற்றாது பெயர, சேரலிரும்பொறை தானேமுனைப்படைசென்று தன்படைவீரரை யூக்கிப் போர்முனைந்து நின்றான்.[10]

---

3. தொல் - புறத்தி - 7. நச். உரைத்தேற்றம்.

4. பதிற்று - எட்டாம் - 3.

5. தொல் - புறத்தி - 12 - "அகத்தோன்செல்வம்"—என்ற பகுதி மேற்கோள்—"பொருசினமாறு" என்றபாட்டு - நச் - உரை.

6. பதிற்றுப்பத்து - 8-ம் பத்து - பதிகம்.

7. ஷ ஷ - 7 - கருத்துரை.

8. தொல் - புறத்தி - 24 - "மாய்பெருஞ்சிறப்பு"- என்ற பகுதி - நச். உரை. மேற்கோள் & கட்டுரை.

9. ஷ ஷ 8- "பொருளின்றுய்த்த பேராண்பக்கம்"—என்றபகுதி- நச் - கட்டுரை.

10. ஷ ஷ ஷ ஷ ஷ.

அக்காலை இப்புலவர் சேரனைக்கண்டு "மெய்ம்மலிமனத்தின்"-என்ற செய்யுளைக் †கூறினர்.[11] ஆண்டுச் சேரமான் எயிற்புறத்தே தன்படை பட்டார் தன்மை எத்தன்மையது என இப்புலவரிடமும் (பொன்முடியாரிடமும்) வினவினன். அதன் மறுமொழியாக இப்புலவரும் (பொன்முடியாரும்) படைஇயல்கூறி,

"நாளைநாமே
உயிர்மிசை கொண்ட மயிர்க்கட்
டருமுர சிரங்க வூர்கொள் குவமே".[12]

[ஊர் - தகடூர்]

எனக் கண்டது செப்பினர்.

அவ்வாறே அதிகமான்படைவீரர் சேரனொடுபொருது குலைவுற்றனர். சேரலின்படை விஞ்சிப் புறஎயிலை அழித்து அகமதிலைக் கைப்பற்றின. அதிகமானும் புண்பட்டுநின்றான்.[13]

இறுதியில் பகைவர்வீசியவேல் மார்பிற்றைத்து ஊடுருவிப்போதலினால் அதிகமான்,[14] களத்திடை உயிர்துறந்தான். அவன் மார்பிற்றைத்தவேல் உருவிப்போந்தமையால் அவன் மெய்யை அவனது மனைவியரும் இனங்கண்டறிவது அரிதாயிருந்தது.[15]

அக்கால் இப்புலவரே மனம் இளகி அவன் காலகதியினையெண்ணி உருகிப்பாடினர்.[16].

---

11. தொல் - புறத்தி - 8 - "வருவிசைப்புனல்"—என்றபகுதி - நச் - உரை மேற்கோள் & தகடூர்யாத்திரை.

† இப்புலவருடன் இணைந்து தகடூர்போந்த பொன்முடியார் என்னும்புலவர் அந்நிலையில் அச் சேரலைக்கண்டு "கார்த்தரும்புல்லணல்". [ஷை ஷை ஷை ஷை] என்ற செய்யுளால் புனைந்துரைத்தார்.

12. தொல் - புறத்தி - 12 - "முரணிய புறத்தோன் அணங்கிய பக்கம்" என்றபகுதி - மேற்கோள் - கட்டுரை. & தகடூர்யாத்திரை—"கலையெனப் பாய்ந்த"—என்ற செய்யுளடிகள்.

13. புறம் - 93. கருத்துரை.

14. புறம் - 235. 15. தொல் - புறத்தி - 24 - "நீத்தகணவற் றீர்ந்த"—என்றபகுதி - நச் - உரைமேற்கோள் & தகடூர் யாத்திரை.

16. புறம் - 230.

அதிகனுக்குத் துணைவலியாகிவந்த சோழபாண்டியர் தத்தமது குடையும் முரசும் கலனும் போர்க்களத்தேபோகட்டுவிட்டுப் புறமிட்டு ஓடினர்[17].

இறுதியில் சேரல் தகடூரையும்[18] கொல்லிமலைசூழ்ந்த நாடுகளையும் கைப்பற்றி மீண்டான்[19].

பின்னர், காமூர் - (அகம் - 365) என்ற ஊருடையானும், இடையர் தலைவனும் இச்சேரலுக்கு குறும்பு மிசச்செய்திருந்தோனுமாய கழுவுள் என்பானைத் தலைமடங்கச்செய்து[20] வைகறைப்பொழுதில் சென்று, அவன் எயிலைக்கைப்பற்றிய இச்சேரல்[21] அடுத்துத் திறையிறுக்காத குறும்பர்நாடுசென்று அவரையும் ஒடுக்கினன்.[22]

அறத்துறையாக இச்சேரல், தன்கோயிற்புரோகிதன், இல்லறத்திலேயே நரைமூதாளனாகியவளவும் நிலைத்திருப்பதைக்கண்டிரங்கி அவற்கு அறிவுகொளுத்தித் துறவறநெறி ஒழுகுமாறு தெருட்டி நன்னெறி உய்த்தான்.[23]

இவையெல்லாம் விளங்க இப்புலவர் இச் சேரன்மீது (பதிற்றுப் பத்து எட்டாம்பத்தினால்) பத்துப்பாக்கள் பாடினர். அதுகேட்ட இரும்பொறை பெருமகிழ்வுற்றுத் தானும் தன் கோயிலாளும் (பட்டமஹிஷியும்) அரண்மனையின்புறம்போந்து நின்று "கோயிலுள்ளவெல்லாம் கொண்மின் என்று காணம் ஒன்பது நூறாயிரமும் கொடுத்தான்.[24]

இஃதொன்றோ தன் அரசுகட்டிலும் (சிம்ஹாசனம்) கொடுப்ப இப் புலவர் அதனை ஏற்காது "யான் இரப்ப இதனை (நீயே) ஆள்க"[25] என்று (அவனிடமே) அமைச்சுப்பூண்டார். அச் சேரல் அரசுவீற்றிருந்த பதினேழியாண்டும் அவனிடமே அமர்ந்திருந்தனர் என்ப.

---

17. பதிற்று - 8-ம்பத்துப்பதிகம்.
18 - 19. ஷை ஷை ஷை
20. பதிற்று - எட்டாம்பத்து - பதிகம்.
21. ஷை ஷை 1-ம்பாட்டு. (16-18 அடிகள் - உரை)
22. ஷை ஷை ஷை
23. ஷை ஷை 4 (24—28 அடிகள் & உரை)
24. பதிற்றுப்-எட்டாம்-பதிகம்.
25. ஷை ஷை ஷை.

அயிரைமலையும் (பதிற்-79) கொல்லிக்கூற்றமும் இவர்வாக்கில் வந்துள்ளன. சிறுகுடிகிழான்பண்ணனைப் பாராட்டிப் பாடியுள்ளாருள் இவரும் ஒருவர். [புறம் - 304].

இறுதியில் மதுரைக் கடைச்சங்க நிலைகுலைவுகாலத்தில் சங்கக் கன்மாப்பலகையேறி வீற்றிருந்தவருள் இவரும் ஒருவராயிருந்தனர். பொன்முடியார் என்ற புலவரும் உடன் இருந்தனர்.[26]

அக்காலத்துச் சங்கம் குலைக்கவந்த இடைக்காடனார் என்ற புலவர் இவர்பக்கல்வந்து நிற்ப, இவர் அவரைநோக்கி "நில்லாதேயும்-உட்காரும்-கட்டவிழ்க்காதேயும்" என்றார்.[27]

அதற்கு இடைக்காடர் இவர்குலத்தினைச்சுட்டிக் காளையினை உழவர் செய்யில் ஓட்டுமாற்றினைக் (லக்-லக்) குறிப்புமொழியால் ஓலைமுறியில் ஒலியெழுத்தாளர் குறித்தெடுப்பியாவாறு பாடினர். அவ்வளவை ஓராறெடுப்பில் இவர் இருந்த இருக்கை (பலகை) சுருங்கி இடக்குறுக்கஞ் செய்தது.[28] இவர் கீழ்இழிந்தார்.

இவர் பாடியனவாகக் குறுந்தொகையுள் ஒன்றும் பதிற்றுப்பத்துள் (எட்டாம்பத்து) பத்தும், திருவள்ளுவமாலையில் ஒன்றும் புறநானூற்றுள் ஏழும் மேற்காட்டிய இரண்டும் ஊசிமுறியுள் ஒன்றும் ஆக இருபத்திரண்டு பாக்கள் அகப்பட்டுள்ளன.

பெயர்விழையான்,
தச்சநல்லூர்.

---

26. ஊசிமுறி. ஓராறெடுப்பு—மிக. கட்டுரை.
27. ஷை ஷை ஷை ஷை ஷை
28. ஷை ஷை மிக.

அருவியன் காதை.

[குறிப்பு:—'அருவியன்' என்பவன் 'திருசய' நாட்டிலிருந்த ஓர் இசைப் புலவன்; கல்லுங் கனிந்துருகும்படியாகப் பாடுந்திறமை வாய்ந்தவன். இவனது அன்பிற்கினிய மனைவி 'உருதேசி' யென்பவள். இருவரும் ஒருநாள் தம் நகர்க்கருகிலுள்ளதொரு வனத்திற்குச்சென்று காட்சி வளங்கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தனர். அப்பொழுது பாதலத்து அரசனாகிய 'புலுதன்' செய்த கொடிய சூழ்ச்சி யொன்றினால் உருதேசி திடீரென மரணமெய்தினள். இங்ஙனம் நேர்ந்த பிரிவினால் பெருந்துயருழந்த அருவியன் தனது அருமைநாயகியை மீட்டுவர எண்ணிப் பாதலஞ் சென்றான். அங்கே இவனது ஒப்புயர்வற்ற மதுரகீதத்தால் புலுதன் உருகி யிரக்கங்கொண்டு 'நினது உருதேசிக்கு உயிரளித்தேன். அவள் நின்னைப் பின் தொடர்ந்துவரக்கடவள். ஆனால் இப்பாதலம் நீங்கிப் பூமியில் அவள் அடியெடுத்துவைத்தபின்தான் நீ அவளைப்பார்த்தல்வேண்டும். அதற்குமுன் திரும்பிப்பார்ப்பாயாயின் நீ அவளை இழந்துவிடுவது திண்ணம்' என்று கூறிவிடுத்தான். இவ் ஆக்ஞையின்படியே பாதலத்தைவிட்டு அருவியன் முன்னும் உருதேசி பின்னுமாக வந்துகொண்டிருக்கும்பொழுது, பாதல இருளைவிட்டு உலகவெளிச்சத்தில் தான் வந்ததும் அருவியன் அடக்கொணா ஆர்வப்பெருக்கால் புலுதன் ஆக்ஞையை முற்றும் மறந்தவனாகித் தன்னுயிருக்கிருப்பிடமாகிய உருதேசியைத் திரும்பிப் பார்த்துவிட்டான். அச்சமயம் உருதேசி பாதலஇருளை முற்றும்விட்டு வெளிச்சத்தில் புகாதிருந்தமையால், புலுதனால் திரும்பவும் வௌவிக்கொள்ளப்பட்டாள்.]

இதுவே இந்தக் கிரேக்கர்கதையின் சுருக்கம். காலதேசத்திற்கேற்ற சிற்சில வேறுபாடுகளும் தமிழ்க்காவிய வழக்கிற்கேற்பக் கொள்ளப்பட்டிருக்கின்றன; கீழ்வருஞ்செய்யுட்கள் இக்கதையின் முதற்பகுதியைச் சேர்ந்தனவாகும். அவை யிற்றைக்கு 30 வருஷங்கட்குமுன் இயற்றப்பட்டனவாயினும் இதுகாறும் வெளிவரவில்லை.

(காப்பு).

சரஸ்வதி துதி.

அறிவான தரு ஓங்கும் அறிவான கொம்பே!
அறிவான மலர் வீசும் அறிவான மணமே!
அறிவான காய் தந்த அறிவான கனியே!
அறிவாய் என் உளம் மேவி அருள்வாய் நற்கனியே!

நூல்.

துங்கம் மன்னு கிரேக்கரின் தொல்புகழ்
எங்கள் தீந்தமிழ் நாடறிந் தின்புறப்
பொங்கும் இன்னிசை யாழ்வலன் பொற்கதை
இங்கு முன்னர் இயம்பிடப் போந்ததால். (1)

வேறு.

சிந்து வெண் திரை எனும் சேக்கை மேவலால்,
செந்திரு விளங்கலால் திசைகள் யாண்டினும்
பைந்தழை தருதலால், பச்சை மால் என
வந்தது திருசய* வான நாடரோ. (2)

இலையிலாக் குன்றமும், இலை யடர்தரு
தலை உலாம் சைலமும், சருவி மாணெடு
கலை உலாம் சாரலும், கான யாறு பாய்
அலை உலாம் பொய்கையும் அழகு தந்தவே. (3)

அருவியின் குரவையே ஆன்ற குன்றெலாம்,
குருவியின் அரவமே, குழையும் கொம்பெலாம்,
திருவனர் செவ்விரல் தெறிக்கும் யாழிசை
பொருவரும் மறுகெலாம் பொலியும் என்பவே. (4)

யோகம் தேர் மாந்தரும் உழல் மனத்தராய்
மோக வாய்ப்படினும் தாம் முனிவு கொள்ளலர்,
நாக லோகமும் அல நண்ணலாததாம்
போக பூமியை இது புரையும் ஆதலால். (5)

மேய சீர் நாட்டொரு விளக்கம் அன்னது,
தூயவர் என்றது, தொன்மை சான்றது,
தீய நல்குரவின்னுத் தெரிகிலாதது,
ஆய ஊர் விருதை; நல்வளகை எய்க்குமே. (6)

அருவியுன் † என்றொரு நாமம் தாங்குவான்
ஒருவன் அவ்வூரினில் உதித்திலங்கினன்;
பொருவிலா யாழில் ஐம்பூதம் பேதுறப்
பெரும்இசை தந்திடும் பெற்றியானரோ. (7)

*Thrace. † Orphens.

பண் தரும் யாழினைப் பரிதி வானவன்
எண் தர இயற்றி, அவ்வந்தல் மீதருள்
கொண்டளித்தாசியும் கூறிப்போயினன்
மண்டலம் தனில் இசை மாந்தர் மாந்தவே. (8)

அந்த யாழிடை அவன் அமுததாரையே
தந்திட, மைந்தரும் தையலார்களும்
சிந்தையும் செயலும் போய்த் திளைத்தல் மேயினர்
எந்த இன்பமும் ஒவ்வா இன்பவெள்ளமே. (9)

கலை படர் மானினம் கலை மறக்குமே,
வலை படர் புள்ளினம் வருத்தம் ஆறுமே,
அலை படர் வாவியுள் ஆய்கயலும் ஓர்
நிலை படர்கின்ற தண் இசை நிகழ்ச்சியால். (10)

உள்ளமும் உயிரும் ஊர்காலும் ஓதநீர்
வெள்ளமும் ஓடுதல் விடுத்த கீதத்தால்,
கள்ளமும் வஞ்சமும் கழன்றனர் சிலர்,
அள்ளுவர் நீங்கிப் பாலான ஆழிபோல். (11)

வேறு.

இசை தழைத்த இசைவலன் ஈறிலா
வசையில் கேள்வியன் வாய்ந்தனன் என்பவே,
கசியும் ஆகம் கலந்திடும் காதலாம்
வசியம் மீறி மயக்கும் பருவமே. (12)

தேட்டம் செய்து திகைப்புறக் காசைத்தேன்
ஊட்டும் வாள்நகை ஒண்டொடிமார்எலாம்
நாட்டம் செய் ஒரு நாயகம் உண்டு,வான்
மாட்டும் தாரகை வாட்டும் மதியமே. (13)

வேறு.

பால் ஒக்கும் என்னில் அன்னாள் பண்மொழிக் கிழுக்கே, பாயும்
சேல் ஒக்கும் கண்கள் என்னில் செயல்ஒத்தல் இல்லை, நொய்ய
ஆல் ஒக்கும் வயிறோ அல்ல, அழகொக்கத் தவழுங் கோயில்,
நூல் ஒக்கும் என்னில் அந்தோ நோய் ஒக்கும் இடையின் நுண்மை()

கார் எனச்சொல்லலாமோ? கங்குலின் இருண்ட காட்சிச்
சீர் என மொழியலாமோ ? மற்றெவை செப்பலாமோ?
தார் எனச்சாற்றின் மென்மை தாங்குமோ ? தவத்தின் ஆய
ஏர் எனப் பொலிந்து தோன்றும் ஏந்திழை கூந்தற்பாரம். (15)

வில் எனில் வளைவு தீரும், வெண்பிறைக்கிழுக்கும் உண்டு,
சொல் எனில் நுதற்குக்கூறத் துணைப்பொருள் கண்டேன் அல்லேன்,
கல் எனும் மனமே ஒல்லைக் கசிவுறில், கவின் ஆர் மை தோய்
அல் என்கோ, வண்டில் செய்த அணி என்கோ, புருவச்சீரே ? (16)

எட்குலாம் மலரை வாட்டி, எழில் குலாம் சண்பகத்தின்
கட்கொளாப் போகில் ஏசிக், காவி ஊடொதுங்கும் நாசி ;
உட்குலாம் உயிரோ வனை உயிர்க் குலாம் உயிராம், கிள்ளைப்
புட்குலாம் மொழியும் தேனும் புளிப்பெனும் உரையினுட்கே. (17)

முத்தென்றும், ஒளிகால்முல்லை முகைஎன்றும், முருந்தம் என்றும்
எத்துணை எழில் என்றெய்யா இன்னகைக் கெதிர் என்றெண்ணிப்,
பித்தர் பேசுவரே அல்லால் பேசிடார் கவிஞர் ; மேலாம்
சித்திர இதழ்க்குச் செய்ய பவழமும் கனியும் சேரா. (18)

பங்கம் மேற்பாயும் பூவே பங்கம் மேற்பாயாநிற்கும்
சங்குறை கழுத்தினளின் தாள் மலர் சுமக்கல் ஆற்று
கொங்கு தேன் பிலிற்று கோதை குழற் பெரும் பாரத்தாலே
செங்குமுதத்தின் வாய்ப்பச் சிவந்துடல் நைந்த அம்மா ! (19)

(வேறு)

ஈங்குரைத்த எழில் எழில் மும்மடி-
தேங்கு தேசி * எனும் திருவை மணப்
பாங்கிற் பற்றினன் யாழ்வலன், பண்ணொடு
ஓங்கு பா சென்றுறழ்ந்தது ஒப்பவே. (20)

* 'உருதேசி' (Eurydice) 'தேசி' யெனச் சுருங்கிற்று.

பூவினும் மென்மை பூண்டொளிர் பூங்கொடி
நாவு வார் நறவாம் உரை நாடியே
ஆவல் கூர் அளியென்ன அருவியன்
மேவுவான் கலத்தின்னிசை மீட்டியே. (21)

மழமதர்க்கண் அம்மானினி தன்பதி
பழமை துய்க்கப்பயந்தனளோ ? அல ;
நழுவு நாள் வளர் நாளென வாரல் போல்
தழுவும் இன்பம் தனிச்சுவை மாறுமே. (22)

தீங்கென்றுள்ளவை ஏதும் சிவணிடா
தோங்கும் இன்பமே உற்றனர் ; ஆதலால்
ஈங்கிரண்டறம் தம்மில் இயற்கையால்
தாங்கும் இல்லறமே தலை என்னில் என் ? (23)

நற்றுறவறம் நன்மை அளிப்பது
மற்றுளார்க்கோ ? தன்மட்டோ ? தன்மட்டுமாம் ;
பற்றும் இல்லறம் பாலிக்கும் இன்பமோ
சுற்றுளார்க்கும் பின்தோன்று மவர்க்குமே. (24)

ஓயும் சீர் இடையாள் உருதேசி தன்
நாயகன் ஒருநாள் பிரிந்தேகினும்
காயும் வெம்பக் கலுழும் நீர்க்கண்ணளாய்
பாயும் துன்பப் பகழியின் நைவளே. (25)

தனிமை சேர்பவர் தாரணியில் பலர்
இனிமை சேர்பவர் என்ன இயம்பினர் ;
நனி மகிழ்வுற நன்மணம் பூண் குடும்
பினி மணாளன் பால் பேசி அறிமினே. (26)

புல்லும் அச்சம் புனைதரும் அன்பிவை
இல்லையாயின் இனியதென் றுன்னலாம் ;
சொல் இரு குணம் தோய்பவர்க்குத் தனி
கொல்லும் தீ விடம் தன்னில் கொடுமையே. (27)

அருவியன் அமுதான உருதேசி
இருவுடற்கும் உயிர் ஒன்ருய் ஒன்றினர்;
"ஒரு வினை எனினும் அவர் ஒற்றுமை
திரு வினை" அஃதாக்கிடல் சீர்த்தியே. (28)

காலை தோறும் கடிமலர் கொய்குவார்,
சோலை வாவி அருவி நீராடுவார்,
மாலை தோறும் மகிழ்தந் துலாவுவார்,
பாலைப் பண்ணைப் பழிக்கவும் பாடுவார். (29)

பாடல் சான்றனர், பைந்தழை மாமலர்
சூடல் சான்றனர் (தொல்லையினோர் புகழ்
ஊடல் என்னும் பேருதை கலக்குருக்
கூடல் என்னும் கடல் குளித்தாரரோ. (30)

வேறு.

இங்கிவர் இன்பம் இவ்வாறெய்திட, இரவெங்நாளும்
தங்கிருட் கிடங்கின்சீரும், தலைவனும் புலுதன்*சீரும்,
மங்குல் ஏர் மங்கும் பாசபன்னி†யா மாதின் சீரும்,
அங்குறை ஏவலாளர் சீருமே அறைதல்செய்வாம். (31)

(தொடரும்).

K. N. சிவராஜபிள்ளை B.A.,

---

* Pluto. †Proserpine.

உ

ஸம்ஸ்க்ருத வ்ருத்தமஞ்ஜரி.

(Sanskrit Prosody)

(குறிப்பு) இவ்விஷயமாய், இதற்குமுன் ப்ரசுரமான இரண்டுவ்யாஸங்களிலும், விட்டுப்போனவைசில இங்கு அநுபந்தமாய் ப்ரசுரிக்கப்படுகின்றன.

வர்க்கம்.	பெயர்.	மாத்ரா	கணம்	விவரம்.
1. உக்தா				
	ஸ்ரீ	2		ஒ
2. அயுக்தா				
	ஸ்த்ரீ	4		ஒஒ
3. மத்யா				
	1. நதி	4	ஸ	நநஒ
	2. ம்ரிகீ	5	ர	ஒநஒ
	3. கேஸா	5	ய	நஒஒ
	4. நாரீ	6	ம	ஒஒஒ
4. ப்ரதிஷ்டா				
	1. ஸுமுகீ	6	ப க	ஒ நந ஒ
	2. ஸுமதீ	6	ஸ க	நந ஒ ஒ
	3. லாஸினீ	6	ஜக	நஒ நஒ
	4. வ்ரீடா	7	யக	நஒ ஒஒ
	5. ஸ்ம்ருத்தி	7	ரக	ஒந ஒஒ
	6. கன்யா	8	மக	ஒ ஒ ஒ ஒ =(½வித்யுன்மாலா)
5. ஸுப்ரதிஷ்டா				
	1. பங்க்தி	8	பகக	ஒ நந ஒ ஒ
	2. மந்தா	8	தலக	ஒ ஒ நந ஒ
	3. ஸதீ	8	ஜகக	ந ஒந ஒ ஒ
	4. ப்ரீதி	9	ரகக	ஒநஒ ஒ ஒ

6. காயத்ரீ

5. ரமணீ 8 (ஸ-ஸ) நநஞ நநஞ
=½ தோடகம்

மலையே, மானே, மயிலே, குயிலே
கலையே, பிணையே, களிறே, பிடியே

6. வஸுமதி 9 (தஸ) ஞ ஞ ந ந ந ஞ
7. முதலம் 10 (மஸ) ஞ ஞ ஞ ந ந ஞ
=[பொன்னார் மேனியனே]
8. மாலினி 11 (ரம) ஞ ந ஞ ஞ ஞ ஞ
9. ரதீ 11 மர ஞஞஞ ஞநஞ

7. உஷ்ணிக்

4. ஹம்ஸமாலா 11 (ஸரக) நநஞ, ஞந ஞ ஞ

8. அநுஷ்டுப்

7. சித்ரபதாகா. 12 (பபகக) ஞநந, ஞநந, ஞஞ
[மந்திரமாவதுநீறு]
சென்னிகுளநகர்—வாசன்
தேறுமண்ணுமலை—தாசன்
வண்ணமயில்முரு—கேசன்
வள்ளிபதம்பணி—நேசன்

8. நாகரகம் 12 (பரலக) ஞநநஞ, நஞ, நஞ
=(ஸுமுகீ + லாவினீ)

9. ஹம்ஸருதம் 13 (மநகக) ஞஞஞ, நநந, ஞஞ
10. நாராசிகா 13 (தரலக) ஞஞ, நஞ, நஞ நஞ
11. விதாநம் { 11 (ரஸலல) நஞ, நஞஞ, நஞஞ
13. ஜ த க க ஞந ஞநந ஞநந }

[தொடரும்]

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B.A., B.L.,
மதுரை.

97,98 PAGE MISSING IN BOOK

யாதெதன்ப தறிந்தனமே-வில்லாடன் மாரனிருக்கவும் யோகம்விளைத்த வந்நாட்-புல்லா திருந்தனவெல்லாவுபிருந் தம்போகத்தையே" எனக்கூறி யது காண்க.

இன்னும், அக்கரங்களை யியக்குதற்பொருட்டு, அவ்வக்கரங்களையுட னின்றியக்கும் அகரத்தைப்போல ஆன்மாக்கட்கு அறிவுசெயல்கள் தன்னையின்றிவிளங்காமையால் அவை விளங்குதற்பொருட்டு அவ்வுயிர்க ளுடன் கலந்து நிற்பன் என்பதனாலுந் தன்வயத்தனாதல்காண்க. இதனை சிவ-சித்-௰௧-௬-முதலதிகாரணம், ௭-ஆங் கவியிற்காண்க.

இன்னும், சர்வசங்காரகாலத்திற் றானேயாயிருத்தலாலும், நாமங் களிலே சர்வதத்துவாதிபதயே சிவாயநம: எனக்கூறலாலுங்காண்க.

2. தூயவுடம்பினனாதல்—அருளே திருமேனியாகித்தேயத்தொளிக ளெல்லாந் தன்திருமேனியொளியால் விளங்கவிருப்பவனாதலாற் றூயவுடம் பினனாதல்காண்க. இதனை சிவ-சித்-௧-௬-௪௭-௫௨-ஆங்கவிகளிற்காண்க.

இன்னும், மாயாவிகாரமெய்திக்கருப்பாசயத்திற்படாமையாலும் பசிநோய்மதமாற்சரியமுதலியவுயிர்க்குணங்களின்மையாலும், நின்மல தேகியெனவேதமுறையிடுதலாலுங்காண்க. கருப்பாசயத்திற்படானென் பதனைவிளக்கி, அருணைகிரியந்தாதியில், எல்லார்பிறப்புமிறப்புமியற் பாவலர்தஞ்—சொல்லாற்றெளிந்தேநஞ்சோணேச—ரில்லிற், பிறந்தகதை யுங்கேளேம் பெருலகில்வாழ்ந்துண்—டிறந்தகதையுங்கேட்டிலேம்." எனக் கூறியதுகா[illegible]க.

3. [illegible]கையுணர்வினனாதல்—கருவிகளொன்றுமின்றிக், கேவ [illegible]ன்றிப், பின்னர்க்கலைமுதலாகியகருவிகளோடு கூடியவழி [illegible]வரு மான்மாவைப்போலன்றி, அறிவிப்பாரின்றி எக்கா [illegible]வுமொருங்கே அறிந்தாங்கறிந்து நிற்குஞ்சித்துப் [illegible]ற்கையுணர்வினனாதல்காண்க—இதனை சிவ-போ-௩ [illegible]காண்க.

இன்னும், குருமூர்த்தியாயிருந்து, உமாதேவியாருக்கும், நந்தி முதலிய முனிகணத்தவர்க்குந்தேவர்கட்கும் வேதசிவாகமங்களையுணர்த்தியதன்றிமோன முத்திரையத்தனுயிருந்து பதேசித்தமையாலும், சிவஞ் சத்தியாய் நின்றுயிர்களின்கன்மங்களையறிந்து முந்தாமற்பிந்தாமற்கூடாமற்குறையாமற்கன்மபலன்களாகிய இன்பதுன்பங்களை அவ்வுயிர்களுக் கூட்டுவித்தலாலுங்காண்க.

4. முற்றுமுணர்தல்—சிவ. போ. 2. சூ. க. அதிகரணத்தில் பண்ணுமோசையும் போலப்பிரிப்பின்றியாங்கணும் வியாபகமாய் நிற்பவன் எனக்கூறலால், எல்லாமொருங்கேயறிபவனாதல்வேண்டும் எனக்கருதப்படுதலின் முற்றுமுணர்தல்காண்க. அத்துவிதவாக்கியத்தெளிவுரையிலே முற்றுணர்வாவதுமுழுதும் வியாபகமாய்நின்றறிவதெனக்கூறியதுங்காண்க. இன்னும், "அண்டங்களுள்ளும்புறம்புங்கரியாயினன்" எனக்கூறலாலும், வேதசிவாகமங்களை எல்லாப்பொருளும் விளங்கத் தானேயறிந்துயிர்கட்கிரங்கியோதிவைத்தமையால், முற்றுணர்வுதெளியலாமென, சிவ. சித். அ. சூ. ௰ள. ஆங்கவியுரையிற்கூறியதுங்காண்க. இன்னும், கருவி பொருள் காட்டு கருமம் உருவம் அளவு நூல் அன்றி, ஒருசேதனப்பொருளாலுமறிவித்தலின்றித்தானேதமியனாய், எல்லாவற்றையுமறிந்து நிற்றலால் முற்றுணர்வுபெறப்படுமென்க. சிவ. சித். ரு. சூ. ருக. ஆங்கவியிலறிக.

5. இயல்பாகவேபாசங்களினீங்குதல்—குருமூ[illegible] தரித்துக் கல்லாலடியிருந்து, நந்தியாதிமுனிகணத்தவர் முதலோர்[illegible] சித்துப் பாசங்களைநீக்கிமுத்திமுடிவைத்தெளியவருளியவாற்[illegible]
வேபாசங்கணீங்கியவனென்பதுணர்க—இதனைச்சிவத[illegible]
"திருமாலிந்திரன்" என்னுமுதற்குறிப்புள்ளகவியிற்[illegible]
திருவானைக்காப்புராணத்தில், "மும்மலம்வேறுபட்[illegible]
ரம்மலர்த்தாணிழலடங்குமுண்மையைக்—கைம்ம[illegible]

நல்கிய —செம்மலையலதுளஞ்சிந்தியாதரோ” எனக்கூறியதுங்காண்க. ஞானமுத்திரைக்கையால், மும்மலநீக்கமும், ஆன்மாத்தன்னடிநிழலடங் குந்தன்மையுங்காட்டியருளியதையுபதேசமுறையாற்கேட்டுணர்க.

6. பேரருளுடைமை:–உயிர்கட்கின்பதுன்பநுகர்ச்சிக் கூறுபாட்டால், அதற்குக் காரணமாகிய இருவினைகளைநீக்கியருள்வதனாற் பேரருளுடைமை காண்க. இதனை, சிவ-சித்-அ-சூ. ௰எ-ஆங்கவியுரையிற் காண்க.

இன்னும் கல்லாலடியிலே யோகிருந்தகாலத்தில், எவ்வுலகிலுமாண் பெண் புணர்ச்சியின்பமின்றி வருந்தல்கண்டு, அவ்வின்புறுமாறு, உமாதேவியுடன் கூடியிருந்தருளுதலாலுங்காண்க. இதனை, சிவ-சித்-க-சூ-௫௩-ஆங் கவியிலுங் காண்க.

இன்னும், விருப்புவெறுப்பில்லா அவ்விறைவன் தேவர்முதலோர்க் கிரங்கி, ஆலகாலத்தையருந்திக் கண்டத்தடக்கிவைத்தருளியதாலுங் காண்க.

7. முடிவிலாற்றலுடைமை.–வேதாகமங்களினெறிச்செல்வோர்க்குஞ் செல்லாதோர்க்கும், அம்முறையே சுகதுக்கமளித்தலாகிய வேதுவாலே முடிவிலாற்றலுடைமை காண்க. இதனை, சிவ-சித்-அ-சூ-௰எ-ஆங்கவியுரையிற்காண்க.

இன்னும், ஆலகாலத்தையருந்தியருளிய காலத்திலே, அதனை மிடற்றிலடக்கிவைத்ததும் போராற்றலுடைமை குறிக்கின்றதுகாண்க. உலகில் யாரேனுமெவ்வகையுணவுப்பொருளை யருந்தியபோதும், அதனை வாயிடையினும் வயிற்றிடையினு மடக்கிவைத்துக்கொள்ளமுடியுமேயன்றி யிடையிலடக்கிவைத்துக்கொள்ளமுடியாது ; இக்கருத்தமைய காஞ்சிப்புராணத்தில், மணிகண்டேசப்படலத்தில், “கோரவல்விடமிடற் றிடையடக்கினன்குழக––னரவாயிடைவயிற்றிடையன்றிமற்றிடைக்க––ஞாரமைத்திடவல்லவரமிழ்தமேபானும்” எனக் கூறியதுங்காண்க. சர்வ

சங்கார மூர்த்தியாயிருத்தலுங்காண்க. எல்லாப்பொருளும் வியாப்பியமா யடங்கத் தான் வியாபகமாயிருப்பதனால், அவ்விறைவனுக்கே பேராற்ற லுடைமை தெற்றெனப் புலப்படுதலுங்காண்க.

8. வரம்பிலின்பமுடைமை—சார்ந்ததன்வண்ணமாய்நிற்குமான் மாக்களெல்லாம் புண்ணியமேலீட்டாற்பக்குவமெய்திச், சத்திபதியப் பெற்று, வினையொப்புவாய்ந்து, சற்குருபரம்பரையினுபதேசிக்கப் பெற்றுத், துவிதபாவனையைக்கைவிட்டுச், சிவனேநானெனப்பாவிக்குஞ் சிவோகம் பாவனைசெய்து, ஏகதேசமாய்நின்றறிவதாகியசிற்றறிவினீங்கி, ஞானக்கண்ணினாற் சிவனையான்மாவிற் கண்டு, சிவனோடொற்றுமைப் பட்டுத், தத்தருமதருமியாய்த்தத்தருமமெனப்பட்டமுற்றுணர்வுமுத லியவெண்குணங்களையுமுடையவராய்த், தன்னானந்தமாகியமுடிவுகாண் கிலாப்பேரின்பத்தை நுகர்ந்திருப்பதனால் வரம்பிலின்பமுடைமைகாண்க இக்கருத்தைவிரிவாகஅத்துவிதவாக்கியத்தெளிவுரையிற்காண்க.

இன்னும், உண்மையறிவானந்தவுருவன் என்னுஞ்சச்சிதானந்த வுருவன் எனக்கூறலாலும், எல்லாவுயிர்கட்குமின்பஞ்செய்தலிற் சங்கரன் சம்புஎன்னுநாமங்கள் வழங்கலாலுங்காண்க.

"எல்லாவுயிர்கட்குமின்பங்கொடுத்தலினா
லெல்லாஞ்சிவனையேயெண்ணலா—லெல்லாஞ்
சிவனுருவேயாமாற்றெவிட்டாதவின்பஞ்
சிவன்பாலிருக்குமெனத்தேர்" எனக்கூறலுங்காண்க.

இங்ஙனஞ்சுருங்கவுரைத்திருக்கின்றமையாற் சன்மார்க்கநெறி நிறைந்த நல்லறிவிற் பெரியோர்கள் விரிவாகவெழுதியுலகிற்குபகாரமாக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

---

* தத்தருமதருமியாய்த்தத்தருமமெனப்பட்ட—என்பதற்கு, அதனியல்பு தன்னியல்பாய் அதனியல்பெனப்பட்ட என்பதுபொருளாம்.

சாதுகை மாந்தர்.

கம்பநாடரது இராமாயணத்திலே அயோத்தியாகாண்டத்திற் கைகேசி சூழ்வினைப்படலத்தில் 66-வது செய்யுளிற் பயின்றுவரும் 'சாதுகை மாந்தர்' என்றதொடரின்பொருளைக்குறித்து, ஒன்றோடொன்று இயைபில்லாத மூன்று அபிப்பிராயங்கள் செந்தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. அவைவருமாறு:—

(1) 'சாதுகை' யென்பது 'சாதகை' யென்றிருத்தல்வேண்டும். பொருள்: 'சாவக்கடவ'; (அஃதாவது) 'மூப்பான்முதிர்ந்து தளர்வெய்தி எழுந்துவிழுந்து புறண்டு உருண்டு வருந்தும்' மாந்தர். (ஸ்ரீமாந்- T. N. அப்பனையங்காரவர்கள்)

(2) 'சாதகை' யென்பதுதான் பாடமாதல்வேண்டும்; அது 'ஸாகெதழ' என்றதன் மரூஉ. பொருள்: அயோத்தியா நகரத்தின்பெயர். அந்நகரிலுள்ள மாந்தர் குறிக்கப்படுகின்றார்கள். (ஸ்ரீமாந்- இராமையங்காரவர்கள்.)

(3) 'சாதுகை' யென்பது 'ஸாயுகஃ' என்றதன் திரிபு. ககரம் ஸ்வார்த்திகப் பிரத்யயமாகவந்தது. பொருள்: 'சற்குணம்', 'சாந்தம்'. (ஸ்ரீமாந்- K. G. சேஷையரவர்கள்).

இம்மூன்று பொருள்களுள் எது அங்கீகாரம்பெறுதற் குறியதென நிச்சயிக்க முயலுவோம்.

முதலாவதாக, ஸ்ரீமாந்- அப்பனையங்காரவர்கள்கூறும் பொருளை யெடுத்துக்கொள்வோம். இப்பொருள் சிறப்பின்மையோடொழியாது கவியின்பத்தினையும் அறவே கெடுத்துவிடுகின்றது. இவ்வாறுதல் இராமையங்காரவர்களால் நன்கு காட்டப்பட்டிருக்கின்றது. அன்றியும், அச்சுப்புஸ்தகத்திலும் ஏட்டுப்பிரதிகளிலும் உளதாய பாடத்தினின்று இப்பொருள் பெறப்படுவதன்றும். 'சாதுகை' யென்ற பாடத்தினைச் 'சாதகை' யென்று ஆதாரமில்லாது திருத்தியமைத்துப் பொருள்காணுதல் சிறிதும் ஏற்புடையதாகாது. தாம்கைக்கொண்டபாடம் ஏட்டுப்பிரதி

களில் உளதாகக்காட்டப்படவில்லை. முற்படக்கருதிக்கொண்டபொருளுக் கேற்பத் திருந்திய பாடமொன்று கற்பித்துக்கொள்ளப்பட்டமை வெளிப் படை. கடைசியாய், 'சாதுகை மாந்தர்' என்றதொடர் கைகேசி சூழ் வினைப் படலத்தில் மாத்திரமேயன்றி யுத்தகாண்டத்தில் மீட்சிப்படலத் தின்கண்ணும் காணப்படுகின்றது. ஐயங்காரவகளது பொருள் இவ் இரண்டாவதுபிரயோகத்திற்குச் சிறிதும் பொருந்துமாறில்லை. இது பின்னர்த் தெளியப்படும்.

இரண்டாவதாக, ஸ்ரீமாந். ரெ. இராமையங்காரவர்கள் எழுதிவெளி யிட்ட பொருளை நோக்குவோம். இது மேலைப்பொருள்போன்று கவி யின்பத்தினைக் கெடுத்துவிடுவதன்று. எனினும், 'சாதகை' யென்று ஆதாரமில்லாது மாற்றிக்கொண்ட பாடத்தினின்றும் இப்பொருள் பிறந்ததாகலின், முற்கூறிய ஆக்ஷேபங்களெல்லாம் ஈண்டும் வலியுடை யனவேயாகும். அன்றியும், 'அயோத்தியாபுரியிலுள்ள மாந்தர்' எனக் கூறினாலன்றிப் பொருள்சிறவாதெனக்கொண்டு 'சாதுகை' யென்பது 'ஸாகேதபு' என்பதன் மரூஉவாதல்வேண்டுமென்று துணிகின்றார்கள். ஆனல் செய்யுளின்கண்ணேயே 'அவ்வூர்ச் சாதுகை மாந்தரெல்லாம்' என வருகின்றது. இங்கே 'அவ்வூர் என்பது அயோத்தியையன்றிப் பிறி தொன்றனையும் குறிக்கமாட்டாது. 'அவ்வூர்' என வந்ததன்மேலும் நகரத்தின் பெயர் வந்ததெனல் சிறிதும் பொருந்துவதன்று. இராமை யங்காரவர்கள் 'அவ்வூர்'எனச் செய்யுளில் வந்திருப்பதனைக் கவனித் தார்களில்லையென்று எண்ணுகிறேன். 'சாதகை'யென்பது 'ஸாகேதபு' என்றசொல்லின் மரூஉவாகலாம் என்றுகொள்ளுவதிலும் பெரியதோர் ஐயப்பாடு நிகழ்கின்றது. கடைசியாய் மீட்சிப்படலத்திற்காணும் பிர யோகத்திற்கு இப்பொருள் ஒருவகையானும் அமைவுடையதாகாது.

இங்ஙனமாக, ஸ்ரீமாந்- T. N. அப்பனையங்காரவர்களும், ஸ்ரீமாந்- இராமையங்காரவர்களும் கூறியபொருள்கள் பலவகையானும் ஏற்புடை யனவாகாமை தெளிவாம். இனி எஞ்சிநிற்பது ஸ்ரீமாந். K.G. சேஷைய ரவர்கள் தந்துள்ளபொருளொன்றே. அப்பொருள் பொருந்துவதாகு மாவென ஆராய்தற்குமுன்பு, மீட்சிப்படலப்பிரயோகத்தினை நன்குநோக் கிக் கொள்ளுதல் வேண்டும். ஒரு சொல்லின்பொருள் இன்னதெனத் துணிதற்கு, அச்சொல் பிரயோகிக்கப்படுமிடங்களையெல்லாம் ஒருங்கு வைத்தாராய்தல் பெரிதும் பயனுடையதாகும். பிரயோகம் வருமாறு:—

ஆதலா னரக்கர்கோவே யடுப்பதன் றுனக்குமின்னே
சாதுகை மாந்தர்தம்மைத் தடுப்பதென் றருளிச்செங்கண்
வேதநாயகன் குனிப்ப வெய்துயிர்த்தலக்க ணெய்திக்
கோதிலா மனனுமெய்யுங் குலேந்தனன் குணங்கடேயோன்' மீட்சி 54.

இச்செய்யுள் விபீஷணனைநோக்கி இராமபிரான் கூறுவதாகவுள்ளது. இராவணவதம் முடிந்ததும் விபீஷணனது பட்டாபிஷேகம் நிகழ்கின்றது; பின்னர் சீதாதேவியைத் தம்மிடம் கொண்டுவரும்படி இராமமூர்த்தி கட்டளையிடுகின்றார்; கட்டளையின்படியே சீதையென்னும் கற்புக்கரசியை ஸ்நானம்செய்வித்து ஆபரணாதிகள் அணிவித்துச் சிவிகையிலேற்றிக்கொண்டு செல்லுகின்றனர்; அப்பொழுது காணுதற்குவந்த தேவர்கள், தேவமாதர்கள், ரிஷிகள், ரிஷிபத்தினிகள், வித்தியாதரஸ்திரீகள் முதலானோர் (மீட்சி - 49) கும்பலாய்த்திரண்டு நெருங்க, சிவிகை முன்பின்செல்லமாட்டாது தடைபடுகின்றது; சீதையைப்பாதுகாத்து உடன்சென்ற அரக்கர்கள் அவர்களை யகன்றுபோம்படி வெருட்டுகின்றார்கள்; இங்ஙனம் நேர்ந்த குழப்பத்தால் கருங்கடல் முழங்கியதுபோல் ஒலியெழுகின்றது; இராமபிரான் ஒலியின் காரணத்தை முனிவர்பால் வினவியறிந்துகொண்டு தம்கருத்தை இச்செய்யுளால் வெளியிடுகின்றார். விருப்பமிகுதியாற் காணவந்தோரை வெருட்டியோட்டிவிடுதல் தக்கதன்றென விபீஷணனுக்கு அருளிச்செய்யப்படுகின்றது: குணங்களால் தூயோனாகிய விபீஷணனும் தான்செய்த அபசாரத்திற்குமனம்வருந்திக் குலேவுறுகின்றான்: இதுவே செய்யுளின் கருத்து.

இங்கே தேவர்கள், ரிஷிகள், ரிஷிபத்தினிகள் முதலாயினோர் 'சாதுகைமாந்தர்' எனக்கூறப்படுகின்றனர். இவர்கள் சாதற்குரிய பருவத்தினராயிருந்தார்களென்றேனும் அல்லது அயோத்திபாநகரிலுள்ளவர்களென்றேனும் கொள்ளுதல் சிறிதும் பொருந்தாமை யெளிதின் அறியலாம். இடம், பருவம், வர்க்கம், ஆச்ரமம், லிங்கம் என்பனவற்றுள் யாதானுமொன்றனை 'சாதுகை' யென்ற சொல்குறிப்பதுமன்று. ஏனெனின், இவ்வனைத்திற்கும் பொதுவாகவேபிரயோகம்உளது. கைகேசி சூழ்வினைப்படலத்துச் செய்யுளில், தசரதமன்னரோடொத்த மாண்புடைப்பெருமக்கள் உணர்த்தப்படுகின்றனர். ஆகவே, தேவர்கள், முனிவர்[illegible] ரிஷிபத்தினிகள், மாண்புடைப்பெருமக்கள், என் றிவ்வனைவர்[illegible] பொதுப்படவுள்ளதொரு குணவிசேஷத்தையே 'சாதுகை' [illegible] அடைமொழிகுறிப்பதாகல் வேண்டும். குணங்களால் தூயராம் [illegible]ய நாம்வியவகரிக்குஞ் சொல் உணர்த்துமென்று கொள்ளுதல் [illegible]ருத்தமானதேயாகும். இப்பொருளொன்றே கொள்ளத்தக்கது.

[illegible]வ பொருளென்பது வேறொருவகையானும் தெளியக்கிடக் [illegible]ட்டுப்பிரதிகளில் பாடபேதங்கள் மலிந்துகாணப்படுதற்குப் [illegible]ள் உள. அவற்றுளொன்று அரிதுணர்சொற்களும் கருகற [illegible]ந்தவிடங்களில் எளியசொற்களை ஏடெழுதுவோர் பெய்து

விடுதலாம். எட்டுப்பிரதிகளை யொப்புநோக்குவதிற் பழக்கமுடையார்க்கு மேலதன் உண்மை எளிதின் அறியலாகும் இவ்வகையான நோக்கினால் ஒருபாடத்தின் பொருளை ஆண்டைக்குரிய பிறிதொருபாடபேதம் ஓரோவிடங்களில் விளக்கவல்லதாயிருக்கும். என்னிடமுள்ள இரண்டு இராமாயண வட்டுப்பிரதிகளில் ஒன்றின் கண்ணே 'சாதுதைமாந்தரெல்லாம்' எனப்பாடங்காணப்படுகின்றது. 'சாதுதை' யென்பது 'ஸாயுதா' என்னும் வடமொழிப் பண்புப்பெயர்ச்சொல்லின் 'ஆ' ஈறு 'ஐ' யாகத் திரிந்த தற்பவமென்பது வெளிப்படை இச்சொல்லின்பொருள் அகந்தூய்மை. ஆகவே 'சாதுதை' யென்ற பாடபேதம் 'சாதுகை' யென்ற பாடத்தின்பொருளை விளக்குவதோடு அச்சொல்லின் உற்பவத்தையும் தெரிக்கின்றது. இதற்கேற்ப ஸ்ரீ-மான் சேஷையரவர்களும் 'ஸாயு' என்றதன் அடியாகப் பிறந்ததெனக்கூறியுள்ளார்கள்.

ஆனால் 'ஸாயுக' என்பது வடமொழிரூபமென்றும் ககாரம் ஸ்வார்த்தத்தில் வந்த பிரத்தியயமென்றும் ஸ்ரீஐயரவர்கள் கருதுகின்றார்கள். 'ஸாயு' என்பது ஸ்வார்த்திகப் பிரத்தியயம்பெற்று 'ஸாயுக' என்றரூபத்தோடு வடமொழிநூல்களிற் பயின்றுவந்திருப்பதாகத்தெரியவில்லை. ஐயரவர்களும் பிரயோகமொன்றுங்காட்டினார்களில்லை. அன்றியும், 'ஸாயுக' என்பது தமிழில் 'சாதுகை' யென வரமாட்டாது. இவ்விருகாரணங்களாலும் ஸ்ரீஐயரவர்கள் தந்துள்ள சொல்வரலாற்றினை அங்கீகரித்தற்கண்மலைவுண்டாகிறது. 'சாதுதை' என்னும் பாடத்தினைக் கைக்கொள்ளுதல் நேரிதெனத்தோன்றுகிறது.

வேறொருமுறையாற் சொல்வரலாறு கூறுதலும் அமைவுடைத்தாகும் 'ஸாயுதா' என்பதனோடு பெரிதும் பொருளொற்றுமையுடைய 'ஸாத்விக' என்றசொல் 'சாதுகை' யெனத்தமிழில் மருவிவந்ததெனக் கொள்ளுதலும்தகும். ஸ்ரீசேஷையரவர்களது முடிபில் 'ஸாயுக. என்றொருரூபம் வடமொழியில்உளதோவெனச் சந்தேகித்தற்கிடமுண்டு' இதுபோன்ற சந்தேகம் இவ் இரண்டாவது சொல்வரலாற்றிற் சிறிதும் இல்லை.

ஆகவே 'சாதுகை' யென்பதனாற் கம்பநாடர் கருதியபொரு[...]றுயப் பாட்டிற் கிடனின்றி விளங்குகின்றது. 'குணங்களால் தூயா[...]மை' யென்பதே அதன்பொருள். அச்சொல்லின் வரலாற்றினைநோக்[...]து இருவேறுமுடிபுகள் வரல்கூடும். 'சாதுகை' யென்பதே [...]ன பாடமாயிருப்பின் அப்பொழுது அதனை 'ஸாத்விக' எ[...] உவாகக் கொள்ளல்வேண்டும். 'சாதுதை' யென்பது சுத்[...] அப்பொழுது அது 'ஸாயுதா' என்பதன் தற்பவமா[...] அமையும்.

எஸ். வையாபுரி[...]

சாதுகை மாந்தர்.

"மாதர்கள்கற்பின்மிக்கார்" என்ற கம்பராமாயணச்செய்யுளைப் பற்றிச் 'செந்தமிழ்' ப்பகுதிகளிற் சமீபத்திற்சில அரியகட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. அவைகள் ஐயநீக்கத்தின்பொருட்டு வரையப் பட்டுள்ளனவாயினும், என்மனத்தில் அவை சிற்சில ஐயப்பாடுகளைக் கிளப்பினவாகையால், இச்சிறு நிருபமெழுதத்துணிந்தேன். சோட சாவதானம் சுப்பராயசெட்டியார் உரையுடன்தக்கோலம் இராமசாமிநாயுடு வெளியிட்டபதிப்பிலும், திருமயிலைவித்வான் சண்முகம்பிள்ளையுரை யுடன்திருவாலங்காடு இராமசாமிமுதலியார் வெளியிட்ட பதிப்பிலும், நமசிவாயமுதலியார் தமது நிரஞ்சனவிலாசஅச்சியந்திரசாலையிற் பதிப் பித்த மூலம் மட்டுமடங்கின பிரதியிலும், அச்செய்யுள் பின்வருமாறு காணப்படுகிறது :—

"மாதர்கள்சற்பின்மிக்கார்கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வதிட்டனொத்தார்வேறுளமகளிரெல்லாம்
சீதையையொத்தாரன்னுடிருவினையொத்தாளவ்வூர்ச்
சாதுகைமாந்தரெல்லாந்தயரதன்றன்னையொத்தார்."

ஆனால் இதன் மூன்றுமடியின்கடைமொழியையும் நான்காமடியின் முதன்மொழியையும்மாற்றி "மற்றைச்சாதகை" எனப் பாடங்கொண்டு ஸ்ரீமத் T. N. அப்பனையங்காரும் ஸ்ரீமத் ரெ. இராமையங்காரும் வெவ் வேறு பொருளுதவியிருக்கிறார்கள். அவ்வாறு பாடபேதப்படுத்த ஆவசியகம் நன்குபுலப்படவில்லை. "அவ்வூர்ச்சாதுகைமாந்தர்" என்ற பாடம், கல்வியிற்சிறந்த தமிழ்ப்புலவர்கள் உரைதீட்டி வெளியிட்ட பதிப்புக்களிலும், வேறு அச்சுப்பிரதிகளிலும் காணப்படுவது பிழையா? அத்தொடர் பொருளமையப்பெறுது வறுமொழியாகவேற்பட்டால், அதைப் பொருள்படமாற்றுதல்வழுவன்று; முறைமையேயாம். "அவ் வூர்ச்[சா]துகைமாந்தர்" என்றதொடர்மொழிக்கு அங்கரிலுள்ள சாந்த மிக்க[வர்]களாவது சற்குணநிறைந்தமனிதர் என்ற பொருள் பொருத்தமா யின்[அப்]ப்பாடத்தைக் கைக்கொண்டு பொருள்கூற விழுக்காமோ! ச[ந்த]ம் நோக்கினும் ஒவ்வாதோ?

[ஸ்ரீம]த் அப்பனையங்கார் காரணங்கூறுமல், சாதுகைமாந்தரேல்லாம் [என்]பது சாதகைமாந்தரேல்லாம் என்றிருக்கவேண்டுமென்று [தோன்று]றது' என்றெழுதி, அதன் பொருள் சாவக்கடவ மூப்பான் [...]தளர்வெய்திஎழுந்து விழுந்து புறண்டு உருண்டு வருந்தும் [எ]ால்லோரும்' என்று விரித்துரைத்து அத்தகையார் இராம

பிரானை முடிசூட்டிப்பார்க்கும் செல்வப்பேறு பெற்றிலமேயென்றெண்ணி வருந்துதலால், கைகேசி சூழ்வினையால் அப் பரிதாபநிலை அடைந்துழலும் தயரதனை யொத்தார் என்று விளக்கினர். சாதகைமாந்தர் என்றதே சுத்தபாடமாக நினைக்கினும், இவ்வாறு பொருள் கொள்ளுதல் உசிதமாகாதென்று என் சிற்றறிவிற் ரோன்றுகின்றது. கவிவன்னிப்பான் தொடங்கிய செய்தியும், சந்தர்ப்பமும் யாவை? சக்ரவர்த்தித் திருமகனார் "நாளையேபுவியமை மணிமுடிபுனையும்; இக்கோநகாணிக" என்றுவள்ளுவர் பேரியடிக்கக்கேட்ட ஆடவர் மகளிராகிய இருபாலரும்.

> ஆர்த்தனர் களித்தன ராடிப் பாடினர்
> தூர்த்தனர் நீணிதி சொல்லி னர்க்கெலாம்

என்று கவி சிறப்பித்துக்கூறும்படியான நிலையில் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினராகி, 'ஆழியான்முடி சூடுநாளிடை யானபாவியி தோரிரா' எப்பொழுது விட்டகலுமென ருத்திரத்தோடு காத்திருந்த நகரவாசிகள் இராமன் முடிசூடும்வைகல் கண்ணுற்ற காலத்து அவ்வூரிற் பொங்கிய வுவகை வெள்ளத்தைச் 'சொல்லலாம்வகை யெம்மனோர்க்காவனவல்ல வென்னினும் உற்றபெற்றியுணர்த்துவாம்'என்றுகூறிக் கம்பர் இப்பகுதி தொடங்குகிறார். இளமங்கையரைக் 'குஞ்சரமனையார்' என்ற செய்யுளிலும், இளம்புருடரைப் 'பொங்கிய வுவகைவெள்ளம்' என்றசெய்யுளிலும் வருணித்துக்கூறி, அப்பால் மாதர்கள்கற்பின்மிக்கார் என்ற செய்யுளைக் கம்பர் கூறுகிறார். இச்செய்புள் அந்நாட்டுமாதரும் மைந்தரும் அடைந்த மகிழ்ச்சிமிகுதியைச் சிறப்பித்துக்கூறும் பாட்டு. அவரவர்களுக்குத் தம்மையறியாது மேலெழுந்த மகிழ்ச்சிப்பெருக்குப் பொங்கிவழிவதை உரைக்குமிடத்து, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் சாவக்கடவமாந்தர்கள் என்ற அவாச்சியம் பிரயோகிப்பாரோ? கம்பர் இச்சந்தர்ப்பத்தில் அமங்கலபதமோ அமங்கலதொனிச் சிலேடைப்பதமோ உபயோகித்தாரென்று சொல்லத்துணிவது அத் தெய்விகம்வாய்ந்த சான்றோர் கவித்திறமைக்குப் புன்மையு மிழுக்குங் கற்பித்தவாறுகும். அமங்கல வாக்கோடு நிற்காமல், வெந்துயர்க்கடல்வெள்ளத்தில் நகரத்தினரி[illegible]ருபகுதியார் ஆழ்ந்தார்களென்றும், அந்நிலையில் இராமபி[illegible] தந்தை தசரதனையொத்தாரென்றுங் கூறினல், அது பெருமாள் தி[illegible]சூட்டு விழாக்கொண்டாடும்நாள் புலர்ந்ததென்று பூரித்து எக்களி[illegible]ளங்கிய நகரைச் சிறப்பித்துரைத்த கூற்றுகுமா? கைகேசியின்[illegible] யால் தயரதன், இடியேறுண்ட மால்வரைபோல் மண்ணி[illegible] பொற்றோள்முற்றும் பூழியடங்கப் புரண்டு, கூறுபடக்குங் [illegible] னேலும் வனறுயர் ஆகத்திடைமூழ்கத் தேறுணகிச் செ[illegible] ணய் வானுலகுநோக்கிச்செல்லுங் காலமடைந்தவனயிருக[illegible] இச்சந்தர்ப்பத்தில் ஜனங்களின் தகைமையையொப்பா[illegible] அது சற்றும்பொருந்தாது,

ஸ்ரீமத் இராமையங்காரும் ‘சாதகை’ என்றபாடத்தைக் கொண்டாராயினும், அப்பதத்திற்கு வேறு பொருளுரைக்கின்றார். அவர் கொள்வது சாதகை என்றது தமிழ்வழக்குப்பற்றிச் சாகேதபுரியாகிய அயோத்திநகரை யுணர்த்துமென்பதே. சாதகை இவ்வாறு பொருள் படாதென்று நான் சொல்லவில்லை. அதுவே பாடமாயின், இப்பொருள் மற்றையதினும் உரிமையுடையதாகுமென் றெனக்குத்தோன்றுகிறது. ஆனால், இப்பொருள்கொள்ளினும், ‘சாதகை மாந்தர்’ என்ற பாடத்திற்குச் சில இடர்ப்பாடுகளுள. சாதகையென்றசொல் அமங்கல தொனிச்சிலேடைப்பதமாயிருத்தல் வெளிப்படை. அன்றியும், “அன்ன மாநகர்........உற்றபெற்றி யுணர்த்துவாம்” என்று முன்கூறியிருக்க இச் செய்யுளிற் சாதகைக்கண் வாழுமாந்தரென்று மறுமுறைகூற ஆவசியகமில்லை. அதனால், சாதகை எதுகைநோக்கிச்சேர்த்த பதமாய்முடியும். அது கவசுச்சிறப்பன்று. மேலும், முன் குறித்திருப்பதுபோல, மூன்றாமடியின் ஈற்றுமொழி ‘அவ்வூர்’ என்றாயின், நான்காமடியின் முதன்மொழியாக வைக்கப்பெறும் சாதகை இடத்தைக்குறிக்குமாயின் வீண்சொல்லாகும். செய்யுளின் சீர்நிரப்புதற்பொருட்டுக் கம்பர் இப் பதத்தை வாளாதொடுத்தாரென்று சொல்லவேண்டும்.

அச்சுப்பிரதிகளிற்காணும் ‘சாதுகை’ என்றபாடத்திற்கு யாது குற்றமேற்பட்டது? ஸ்ரீமத்- இராமையங்கார் அதற் கோர் குறைகூறுகின்றார். அவர் கூறுவதிவ்வாறு: “இவ் வடைச்சொற்குச் சாதுஜனங்கள் எனப் பொருள்கொள்வதால் அந்நகரில் துஷ்டருஞ் சிலருளரோ என்றும் அவரென்னுற்றனரோ என்றும் சங்கிக்க இடமேற்படுகிறது. அன்றி, நகரமாந்தரனைவரையுங்கூறியது மாகாது.” இவ்வைய மெளிதில் தீரும் வகையதாம். “கொடுமனக்கூனி” ‘சூழ்ந்ததீவினைநிகர்கூனி’ ‘உள்ளமுங்கோடிய கொடியாள்’ என்பனபோன்ற வருணனைக் கிலக்கான மந்தரையும், ‘தீயவள்,’ ‘கொடியாள்,’ ‘மரந்தானென்னு நெஞ்சினள்’ ‘இன்னுயிருண்ணும் எரியன்னாள்’ என்பனபோன்ற சிறப்புமொழிகளால் ...னிக்கப்படும் கைகேசியும் அயோத்திநகரிலிருக்குமளவில், அவ்வூரில் ...ருஞ் சிலருளரோவென்று ஆசங்கைதோன்றக் காரணமெனனே? ...ி, துஷ்டர்கள் என்னுற்றனரென்று வினவுகிறார். அதனுடன், ...ந்தரனைவரையும் சாதுகை என்றபதத்தாற் கவிகூறியது பொருந் ... என்கிறார். சத்காரியமொன்றுநிகழத் துஷ்டர்கள் யாண்டுஞ் சங் ...டையார். கூனியைப்போல மனம்புழுங்கிக் கைகேசியைப்போல ...ருக்குக் கொடிய இடர்விளைப்பர். சாதுக்களே நற்சடங்குநினைத் ...ண்டுங் களிப்பர். களிப்போரானமாந்தரிற் சிலர் இளையபெருமா... சிலர் வசிட்டனையும், சிலர் தயரதனையும் ஒத்தாரென்று கூறின... ..., அவ்வூரிலுள்ளாரெல்லாரையுங்கூறுவதாகக் கம்பர் சொல்ல... ... அதுபற்றியே ‘உற்றபெற்றியுணர்த்துவாம்’ (தக்கவகையை ...பாம்) என்ற கவிக்கூற்றுப் பிறந்ததென்று நினைக்கிறேன். ஒருக்

கால் 'மற்றை' என்ற பாடத்தால் ஸ்ரீமத்- இராமையங்கார்க்கு நகரில் வாழ்வோரனைவரையும் பற்றிய சந்தேகங்கிளம்பியதுபோலும். 'மற்றை' என்றதே பாடமாகக் கருதினும், அப்பதத்தை அசைநிலையாகவாவது அல்லது வினைமாற்றுப் பொருளிடைச்சொல்லாகவாவது கொள்ளக்கூடுமென் றெண்ணுகிறேன்.

சாதுகைமாந்தர் என்றதொடரை இவ்விடத்துமாத்திரமன்று வேறிடத்தும் கம்பர் பிரயோகித்துள்ளார் யுத்தகாண்டம் மீட்சிப் படலத்தில்

" ஆதலானரக்கர்கோவேயடுப்பதன்றுனக்குமின்னே
சாதுகைமாந்தர்தம்மைத்தடுப்பதென்றருளி...... "

என்றுவருதல் கவனிக்கத்தக்கது. ஈண்டுச் சாதுகைமாந்தர் என்று கூறியகவி ஆண்டு மதேப்பொருள்படச் சாதுகைமாந்தர் என்றார். இவ்வாறு ஆன்றோரெடுத்தாண்ட சொல்வழக்கை வழுவெனக்கொளதல் முறையன்று. இக்காலத்துத் தமிழ்மொழியிற் 'சாதுகை' என்றபதம் வழங்கவில்லையே என்பார்க்கு முற்காலத்து வழக்கிலிருந்தனவாக ஆன்றோர்பிரபந்தங்களால்விளங்கும் இள்கி, தேனித்தல் உவலை போன்றபதங்களை யிலக்காகக்காட்டுவதோடு, எவ்வை (எம்மிளையாள்) என்னை (என் தந்தை) களிறு (ஆண்பன்றி) கண்டி (எருமையினுண்) சேவல் (குதிரை) போன்றபலசொற்கள் பிற்காலத்து வழக்கின்மையையுங் காட்டற்பாலது. வடமொழிச்சொற்களாம் சாதுக: சாதுத, என்றவை முறையே சாதுகை, சாதுதை யென்று தமிழில் மாறிவருதவியல்பு, சாதுகைமாந்தர் என்றாலும் சாதுதைமாந்தர் என்றாலும் பொருளொன்றே. இருமொழிகளும் பொருத்தமுடையனவாம். சாதுஜனங்களென்போர் சற்குணமுடையோர்மாத்திரமன்று ஆங்கார மழுக்காறுபோன்றதீக்குணமில்லாதாரும் அப்பதத்திலுள்படுவர். ஆதலா னவ்வூரில்வாழும் அதமரொழிந்த மற்றெல்லோரும் சாதுகைமாந்தர் என்றபதத்தாற் குறிக்கப்பட்டனராவர். அங்கு அதமகுணமுடையாரிருப்பாராகில் அத்தகையார் இராமசந்திரமூர்த்தியின் மகுடாபிஷேகம் நடக்கப்போகிறதாகக் கேட்டுமனப்புழுக்கமுற்றனரோ அல்லது மனமலர்ச்சி அடைந்தனரோ என்ற வியவகார மிங்கெழ வேதுவில்லை. அன்றி, மலையாள[illegible]கிற் சாதுஜனங்களென்றபதம் ஏழைஜனங்கள், பேதைஜனங்க[illegible]று பொருள்படுகிறது. அதை நோக்கப் பண்டைக்காலத்தில் த[illegible]ம் அம்மொழி யதுபோன்றபொருளு முடையதாயிருந்திருக்கலா[illegible]ன் றையுறற் கிடமுண்டு. அற்றாயின், அவ்வூ ரேழைமாந்தரு[illegible] வர்த்தித்திருமகனுரைத் தங் காதற்புதல்வனபோனினைத்துத்[illegible] சக்கிரவர்த்தியேபோல மகிழ்ந்தனரென்றால், ஏனையோர்மகிழ்[illegible] காணுக்கடல்போன்றதெனபது சொல்லாமலே விளங்கும். இ[illegible] கள்பற்றிச், சாதுகைமாந்தர் என்பதே சரியானபாடமென்[illegible] தோன்றுகிறது.

கே. ஜி. சேவை[illegible]

ஸம்ஸ்க்ருத வ்ருத்தமஞ்ஜரி.

(Sanskrit Prosody)

(கூகூ-ம் டக்கத்தொடர்ச்சி)

10. பங்க்தி

4. மேகவிதானம் [14 மாத்ரா] ஸ ஸ ஸ க
நநஞ நநஞ நநஞ ஞ
ரமணி ஸுமதி

வரதா மணிநீ யெனவோ ரில்
வருகா தெதுதா னதில்லா ரா

5. மனோரமா [14-மா] =ந ர ஜ க
நநந, ஞந, ஞந, ஞந, ஞ

6. மணிராகம் [15]=ர ஸ ஸ க
ஞந ஞநந ஞநந ஞஞ

7. பணவம் [16]=ம ந ய க
ஞஞ ஞநந நநஞ ஞஞ

8. மயூரஸாரிணி [16]=ர ஸ ர க
ஞந ஞந ஞந ஞந ஞஞ

9. சுத்தவிராட் [16]=மஸஜக
ஞஞ, ஞநந, ஞந, ஞநஞ.

11. த்ரிஷ்டுப் [14]=ந ந ஸ க க
நநநந நநநந ஞஞஞ

11. ஸுயத்ரகா [14]=ந ந ர ல க
நநநந, நநஞ, நஞநஞ

12. ஸுமுகீ [14] ந ஜ ஜ ல க
நநநந ஞநந ஞநநஞ

13. பாணரஸம் (மௌக்திகமாலா) [16]=பதநகக
=ஞநநஞஞ நநந நஞஞ
பங்க்தி சசிவதஞ

14. வஸந்தமாலிகா [17] ஸ ஸ ஜ க க
நநஞ நநஞ நஞந ஞஞ
ரமணீ ஸதி

15. உக்தா [17]=த ஜ ஜ க க
=ஞஞ நநஞ நநஞ நஞஞ

16. வைதிகா [17]=ர ஜ ர ல க

=ஞந ஞந ஞ, ந, ஞந ஞந ஞ

17. உபஸிதம் [17]=ஜ ஸ த க க

=நஞந நநஞ ஞஞ நஞஞ

18. ஏசரூபம் [18]=ம ஸ ஜ க க

=ஞஞ ஞநந ஞ நஞ நஞ ஞ

முகுலம் ஸதி

12. ஜகதீ

16. உஜ்வலா [15]=ந ந ப ர

=நநந நநந ஞநந ஞநஞ

17. புஷ்பிதாக்ரா [16]=ந ந ர ய

=நநநந, நநஞ, நஞந, ஞஞ

18. ப்ரியம்வதா [16]=ந ப ஜ ர

=நநந ஞநநந, ஞநஞநஞ

19. குஸுமவிசித்ரா [16]=ந ய ந ய

=நநநந ஞஞ, நநநந ஞஞ

= 2 சிவதஞ

20. நவமாலினீ [16]=ந ஜ ப ய

=நநந நஞந ஞநந நஞஞ

21. புடம் [17]=ந ந ம ய

=நந நந நநஞ ஞஞ ந ஞஞ

22. லளிதா [18]=த ப ஜ ர

=ஞஞ, நஞந, நநஞ, நஞந,ஞ

13. அதிஜகதீ

7. சந்த்ரிகா [18]=ந ந த ர க

நநநந, நநஞ, ஞநஞநஞ ஞ

8. சஞ்சரீகாவளி [23] ய ம ர ர க

=நஞஞ ஞஞஞ ஞநஞ ஞநஞஞ

R. S.* நாராயணஸ்வாமி ஐயர் *B A.,B.L.,

மதுரை.

செந்தமிழ்த்தீஞ்சுவை.

செந்தமிழ் என்பது செம்மையாகிய தமிழ் எனவிரியும். கொடுந்தமிழின் நீக்குதற்குச் செந்தமிழ்எனப்பட்டது. திரிபுரமெரித்தவிரிசடைக்கடவுளுங் குன்றமெறிந்த குமரவேளும் பொதியமுனிவனும் முரஞ்சியூர்முடி நாகராயரும் நிதியின்கிழவனும் முதலாயசங்கப்புலவர்களால் ஆராய்ந்து செம்மைசெய்யப்பட்ட தமிழ்என்பது பொருள். "கண்ணுதற்பெருங்கடவுளுங்கழகமோடமர்ந்து—பண்ணுறத்தெரிந்தாய்ந்தவிப்பசுந்தமிழ்" என்றார்பிறரும், யாண்டிருந்தாராய்ந்தாரோவெனின் பாண்டிநாட்டின்கணிருந்தாராய்ந்தாரேயாவர். அது, "செந்தமிழ்நாடே,—" சந்தனப்பொதியச் செந்தமிழ்முனியுஞ்—சௌந்தரபாண்டியனெனுந்தமிழ்நாடனுஞ்—சங்கப்புலவருந்தழைத்தினிதோங்கு—மங்கலப்பாண்டிவளநாடென்ப, என்பதனாலறியப்படும். பாண்டிநாட்டினுள்ளுங் கடல்கொண்டமதுரையேயாம்: அது, இறையனாரகப்பொருளுரையானறியப்படும். இதனாற் செந்தமிழ்நிலம்பாண்டிநாடென்பது அறியப்படும்.

இனித்தொல்காப்பிய உரையாசிரியர்கள் செந்தமிழ்நிலம், "வைகையாற்றின்வடக்கும், மருதயாற்றின்றெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின்மேற்கும்" என்ப. அதனாற்செந்தமிழ் நிலம் சோழநாடெனவுணரக் கிடக்கின்றது. பிறரும், "செந்தமிழ்நாடே "மன்றவாணன் மலர்திருவருளாற்—றென்றமிழ்மகிமைசிவணிபசெய்த—அடியவர்கூட்டமுமாதிச்சங்கமும்—படியின்மாப்பெருமைபரவுறுசோழனுஞ்—சைவமாதவருந்தழைத்தினிதோங்கு—மைபறுசோழவளநாடென்ப" எனக்கூறுப. சிலர் "செந்தமிழ்க்குவரம்பெனச்செப்பிய—முந்துகாஞ்சியின்" எனக்கச்சியப்பசிவாசாரியர்கூறியவாறு தொண்டைநாட்டுக்காஞ்சிபுரம் என்ப: எனினும் உண்மையைநோக்குமிடத்துச் செந்தமிழ்நாடு பாண்டிநாடேயாம்: அது எதனாலறியப்படுமெனின்?

"தென்பாண்டிகுட்டங்குடங்கற்காவேண்பூழி—பன்றியருவாவதன் வடக்கு—நன்றாய—சீதமலாடுபுனனாடு செந்தமிழ்சே—ரேதமில்பன்னிட்டாட்டெண்" என்னுஞ்செய்யுளிலே கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள்

புனனாடு (=சோழநாடு) மொன்றாகச் சொல்லப்பட்டமையானும், முச்சங்கமும் பாண்டிநாட்டிலிருந்ததாகவே இறையனாரகப்பொருளுரைகூறலானும், முதற்சங்கத்திறுதியிற்செய்யப்பட்டதாக எண்ணப்படும் தொல்காப்பியம், "நிலந்தருதிருவிற்பாண்டியனவையத்" தரங்கேற்றப்பட்டதாக அந்நூற்சிறப்புப்பாயிரங்கூறலானும், அப்பாயிரத்தின்கண் "முந்துநூ"லென்றது அகத்தியத்தையேயாதலின் அவ்வகத்தியத்தைச்செய்தற்கிடமாய பாண்டிநாடே, "செந்தமிழியற்கை சிவணிய நிலமென" அப்பாயிரத்துக்கூறப்பட்டதாதலானும் அறியப்படும் என்க. இன்னும் "தேம்பொழியுஞ் செந்தமிழ் நாட்டினிலெங்குஞ்சென்றிறைஞ்சி" என்னுந் திருத்தொண்டர்புராணச்செய்யுளடியானும் "கண்ணார்கண்ணிக் கடுந்தேர்ச்செழியன்—தமிழ்நிலைபெற்றதாங்கருமரபின்—மகிழ்நனைமறுகின் மதுரையும்" என்னுஞ்சிறுபாணாற்றுப்படைச்செய்யுளடிகளானும் "உயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழ்" என்னுந்திருக்கோவையார்ச்செய்யுளடியானும் அஃது துணிபேயாமென்க. இனித்தமிழ் நாட்டின்கண் எவ்வெந்நிலத்துவழங்கிற்றோ அவ்வந்நிலமே செந்தமிழ் நிலமாக்கொள்ளப்பட்டனஎன்பாருமுளர். அங்ஙனமாயின், "செந்தமிழியற்கை சிவணியநிலத்தொடு" எனவும் "செந்தமிழ்நிலஞ்சேர்பன்னிரு நிலத்தினும்" எனவும் ஆசிரியர் வரையறைகூறுூர். ஆதலின் அது பொருந்தாது. இன்னுமிஃதாராயத்தக்கது, வாய்த்துழி ஆராய்தும்.

இனித் தீஞ்சுவை என்பது இனிமையாகியசுவை எனவிரியும். மற்றைச்சுவைகளின் நீக்குதற்குத் தீஞ்சுவைஎன்றும் ஏனையமொழிகளெல்லாஞ் செவிக்கின்பம்பயவாது புளிப்புச்சுவை, கைப்புச்சுவை போலாக இஃதொன்றே செவிக்கின்பம்பயத்தலின் செந்தமிழ்த்தீஞ்சுவை எனப்பட்டது. தமிழ் செவிக்கு மிகவு மின்பம்பயப்பதொருமொழி என்பதுபற்றியே "உரையுறைதீந்தமிழ்" என்றும் "ஆய்கின்றதீந்தமிழ்" என்றும் பிறருங்கூறுப. இன்னுந் திருவிளையாடற்புராண நூலாசிரியரும், நடராசபிரான் தென்றிசைநோக்கி சமீபித்துவந்துவந்து ஆடுவது தமிழ்ச்சுவையைத் தன்செவியின் மாந்துதற்கோ: என்னுங் கருத்தமையச்செய்த, "கடுக்கவின்பெறுகண்டனுந்தென்றிசைநோக்கி-யடுக்கவந்து வந்தாடுவானாடலினிளைப்பு—விடுக்கவாரமென்காறிருமுகத்திடைவீசி—மடுக்கவுந்தமிழ்திருச்செவிமாந்தவுமன்றோ" என்னுஞ் செய்யுளானும், பசிகொண்டவர் அமுதைஉண்டபொழுது அவ்வமுது அப்பசியைத்தணித்

தலேயன்றி, பசிதணிந்தவுடன் வெறுப்புங்கொடுக்கும், உண்ணும் பொழுது உண்ணுவார்க்கு மனவுருக்கத்தையுங் கொடுக்கமாட்டாது; இத்தமிழாகியவமுதோ உணர்வாகிய பசியெடுத்துண்பவர்களுக்கு இன்பம்பயத்தலானே மீட்டும் மீட்டும் உண்ணவேண்டுமென்னும் விருப்பத்தைஉண்டாக்குதலான் அப்பசியைவளர்ப்பதும், அப்பசியைவளர்த்தலானேவெறுப்புக்கொடாததும், தன்னே உண்ணுவாரைமனமுஞ்செவியுமுருகிநின் றுண்ணச்செய்வதுமாயுள்ளது என்னுங்கருத்தமைய, "உவட்டாதணேயாதுணர்வெனும்பசியெடுத்—துள்ளமுஞ் செவியுமுருகிநின்றுண்ணும்—பெருந்தமிழமுதம்." என்றும், மகளிர்தனங்களுக்கு ஒப்புக்கூறுங்கால், "தேவர்மருந்துந்தென்றமிழ்ச்சுவையு—மிட்டடைத்தேந்தி" என்றும், கல்லாடரும் செந்தமிழின்பைச் சிறப்பித்துக்கூறுதலானுமறியப்படும். கரும்புக்குத்தீஞ்சுவைபோலச் செந்தமிழ்க்குத்தீஞ்சுவை இயற்கையென்றுசொல்லுவதேயன்றிப் பிறிதொன்றுரைத்தல் கூடாது. எனினும், சீதளதேசங்களிலுள்ளகனிகளினும், உஷ்ணதேசங்களிலுள்ளகனிகள் அதிகம் இனிமைதருதல்போல உஷ்ணதேசத்துப் பாஷையாதலின் இன்பந்தருமென்பாரும், பெரும்பாலும் வலியஉறுப்புக்களிற் பிறவாத எழுத்துக்களாலானமையின் இன்பந்தருமென்பாருமுளர். எங்ஙனங்கூறினும், தமிழ் இன்பம் பயப்பதொன்றென்பதை மறுப்பாரிலர். இய லிசை நாடகம் என்னுமுத்தமிழுள்ளும் இயற்றமிழ் புலவர்க்கே இன்பம்பயக்கும், ஏனைய யாவர்க்குமின்பம்பயக்கும்.

அங்ஙனமாய இச்செந்தமிழ்மொழியும், இயற்சொல், திரிசொல்என இருவகைப்படும். இயற்சொல்லாவது—இயல்பாற் பொருளுணரப்படுஞ் சொல். திரிசொல்லாவது:—அரிதிற்பொருளுணரப்படுஞ்சொல். இவ்விரு சொற்களேயும் சேனவரையர் வழக்குச்சொல்லுஞ்செய்யுட்சொல்லும் என்பர். இவ்விருமொழியுமே செந்தமிழ்நிலத்துமொழியாம். இவ்விருமொழிகளாலுமே சங்கச்சான்ருேர்கள் செய்யுளியற்றினர்கள். திசைச்சொற்களும் வடசொற்களும் அருகிவருதலுமுண்டு. அதுபற்றியே இலக்கியங்கண்டிலக்கணமியம்பிய தொல்காப்பியரும், இயற்சொற்றிரிசொற்களே முன்வைத்தும், திசைச்சொல் வடசொற்களேப் பின்வைத்தும், "இயற்சொற்றிரிசொல் திசைச்சொல் வடசொலென்—றனேத்தேசெய்யுளீட்டச் சொல்லே" என்று கூறுவாராயிற்று. நன்னூலாரும் "திசைச்சொல் வட

சொலணுகாவழி"என அவற்றைச் செந்தமிழ்ச்சொற்களுக்கு மிகத் தூரமாகவைத்துச் சொல்லினர். இங்ஙனம் தமிழோடு ஒப்புமைபெரிதுமுடைய திசைச்சொல் வடசொற்களையே தமிழ்மொழியோடொருங்கொத்து இன்பம்பயப்பவாவென ஆசிரியர் ஒதுக்கிவைப்பாராயின், ஒப்புமை சிறிதுமில்லாத ஆங்கிலச்சொற்களைத் தமிழ்மொழியோடுகலப்பது வேப்பநெய்யை கருப்பஞ்சாற்றோடு கலந்ததுபோலாகுமேயன்றிப் பிறிதொன்றாகாது. திசைச்சொற்களுக்கும் வடசொற்களுக்கும் ஒப்புமை யாதோவெனிற் கூறுதும்:—திசைச்சொற்கள் கொடுந்தமிழாயினும் தமிழொடொருமொழியாதலானும், வடமொழி பெரும்பாலும் எழுத்தொற்றுமையும் இலக்கணவொற்றுமையுமுடைமையானும் ஒற்றுமையுடைய மொழிகளேயாம். எழுத்தொற்றுமையாவது, பொதுவெழுத்துக்கள் யாவும் வடிவானும், உச்சாரணமுறையானும், சிறப்பெழுத்துக்களுள் சிலவொழிய ஏனைய பெரும்பாலும் உச்சாரணமுறையானும் ஒற்றுமையுடைமை. இலக்கணவொற்றுமையாவது:—தமிழில், உயிர் என்பதை அச்சுஎன்றும், மெய்என்பதை அல்என்றும், குறில்என்பதை இரச்சுவம்என்றும், நெடில்என்பதைத் தீர்க்கம்என்றும், வல்லினம்மெல்லினமென்பவைகளைப் பரிசாக்கரமென்றும், யரலவ என்பவைகளை அந்தஸ்த அக்கரம் என்றும், வேற்றுமைகளை விபத்திஎன்றும், வினைமுதற்பொருளைக் கருத்தாஎன்றும், செயப்படுபொருளைக் கருமமென்றும், கொள்பவனைச் சம்பிரதானம்என்றும், நீக்கப்பொருளை அவதிஎன்றும், உடைமைப்பொருளைச் சம்பந்தமென்றும், இடப்பொருளை அதிகாணம் என்றும், விளியைச் சம்போதனமென்றும், உலகவழக்கை இலௌகிகப் பிரக்கிரியையென்றும், செய்யுள்வழக்கை வைதிகப்பிரக்கிரியை என்றும், தொகையைச்சமாசம் என்றும், வேற்றுமைத் தொகையைத்தற்புருடசமாசமென்றும், அன்மொழித்தொகையைவெகுவிரீகி சமாசம் என்றும், பண்புத்தொகையைக்கருமதாரயசமாசம் என்றும், உம்மைத்தொகையைத்துவந்துவ சமாசமென்றும், தோன்றல் திரிதல், கெடுதல் விகாரங்களை ஆகமம் ஆதேசம் லோபமென்றும், உறழ்ச்சியை வைபாடிகமென்றும், உருபுத்தொகைவிரிகளை லுக்கு, அலுக்கு என்றும், தொழிற்பெயரைக்கிருற்பாவமென்றும், வினையாலணையும் பெயரைக்கிருதந்தமென்றும், வினைப்பகுதியைத்தாது என்றும், பெயர்ப் பகுதியைப்பிராதிபதிக

மென்றும், எச்சங்களை ஆர்த்ததாதுகமென்றும், வினைமுற்றுக்களைச்சார்வதாதுகமென்றும், ஆகுபெயரை இலக்கணையென்றும், எடுத்தல் படுத்தல் நலிதல் என்பவைகளை முறையேஉதாத்தம், அநுதாத்தம் சுவரிதம் என்றும், இறப்பு நிகழ்வு எதிர்வு என்பவைகளைமுறையே பூதம்வர்த்தமானம் பௌடிகமென்றும், தன்மைமுன்னிலை படர்க்கை என்பவைகளை முறையே உத்தமமத்திமபிரதமபுருடனென்றும் ஆண்பால் பெண்பால்களை பும்லிங்க ஸ்திரீலிங்கம் என்றும், தொகைவிரிகளைச் சமஸ்தவியத்தபதமென்றும் வடமொழியினுங் கூறப்படுதலின் இருமொழி யிலக்கணமும் பெரும்பாலுமொன்றுதல். தமிழ்க்குரிய விசேடவிலக்கணம், பாலுணர்த்தும்வினை விகுதிகளையுடைமையேயாம். தமிழிலும், ஆண்பால் பெண்பால்களையுணர்த்தும் விகுதிகள் அஃறிணைக்கண் இல்லை. அது என்பது தமிழின்கண் நபும்சகலிங்கம். (அலிப்பாலாகும்) இதுபற்றியே பிரயோகவிவேக நூலாரும்,

> " சாற்றியதெய்வப்புலவோர்மொழிக்குந்தமிழ்மொழிக்கும்
> வேற்றுமைகூறிற்றிணைபாலுணர்த்தும்வினைவிகுதி
> மாற்றருந்தெய்வமொழிக்கில்லைபேர்க்கெழுவாயுருபுந்
> தேற்றியலிங்கமொருமூன்றுமில்லைசெழுந்தமிழ்க்கே.

என்றார். இங்ஙனந்தமிழ்மொழிக்கும் வடமொழிக்கும் பெரிதும் ஒற்றுமை உண்மைகருதியே ஆன்றோர், வடமொழிச்சிறப்பெழுத்துக்களைத் தமிழெழுத்துக்களாகத்திரித்து, வடசொல்எனத்தமிழில் வழங்குவாராயினர். அங்ஙனமாக்கினமையானே வடசொற்களும் தமிழ்மொழியோடொருங்கொத்து இன்பம்பயப்பனவாயின, "பரதநாதவேதபாத்துவாசனென்பான்---விரதவேள்விதன்னின்மேனகையாலான---சுரததாதுவீழ்ந்ததுரோணகும்பந்தன்னில்---வரதனெநுவன்வந்தான்வசிட்டமுனியையொப்பான், என்னுஞ்செய்யுளைப்படித்துணர்ந்துகொள்க. தொல்காப்பியரும் திசைச்சொல் வடசொற்களைச் செய்யுட்சொல் என்றது இதுபற்றியே. தமிழொழி நிலம் பதினேழும் திசைமொழிநிலமாகத் தொல்காப்பியர் கொள்ளாமையின் யாமுங்கொண்டிலம். அந்நிலமொழிகள் பிற்காலத்துத்தமிழில் வந்து வழங்கியனபோலும்.

இனிச், சுவையும், சொற்சுவையும் பொருட்சுவையுமென இருவகைப்படும். அது 'சொல்லினும் பொருளினுஞ்சுவைப்படலின்பம்'

என்பதனுலறியப்படும் என்க. சொற்சுவையாவது சொல்லின் கட்டோன்றுஞ்சுவை. பொருட்சுவை—பொருளின் கட்டோன்றுஞ் சுவை நன்னூலார் சொல்லிய பத்தழகினுள்ளே "சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை" என்னுமைந்தும் சொற்சுவைபயப்பனவாகும். "ஆழமுடைத்தாதல், உலகமலையாமை, விழுமியது பயத்தல், விளங்குதாரணத்ததாகுதல்" என்னும் நான்கும் பொருட்சுவைபயப்பனவாகும். ஈண்டுச்சுவையெனயாம் எடுத்துக்கொண்டது சொற்சுவைபொருட்சுவைகளையே எனக்கொள்க. நவரசத்தையன்று.

சுருங்கச்சொல்லலாவது :—தான் கருதியபொருளை சிலசொற்களாற் சொல்லுதல். சுருங்கச்சொல்லலிலே திருவள்ளுவருங் கம்பருஞ் சிறந்தவர்கள். திருவள்ளுவர் சுருங்கச்சொன்னமைக்கு "ஐந்தவித்தானாற்றலகல்விசும்புளார்கோமா—னிந்திரனேசாலுங்கரி" என்னுஞ் செய்யுளையும், கம்பர் சுருங்கச்சொன்னமைக்கு "வந்தநம்பியைத் தம்பி தன்னேடும்—முந்தைநான்மறைமுனிக்குக்காட்டி" என்னுஞ் செய்யுளடியையும், "அஃதைய" என்பதையும் உதாரணமாகக்கொண்டு விளக்கிக் காட்டுதும். ஐந்தவித்தான், என்னுஞ் செய்யுளிலே, ஐம்பொறிகளெனக் கூறிற்சொற்பல்கு மென்றஞ்சி, 'ஐந்து' என்றும், புலன்களிற் செல்ல விடாது அடக்கினவன் எனக்கூறிற், பல்குமென்றஞ்சி 'அவித்தான' என்றும், ஐந்தவித்தானாகிய கௌதமனெனக்கூறிற் பல்குமென்றஞ்சி, 'ஐந்தவித்தான்' என்றும், தவத்தானெய்தி நின்றசாபவலியெனச்கூறிற் பல்குமென்றஞ்சி, 'ஆற்றல்' என்றும், செல்வவலியும், சேனைவலியும், அரசுவலியும், தேவவலியும், உடைய இந்திரனே எனக்கூறில் சொற்பல்கு மென்றஞ்சி, 'அகல்விசும்புளார்கோமான்' என்றும், அகலிகைபொருட்டுக் கௌதமனால் இந்திரன்சாபமெய்திநின்றகதைமுழுவதையும் கூறிற்சொற்பல்குமென்றஞ்சி, 'கரி' என்றும், அரசவலியினுந்தேவவலிமிக்கதென்பதற்குப்பொருந்திய எனிற்பல்குமென்றஞ்சிச், 'சாலும்' என்றும், வேண்டுஞ்சொற்களையெல்லாம் மிகச்சுருக்கிக்கூறியிருத்தல்காண்க. இங்ஙனமே கம்பரும், தன்பால்வந்த என்பதை, வந்த, என்றும், ஸ்ரீராமனாகிய நம்பி என்பதை, நம்பி, என்றும், தம்பியாகிய இலக்குவன்என்பதை, தம்பி என்றும், இவையோர் போர்க்குரியர் அல்லர் என்பதைஅறியும் முதிர்ந்த அறிவுடையமுனிவனென்பதை, முந்தைநான்மறைமுனிஎன்றும், இரா

மனதுபொருதற்குரிய ஆற்றலில்லா இளமையைக்காட்டி என்பதை, காட்டி என்றும், ஸ்ரீராமன் நகரவாசிகளை நோக்கி, நீரும் உமதுமனைவியரும் மக்களும்வலியரா? உமதுசெயல்கள்யாவும் வலியவா? என்று வினவியபோது, நகரவாசிகள் யாமும்வலியேம்; எமதுமனைவியரும் மக்களும் வலியர்; எம்செயலும் வலிது என்று சொல்லவேண்டியதை, அங்ஙனமேக்ஷேமம் என்னும் பொருளமைந்த அஃது என்று மூன்றெழுத்துச்சுட்டுப் பெயருளடக்கியும் இவ்வாறு சுருக்கிக்கூறியிருத்தல் காண்க. இங்ஙனமே இவர்களுடைய செய்யுள்யாவும் சுருங்கச்சொல்லப்பட்டு மிகவும் இன்பம் பயத்தலை அறிஞர் உணராதிரார். இச்சுருங்கச் சொல்லலாகிய அழகு ஆங்கிலபாடைக்கண் இல்லை என, ஸ்ரீமாந்—செல்வக்கேசவராயமுதலியார் அவர்கள் தாமியற்றிய "தமிழ்" என்னும் பெயரையுடைய உரைநூலில் எழுதியிருக்கின்றார்கள். அதனை இங்கே தருகின்றோம். தாய்தகப்பன் நீங்கலாக ஏனைய முறைப்பெயர்களெல்லாம் இங்கிலீஷில் தொடர்மொழிகளே................நாம் வந்திலம் சென்றிலம் எனவழங்கும் எதிர்மறை முற்றுக்களை இங்கிலீஷில் உரைப்பதற்கு மூன்றுசொற்கள் வேண்டும்............உருபேற்றஅடியேனுக்கு என்னும் குறிப்புவினையாலணையும் பெயரை அமைக்க ஆறுசொற்கள்வேண்டும், என்றும், கூறி, இன்னும் கூறுப. ஆண்டுநோக்கியுணர்க.

இனி, விளங்கவைத்தலாவது; சொற்சுருங்கவைப்பினும் அச்சொற்களாலேதாங்கருதியபொருளை, விளங்கவைத்தல். உய்த்தலில் பொருண்மைஎன்பதும் இது. அஃது, "ஐந்தவித்தானாற்றலகல் விசும்புளார்கோமா—னிந்திரனேசாலுங்கரி" என்புழி, ஐந்து என்பது அத்தொகையையுடைய பலபொருளையுணர்த்துமாயினும், ஐம்பொறியையுணர்த்த 'அவித்தான்' என்றும், அங்ஙனமே அவித்தான் என்பதும், முனிவன் என்னும் பொருளையுணர்த்த 'ஐந்தவித்தான்' என்றும், முனிவரைப்பொதுவாகஉணர்த்தும் 'ஐந்து அவித்தான்' என்பது கௌதமனை உணர்த்த 'இந்திரனே' என்றும், ஆற்றல் சாபவாற்றலையுணர்த்தவும், சாபமெய்தினமையைஉணர்த்தவும் 'கரி' என்றும், அவன் வலியினும் இவன்வலிமிக்கதென்பதை யுணர்த்தச் 'சாலும்' என்றும், ஐந்தடக்காதவன் என்பதுதோன்ற 'அகல்விசும்புளார்கோமான்'என்றும், இங்ஙனமே சொற்களை ஒன்றோடொன்று புணரவைத்தலாலேதத்தம் பொருளைவிளங்கவைத்தலோடு, தாங்கருதிய பொருளையும் நூலாசிரியர் விளங்கவைத்தமையானறியப்படும்,

கம்பரும்,

> வாரணம்பொருதமார்பும்வரையினையெடுத்ததோளும்,
> நாரதமுனிவற்கேற்பநயம்படவுரைத்தநாவுந்,
> தாரணிமௌலிபத்துஞ்சங்கரன்கொடுத்தவாளும்,
> வீரமுங்களத்தேபோட்டுவெறுங்கையோடிலங்கைபுக்கான்.

என்புழி, போட்டுஎன்னது களத்தேபோட்டு என்றதனால், மார்பு முதலியவற்றை இன்றேயுத்தகளத்தில் தோற்றசரிதங்களையும், பொருதல், எடுத்தல், உரைத்தல், அணிதல், கொடுத்தல், முதலியவினைகளானே, மார்புந், தோளும், நாவும், மௌலியும், வாளும் முதலியவற்றான் அவன்முன் வெற்றியெய்தினமையையும் விளங்கவைத்தனர். எங்ஙனமெனில், வாரணம்பொருதமார்பும் என்றதினாலே முன் திக்குவிசயத்திலே திக்குயானைகள் கோட்டாற்குத்தியவிடத்து இராவணன்மார்பு அவைகள் முரியும் படிவலிபெற்று நின்றமையையும், களத்தேபோட்டு என்றதனாலே, இன்று, போர்க்களத்திலே, அனுமன்கையினாற்குத்துண்டு,

> "அள்ளாடியகவசத்தவிர்மணியற்றனதிசைபோய்,
> விள்ளாநெடுமுழுமீனெனவிழவேபொறியெழநின்,
> றுள்ளாடியநெடுங்கால்பொரவொடுங்காவுலகுலையத்,
> தள்ளாடியவடமேருவிற்சலித்தானறம்வலித்தான்."

என்றுகூறியவாறு, அவன்மார்பும் உடம்பும் சலித்தமையையும்; வரையினையெடுத்ததோளும் என்றதனால், முன்இராவணன் கைலாயத்தை ஒருபுயங்கொடு நிமிர்த்துவலிபெற்றமையையும், களத்தேபோட்டு என்றதனாலே இன்றுபோரிலே,

> "தொடுத்தவெண்வகைமூர்த்தியைத்துளக்கிவெண்பொருப்போ,
> டெடுத்ததோள்களுக்கெழுந்திலனிராமனுக்கிளையான்." என்றும்.

> "எடுக்கலுற்றவன்மேனியையேந்துதற்கேற்ற,
> மிடுக்கிலாமையினிராவணன்வெய்துயிர்ப்புற்றான்." என்றும்.

கூறியவாறு, அப்புயங்களானே இலக்குவனைத்தூக்கமுடியாது வெய்துயிர்ப்புற்று நின்றமையையும்;

> "நாரதமுனிவற்கேற்பநயம்படவுரைத்தநாவும்,"

என்றமையானே, முன்இராமனுடைய முன்னோனாகிய, அனரணியனோடு பொருது, அவனைக்கொல்லப்போனபொழுது, நாரதமுனிவர்வந்து, "மானுடரைக்கொல்லல்வழக்கன்று" எனக்கூறி, வேண்ட, அவன், "எம்பெருமான்கூறிற்றன்றோ இன்று செயுபது" எனத்தனக்குவெற்றி நலம்பொருந்தச்சொன்னதா என்பதையும், களத்தேபோட்டு என்ற தனாலே, இன்றுபோரிலே, இலக்குவன் தன்கையிலுள்ளபத்துவில்லையும், ஒருசேரவெட்டியபோது, அவனைவியந்து,

"நன்றுபோர்வலிநன்றுபோராள்வலிவீரம்.
நன்றுநோக்கமுநன்றுகைக்கடுமையுநன்று.
நன்றுகல்வியுநன்றுநின்திண்மையுநலனும்.
என்றுகைமறித்திராவணன்ஒருவனீ."

என்றுஇலக்குவனைப்புகழ்ந்தமையானும்,

"ஆளையாவுனக்கமைந்தனமாருதமறைந்த
பூளையாயினகண்டனையின்றுபோய்ப்போர்க்கு
நாளைவாவெனநல்கினனாகிளநகமுகின்
வாளைதாவுறுகோசலநாடுடைவள்ளல்."

எனக்கூறியவாறு ஸ்ரீராமன் போரிலே எல்லாமிழந்துநின்ற இராவணனை நோக்கி; இராவண! தனியேநிற்கும் உன்னைக்கொல்லல் அறமன்று ஆதலால் நீ இன்றுபோப்போர்க்கு நாளைவாஎன அவனுக்கு "பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால் ஊராண்மை மற்றத னெஃகு" எனத்தேவர் கூறியவாறு ஊராண்மை செய்தபொழுது, அவன் ஒன்றும் பேசமாட்டாது சென்றமையானும், அந்நாவானது தோற்றமையையும்; தாரணிமௌலிபத்தும் என்றதனாலே, முன்பலரை வென்றுவாகைமாலைசூடியமுடிகள் என்பதையும், அம்முடிகளை இன்று போரிலே, "தலையில் பொன்னின் மாமணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த" என்றுகூறியவாறு, ஸ்ரீராமனால் வெட்டப்பட்டுப்புணரியில் வீழ்ந்தமையையும்; சங்கரன்கொடுத்தவாளும், என்றதனால், அழியாத வாள்என அதன்வென்றியும், களத்தேபோட்டுஎன்றதனால்,

"மற்றும்வெம்படைவழங்கினான் வழங்குறாமுன்னம்,

இற்றவிந்துகவெரிகணையிடையறவெய்தான்" எனக்கூறியவாறு, அப்படைவெட்டுண்டவாற்றையும்; வீரமுங்களத்தேபோட்டு என்ற தனால், இதற்குமுன்போரிலேகாட்டியவீரம், இன்று ஸ்ரீராமன்முன்னே

தோற்று, "அறங்கடந்தவர்செயலிதென்றுலகெலாமார்ப்ப, நிறங்கரிந்திட நிலம்விரல்கிளைத்திடநின்றான், வெறுங்கைநாற்றினன் விழுதுடையாலன்னமெய்யன்." எனக்கூறியவாறு தலைகுனிந்து காற்பெருவிரலால் நிலத்தைக்கீறிநின்றமையையும் விளங்கவைத்தமையுங்காண்க. இங்ஙனமே இக்கவிகள்யாவும் சுருங்கச்சொல்லினும் பொருள்விளங்கவைத்தலால் சுவைபொருந்த நின்றமைகாண்க.

இனிநவின்றோர்க்கினிமையாவது, படித்தோர்க்குச்சொல்லின்பந் தோன்றுதல் என்றது, சொற்களைத் தொடுக்குங்கால் செவிக்கு இன்பந்தோன்றுஞ் சொற்களைச்சேர்த்துத்தொடுத்தல். செவிக்கின்பந்தருஞ் சொற்களாவன:—வல்லோசையின்றிமெல்லோசை பயக்குஞ் சொற்கள். இதனை, அணிநூலார் ஒழுகிசை என்ப. அது "ஒழுகிசையென்பது. வெறுத்திசையின்மை" என்னுஞ் சூத்திரத்தானறியப்படும். உதாரணமாக, வல்லெழுத்துவிரவப்பெற்ற "துடித்துத்தடித்துத்துடுப்பெடுத்த கோடல்" என்பதைப்படித்துச்செவிக்கின்பம் பயவாமையும், "பால் போலுமின்சொற்பவளம் போற்செந்துவர்வாய்" என்பதைப்படித்துச் செவிக்கின்பம் பயத்தலுமறிக. வல்லோசையுடைய வடமொழிகளைச் சேர்த்து இயற்றும் செய்யுள்களும் செவிக்கின்பம்பயவாவென்க. இங்ஙனமே, நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் "அசையுஞ்சீருமிசையொடுசேர்த்தி—வகுத்தனருணர்த்தலும்வல்லோராறே" என்னுந் தொல்காப்பியச்சூத்திரவுரையில், "தருக்கிப்புணர்ந்து தணந்ததமது— பொருப்புப்புடைத்துப்புடைத்து" என்புழி, வெண்பாவினீற்றடி இன்னோசைத்தாகாமையால், "பொருப்புத்தழைந்தபொழிந்து" எனமெல்லோசைசேர்க்க இன்னோசைத்தாயிற்று எனவும், "கருப்புச்செறுப்புப்பரப்பு" எனின், வெண்பாவினீற்றடி, இன்னோசைத்தாகாமையின், "கருப்புக்கொழுந்துகவர்ந்து" எனமுடிக்கின் இன்னோசைத்தாய் வெறுத்திசையின்றாமாறுமுணர்க. எனவும், முறையேகூறுதல்காண்க.

இன்னும்வரும்,

சி. கணேசையர்,

புன்னாலைக்கட்டுவன்.

பொருணூற்சிறப்பு.*

———(●)———

ஒருமொழியாலுலகனைத்துமுருப்படுமென்றருஞ்சுருதி
யுரைத்தவாற்றால்
வருமறையாகமக்கலையாய்ப்பொருட்டுணிவாயாவுமாய்
வயங்காநின்ற
திருமொழியைச்சித்தியுத்திதிகழ்மொழியையனவரதஞ்
சிந்தித்தேத்தும்
பெருமொழியைக்குருமொழியைப்பிறைமுடித்தோன்
பெறுமொழியைப், பேணிவாழ்வாம்.

அருந்தமிழ்ப் பொருணூற்சிறப்பி |லொருசிலவற்றை யாராய்ந்தறியப்புகுந்தனம்.

"ஆன்றசிறப்பினறம்பொருளின்பமென
மூன்றுவகைநுதலியதுலகமவற்று
ளறனுமின்பமுமகலாதாகிப்
புறனெனப்படுவதுபொருள்குறித்தன்றே"

என்பது பன்னிருபடலம். "மூன்றுவகைநுதலியதுலகம்" என்றதனால் அறிஞர் வீட்டினைத் தனித்துக்கூறார்; ஏனைய பொருட்பகுதிகளோடுசார்த்தி அவற்றது மிகுதியாகவும் நீக்கமாகவுங் கூறுவரென்பது பெறப்பட்டது. என்னை? சிற்றின்பம், பேரின்பமெனவும்; இல்லறம் துறவறம் எனவும்; இம்மைப்பொருள், மறுமைப்பொருள் எனவுங் கூறினாராகலின், இவற்றது விரிவைப் பின்னர்க்காட்டுதும். "அறனுமின்பமுமகலாதாகி" என்பதனால், புறத்திணை அனைத்துப்பொருளையுங் கூறுமென்பதும் நடுவண்நின்ற பொருளேயே பெருகக்கூறுமென்பதும் பெறப்படுவனவாம்.

---

* இது யாழ்ப்பாணத்துத் தமிழ்வளர்க்கும் பெருங்கழகத்தார் முன்னிலையிற் படிக்கப்பட்டது.

"இன்பமும்பொருளுமறனுமென்ருங்
கன்பொடுபுணர்ந்தவைந்திணை"

என்பது தோல்காப்பியம். "அன்பொடுபுணர்ந்தவைந்திணை" என்றத னுல் எஞ்சிய இருதிணையுள் கைக்கிளைத்திணை ஒருதலையாய அன்பினை யுரைப்பது என்றும் பெருந்திணை பொருந்தாவன்பின்புறத்ததாய்ப் பொருந்தநின்ற அறனும் பொருளும் துறக்கமும் கூறுவது என்றும் அறியலாகும். இங்ஙனம் அகமும் புறமும் ஒற்றுமைப்பட்டபொருள வாயின் இணைச்சொற்களால் வேற்றுமையுறக்கூறியதென்னையோவெனின், இணைச்சொற்களாற்கூறப்படும் பொருட்கள் ஒற்றுமையும் வேற்றுமையு முடைபவாயிருத்தலன்றே சால்பு; ஈண்டு உணரப்படும்பொருளை நோக்க அகமும் புறமும் ஒன்ருந்தன்மைய, உணர்வோனுகிய தலைமகனை நோக்க வேருந்தன்மைய. அகம் என்பது இல்லம். பார்ப்பனமகளிர் தங் கண வரை அகத்துக்காரர் என்றுசொல்லும் வழக்கு இன்றுமுளது. இல் லக்கிழத்தியினதுசார்பினுற் றலைமகன் அறமுதனுன்கினையும் பெறும் ஒழுக்கத்தை அகத்திணையெனவும், மாற்றரசரும் பிறருஞ்சார்பாக நாற் பொருளையும் பெறும் ஒழுக்கத்தைப் புறத்திணையெனவும் வைத்துத் தமிழ்மொழிமாந்தர் புலனெறிவழக்கஞ் செய்தாரென்க. இங்ஙனம் பொருள்கொள்ளுமிடத்து, "அகத்திணை", "புறத்திணை" என்பவற்றை "Life at Home", "Life Abroad" எனப் பெயர்த்தெழுதலாகும். கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறியும் இன்பமனைத் தும் உள்ளமே நிலைக்களமாக அறியப்படுவவாதலால் வீரப்போரின்ப மும் உள்ளமே நிலைக்களமாக அறியப்படுவது ; அனுபவித்தார்க்கன்றிப் பிறர்க்குப் புலனுகாதது ; அங்ஙனமாதலின் அகம் என்பதற்கு உள்ளம் எனப் பொருள்கொள்ளின் வீரப்போரின்பத்தையும் அகத்திணையெனக் கொளல்வேண்டுமே ; ஆதலால் அகம்என்பதற்கு இல்லம்எனப் பொருள் கொண்டதே பொருத்தமாமென்க. அஃதன்றியும், ஒண்டொடி மகளிர் பாற்பெறும் இன்பமாத்திரமே இன்பமெனச்சாதித்தலும் பொருந்தாது;

புயவலிபடைத்த அடலரியேறனையானுக்குப் போர்க்களத்துப்பெறும் இன்பம் சொன்மடங்கு மென்மொழிமாதர்பாற்பெறு மின்பத்தினும் பன் மடங்கதிகமாதலின், அருந்தமிழ்க்கவியைப் படிக்கும்போது கவிஞர் கருத்தொடு நங்கருத்து ஒன்றுபட அனுபவிக்குமின்பமும் "கருத்தொப்ப ஆதரவுபட்டவின்பமேயாகும்."

இனி நுண்மதித் தமிழ்மாந்தர் வீட்டியல்கூறியமரபினை யாராய் வாம். சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய வீடு இலக்கண வகையாற் கூறுந்தரத்ததன்று. வீடுகூறிய ஏனையமொழிமாந்தரும் அதனைக்காரணவகையாலும் எடுத்துக்காட்டுவகையாலுங் கூறினரேயன் றிச் சொல்லுக்கடங்காப்பேரின்பத்தைச் சொல்லுக்கடக்கமுயன்றாரல்லர். காரணவகையாற்கூறுமிடத்துப் பெருந்திணையானுங் காஞ்சித்திணையா னுங் கூறப்படும். பின் அநுபவவகையாற்கூறுமிடத்து அகத்திணை அன்புமார்க்கமாகும்; புறத்திணை அறிவுமார்க்கமாகும். இவற்றை வட நூலார் முறையே பக்தியோகம், ஞானயோகம் என்பர். அருளுங் குர வனுங் கூட்டிவைக்கக் கண்டகாட்சியும் கலந்தவுவகையுங் கம்பலையுங் கண்ணீரும் பிரிவாற்றாமையும் நீடுநினைந்திரங்கலும் அகனைந்திணைக்கே யுரியவாம். ஐம்புலக்கள்வர் ஆவினைத்தங்தோம்ப அவரையடர்த்தெதிர்த்து அஞ்சுதகச்சென்று அரணத்தைவளைத்து வெற்றியுந் துதியும்பெறுவது புறத்திணையொழுக்கமாம். "வேல்கெழுதடக்கைச் சால்பெருஞ்செல்வ" ஞகிய தமிழ்ப்பெருங்குரவன் மறவொழுக்கத்தால் மாயைமக்கள் மூவரை யுங்கடிந்து அன்பின்மேனதாகிய அறவொழுக்கத்தால் வள்ளிநாயகி யாரைமணந்து புறத்திணை அகத்திணை யொழுக்கங்களை உலகிற்கு நன் குணர்த்திய வரலாற்றுவிரிவைத் தமிழ்மொழிக் கந்தபுராணத்தினுந் தணிகைப்புராணத்தினுங் காணலாகும்.

இனித் திணைவகையை யாராய்வாம். அந்தணாருமறைநூல் மன்ற லெட்டு எனக் கூறிற்று. தமிழாருமறையாகிய "அன்பினைந்திணை கந்

தருவவழக்கத்தை யைந்தாகக் கூறிற்று. இருமொழிமாபையும் இயைய வைத்து நோக்குங்கால், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், அசுரம், இராக்கதம், பேய் எனப் பன்னிரண்டாம். இவற்றுட் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும், பெருந்திணை. ஈற்றினின்ற மூன்றுங் கைக்கிளைத்திணை;— "பாங்கனிமித்தம் பன்னிரண்டென்ப," "முன்னைய மூன்றுங் கைக்கிளைக்குறிப்பே-பின்னர் நான்கும் பெருந்திணைபெறுமே." என்னும் பொருளதிகாரச்சூத்திரப்பொருளை நோக்குக.—ஆகவே மன்றலெட்டு நிமித்தம்பன்னிரண்டு என்ற வகையாவும் திணை ஏழு என அடங்குவ. பெருந்திணை, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், கைக்கிளை யென்னும் அகம் ஏழினுக்கும் முறையே காஞ்சி, வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, உழிஞை, பாடாண்என்பன புறனும்.—குறுகு, பகு, முகிழ், நை, மறு(த்), காய், கா(த்), நொ, வெகுள், வகு, வன்பு, துன்பு, உரிஞ் என்னும் வினையடிகளோடு தல், அல், அம், ஐ, சி என்னுந் தொழிற்பெயர் விகுதிகளுள், ஏற்புடையனகூடிப் பிறந்த தொழிற் பெயர்களாமோ குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், காந்தை, நொச்சி, வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, உழிஞை என்னும் திணைப் பெயர்கள் என்னும்முடிபு ஆராய்தற்குரியது,—அஃதெங்ஙனமாயினும் பாலையும் பாலைப்புறனாகிய வாகையும் "பகு" "வகு" என்னும் அடிகளி னின்று பிறந்தனவாமென்றல் பொருத்தமுடைத்து. ஆசிரியன் பாலைக்கு நிலம்வகுத்தானல்லன்; அஃதொழிந்தநான்கனுக்குமே படுதிரை வையத்தைப் பகுத்துக்கொடுத்தனன்; பாலை ஏனையநான்கனுள்ளுஞ் செறிந்து நிற்குமியல்பினதாதலின். இனி உயிரும் உடலும், மலரும் மணமும்போல ஒருமித்திருந்தாரிருவரை அறமும்பொருளுங்காரணமாகப்பகுத்து நிறுத்துமியல்பினது பாலைத்திணை. பாலைப்புறனாகிய வாகையினியல்பை நோக்குங்காற் பிறப்பொத்து ஒன்றித்திருந்த மக்கட் கூட்டத்தினரைச் செய்தொழில்வேற்றுமைச் சிறப்புநோக்கி அந்தணர்

என்றும், அரசரென்றும், ஏனோரென்றும், அறிவரென்றும், தாபதரென்றும், பொருநரென்றும் வகுத்து நிறுத்தியது வாகைத்திணை. பாலையும்வாகையும் பெருகக்கூறும் பொருட்பகுதிகள் அறமும் பொருளுமேயாம்;காஞ்சியும்பெருந்திணையும் துறக்கங்கூறுஞ்சிறப்புடைய எனவும்; கைக்கிளையும் பாடாணும் ஒருதலையாய அன்பின்பாலஎனவும் முன்னர்க் கூறினும். எஞ்சிய அகனான்கும் சிறப்புடையின்பப்பொருளை, எடுத்துக்காட்டுவகையால் வீட்டியல் கூறுவ; அங்ஙனமே எஞ்சிய புறனான்கும் வீரப்போரின்பப்பொருளை, எடுத்துக்காட்டுவகையால் வீட்டியல் கூறுவ.

மனமொழிமெய்களா லறியவொண்ணாப் பேரின்பப்பொருளை யாண்டும் வெளிப்படையாகக் கூறுவது இயலாததொன்றாகலின் ஆசிரியர் குறிப்பாகவுணர்த்தியது மரபாயிற்று. சொற்றொடர் கருவியாக வறிவது பொருள். சொல் பொருளையுணர்த்தும்வழி வெளிப்படையாகவுங் குறிப்பாகவு முணர்த்தும். அங்ஙனம் உணர்த்தும் பொருளும் பல்வேறு வகைப்பட்ட மாந்தரது மனநிலைக்கேற்பத் திரிவுபட்டுநிற்கும். அவரவர்கொண்டபொருளே அவரவர்க்கு மெய்ப்பொருளாகும். உதாரணமாக இன்பமென்னுஞ்சொற்கேட்டவிடத்துக் கட்குடியன் கள்ளுண்டு களியாடும் இன்பத்தை நினைவுகூருகிறான், அவனுக்கு அதுவே மெய்ப்பொருள். பரிசவின்பத்தின்பாலதாகிய இணைவிழைச்சியினது பொய்யியல்பையுணராதான் அவ்விணைவிழைச்சியையே இன்பமென வெண்ணுகிறான், அவனுக்கு அதுவே மெய்ப்பொருள். கண்ணுக்கினிய காட்சியையும் செவிக்கினிய இசையினையும் மூக்குக்கினிய நறுநாற்றத்தினையும் இன்பமென எண்ணுவோர்க்கு அவையே மெய்ப்பொருள்; போர்க்களத்துச்சென்று பகைவரையெறிந்தும் அவர் எறிந்த வேலை மார்பகத்துத் தாங்கியும் புறங்காட்டாது நிற்பதே இன்பமெனக்கொண்டவீரனுக்கு அதுவே மெய்ப்பொருள். இல்லத்திருந்து குலமகளோடுகூடிக் கண்டும் கேட்டும் உண்டும் உடுத்தும் உற்றும் உயிர்த்தும் அனுபவிப்பதே இன்பமெனக்கொண்டோனுக்கு அதுவே மெய்ப்

தருவவழக்கத்தை யைந்தாகக் கூறிற்று. இருமொழிமரபையும் இயைய வைத்து நோக்குங்கால், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், அசுரம், இராக்கதம், பேய் எனப் பன்னிரண்டாம். இவற்றுட் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும், பெருந்திணை. ஈற்றினின்ற மூன்றுங் கைக்கிளைத்திணை;— "பாங்கனிமித்தம் பன்னிரண்டென்ப," "முன்னைய மூன்றுங் கைக்கிளைக்குறிப்பே-பின்னர் நான்கும் பெருந்திணைபெறுமே." என்னும் பொருளதிகாரச்சூத்திரப்பொருளை நோக்குக.—ஆகவே மன்ற லெட்டு நிமித்தம்பன்னிரண்டு என்ற வகையாவும் திணை ஏழு என அடங்குவ. பெருந்திணை, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், கைக்கிளை யென்னும் அகம் ஏழினுக்கும் முறையே காஞ்சி, வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, உழிஞை, பாடாண்என்பன புறனும்.—குறுகு, பகு, முகிழ், நை, மறு(த்), காய், கா(த்), நொ, வெகுள், வகு, வன்பு, துன்பு, உரிஞ் என்னும் வினையடிகளோடு தல், அல், அம், ஐ, சி என்னுந் தொழிற்பெயர் விகுதிகளுள், ஏற்புடையனகூடிப் பிறந்த தொழிற் பெயர்களாமோ குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், காந்தை, நொச்சி, வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, உழிஞை என்னும் திணைப் பெயர்கள் என்னும் முடிபு ஆராய்தற்குரியது,—அஃதெங்ஙனமாயினும் பாலையும் பாலைப்புறனாகிய வாகையும் "பகு" "வகு" என்னும் அடிகளி னின்று பிறந்தனவாமென்றல் பொருத்தமுடைத்து. ஆசிரியன் பாலைக்குநிலம்வகுத்தானல்லன்; அஃதொழிந்தநான்கனுக்குமே படுதிரை வையத்தைப் பகுத்துக்கொடுத்தனன்; பாலை ஏனையநான்கனுள்ளுஞ் செறிந்துநிற்குமியல்பினதாதலின். இனி உயிரும் உடலும், மலரும் மணமும்போல ஒருமித்திருந்தாரிருவரை அறமும்பொருளுங்காரண மாகப்பகுத்துநிறுத்துமியல்பினது பாலைத்திணை. பாலைப்புறனாகிய வாகையினியல்பை நோக்குங்காற் பிறப்பொத்து ஒன்றித்திருந்த மக்கட் கூட்டத்தினரைச் செய்தொழில்வேற்றுமைச் சிறப்புநோக்கி அந்தணர்

என்றும், அரசரென்றும், ஏனோரென்றும், அறிவரென்றும், தாபதரென்றும், பொருநரென்றும் வகுத்து நிறுத்தியது வாகைத்திணை. பாலையும்வாகையும் பெருகக்கூறும் பொருட்பகுதிகள் அறமும் பொருளுமேயாம்;காஞ்சியும்பெருந்திணையும் துறக்கங்கூறுஞ்சிறப்புடைய எனவும்; கைக்கிளையும் பாடாணும் ஒருதலையாய அன்பின்பாலஎனவும் முன்னர்க் கூறினும். எஞ்சிய அகநான்கும் சிறப்புடையின்பப்பொருள, எடுத்துக் காட்டுவகையால் வீட்டியல் கூறுவ; அங்ஙனமே எஞ்சிய புறநான்கும் வீரப்போரின்பப்பொருள, எடுத்துக்காட்டுவகையால் வீட்டியல் கூறுவ.

மனமொழிமெய்களா லறியவொண்ணாப் பேரின்பப்பொருளை யாண்டும் வெளிப்படையாகக் கூறுவது இயலாததொன்றாகலின் ஆசிரியர் குறிப்பாகவுணர்த்தியது மரபாயிற்று. சொற்றொடர் கருவியாக வறிவது பொருள். சொல் பொருளையுணர்த்துமவழி வெளிப்படையாகவுங் குறிப்பாகவு முணர்த்தும். அங்ஙனம் உணர்த்தும் பொருளும் பல்வேறு வகைப்பட்ட மாந்தரது மனநிலைக்கேற்பத் திரிவுபட்டுநிற்கும். அவரவர்கொண்டபொருளே அவரவர்க்கு மெய்ப்பொருளாகும். உதாரணமாக இன்பமென்னுஞ்சொற்கேட்டவிடத்துக் கட்குடியன் கள்ளுண்டு களியாடும் இன்பத்தை நினைவுகூருகிறான், அவனுக்கு அதுவே மெய்ப்பொருள். பரிசவின்பத்தின்பாலதாகிய இணைவிழைச்சியினது பொய்யியல்பையுணராதான் அவ்விணைவிழைச்சியையே இன்பமென வெண்ணுகிறான், அவனுக்கு அதுவே மெய்ப்பொருள். கண்ணுக்கினிய காட்சியையும் செவிக்கினிய இசையினையும் மூக்குக்கினிய நறுநாற்றத்தினையும் இன்பமென எண்ணுவோர்க்கு அவையே மெய்ப்பொருள்; போர்க்களத்துச்சென்று பகைவரையெறிந்தும் அவர் எறிந்த வேலை மார்பகத்துத் தாங்கியும் புறங்காட்டாது நிற்பதே இன்பமெனக் கொண்டவீரனுக்கு அதுவே மெய்ப்பொருள். இல்லத்திருந்து குலமகளோடுகூடிக் கண்டும் கேட்டும் உண்டும் உடுத்தும் உற்றும் உயிர்த்தும் அனுபவிப்பதே இன்பமெனக்கொண்டோனுக்கு அதுவே மெய்ப்

பொருள். இனிப் பெண் என்பது "எற்புச்சட்டம், முடைக்குரம்பை, புழுப்பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து" என்று இவ்வாறு நினைத்து உலகைத்துறந்து கற்பகக்காநீழலில் அரமகளிர் அடிவருடவீற்றிருப்பேனென நினைந்து தவஞ்செய்வானுக்கு அதுவே மெய்ப்பொருள். இறைவனது பொன்னடிநீழலையடைந்து அழியாவின்பத்தைப்பெறுவேனென்று நினைப்பவனுக்கு அதுவே மெய்ப்பொருள். அதுவும்வேண்டேன் இன்னுயிர்க்குயிராகிய இறைவனுக்குப் பணிசெய்தலை மேற்கொள்வேனென நினைப்பவனுக்கு அதுவே மெய்ப்பொருள். இங்ஙனே மாறுபட்டபலவும் இன்பமென்னும் ஒருமொழிக்கே பொருளாயினவாறுணர்க. "தானேயவள், அவளே தான்" என்னுந் தொடர்மொழி செவிப்படலும் இலக்கணவித்துவான் அது தலைமகளுந் தலைமகனும் பொருவிறந்தாரென்பதை யுணர்த்திற்று என்பான். வேதநூல்வல்ல அந்தணன் முற்பட்டு "அன்று அன்று; இச் சொற்றொடர் 'அது நீ ஆனாய்' என்னும் மகாவாக்கியப்பொருளைக் குறிப்பினால் உணர்த்துவது" என்பான். சைவநூல்வல்லான் முன்னிருவர் பொருளையும் மறுத்துப் பொருவிறந்தாராவார் இறைவனும் இறைவியும், இம்மொழி அவரது நித்தியமாகிய அபேதத்தன்மையை உணர்த்திற்று என்பான். தார்க்கிகன் இவரனைவரையும் மறுத்து, தான் எழுவாய் அவள் முடிபு; பின்னும் அவள் எழுவாய்; தான்முடிபு ஆதலால் இத்தொடர்மொழி இதரேதரம் என்பான். உலோகாயதன் புன்னகைபுரிந்து "ஐயன்மீர்" இல்லதும் இனியதும் புனைந்துரையன்மின். மானும் வல்லியும்போலும் எள்ளும் அரிசியும்போலும், பாலும் நீரும்போலும் கலந்திருக்கும்நிலைமையைக் கூறிற்று இச் சொற்றொடர் என்பான்; இங்ஙனம் ஐந்திணைத்துறையனைத்தினுக்கும் பொருள் கொள்ளுதல்கூடுமாதலினாலன்றே, வாதவூரடிகளது ஐந்திணைக் கோவையைநோக்கி,

"ஆரணங்காணென்பரந்தணர்யோகியராகமத்தின்
காரணங்காணென்பர்காமுகர்காமநன்னூலதென்ப
ரேரணங்காணென்பரெண்ணரெழுத்தென்பரின்புலவோர்
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே."

என ஆன்றோர் வியந்து கூறினர்.

பலதிறப்பட்டமொழியினும் பரந்துபட்ட நூல் பலவும் அறம் பொருளின்பம் வீடென நாற்பாலுள் அடங்குவன. இவை தொகை விரியாகத் தமிழ்மொழியகத்துச் செறிந்து நிற்பன. தமிழ்மொழிக்கு நூலாவன சங்கச்சான்றோர்தொகுத்த நூல்களேயாம்; ஏனைய நூல்கள் இவற்றின் வேறுபட்டவல்லவாகலான்.—இராமன்கதை, சீவகன்கதை, நளன்கதை என நிற்பனவற்றுள் இராமன், சீவகன், நளன் எனவருமிடங் களில் "தலைவன்" எனக் குறியீடுசெய்தும் ஒழிந்தவற்றையும் ஏற்ற பெற்றி தலைவி, பாங்கன், பாங்கி, அடியோர், வினைவலர் என இவ்வாறு கொண்டும் நோக்குங்கால், பிற்காலத்து நூற்பொருள் முன்னோர் நூற் பொருளின் வேறுபடாது நிற்பது புலப்படும். இனிச் சங்கத்தமிழ்நூ லனைத்துந் தொல்காப்பியத்தினு ளடங்குவன. தொல்காப்பியத்து எழுத்துஞ்சொல்லும் பொருளினுளடங்குவன. பொருள்கூறும் ஒன்பது இயலும் அகத்திணையியல் புறத்திணையியல் என்னும்இரண்டனுளடங்கு வன. புறம் அகத்தினுளடக்கம். அகத்திணை பெருமானடிகள் அரு ளிச்செய்த "அன்பினைந்திணை"யினு ளடக்கம்; "அன்பினைந்திணை" அன்பினுளடக்கம்; அன்பு அகரவுயிரினுளடக்கமென மேலோர் கூறுவர். இனித் தோற்றப்பொருளனைத்தும் முதல் கரு உரியென அடங்குவன. கருப்பொருளும் உரிப்பொருளும் நிலம் பொழுது என்னும் முதற் பொருளினுடங்குவன. இவை ஆதிபகவனாகிய முதலினையுடையன; "அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றேயுலகு" என்னும் பொய்யாமொழிக்குப் பொருள்கொள்ளுமிடத்து "எழுத்து" என்பது முதல்சார்பாகிய முப்பத்துமூன்றெழுத்தினையும் அவ்வெழுத்துக்களின்

கூட்டத்தினுற்பிறந்த சொற்களையும் சொற்றொடர்கருவியாகிய பொருட் பகுதி யனைத்தினையுங் குறிக்கும். ஆகவே "எழுத்தெல்லாம்" என்பது "சொற்பிரபஞ்சம்." உலகு என்பது நிலம் பொழுது என்னும் முதற் பொருள்களாலாயது. நிலம் என்பது நிலத்துக்குக் காரணமாகிய நீரை யும், நீருக்குக்காரணமாகிய தீயையும், தீக்குக்காரணமான வளியையும், வளிக்குக்காரணமான வானையுங் கருதும். "நிலந் தீ நீர் வளி விசும்போ டைந்துங்கலந்த மயக்க முலகம்," ஆதலின்"உலகு"என்பது "பொருட் பிரபஞ்சம்." சொல்லும் பொருளும் பேதாபேதமாய் நிற்பன. சொன் முதலாகிய அகரவுயிர்போலப் பொருண்முதலாகிய இறைவன் தானே யாய் நிற்பதனேடு யாண்டும்வியாபித்து யாவற்றினும் செறிந்துநிற்பா னென வுணர்த்தும்பொருண்மையது செந்நாப்போதாருரைத்த உத்தர வேத முதற்செய்யுள்.

இங்ஙனம் ஆராயுங்கால் ஒல்காப்பெருந்தவத் தொல்காப்பியனு ருரைத்த பொருணூலும், திருவள்ளுவப்பயனும் பொதுநூலாய்ப் பொருணன்கினையும் உணர்த்துபவாய் இம்மைமறுமைப்பயனை ஒருங்கு தந்து நிற்பன என்பது புலப்படும். பெருமானடிகள் "என்னைபாவம்; அரசற்குக் கவற்சிபெரிதாயிற்று; அதுவும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்"என அருள்சுரந்து அளித்த "அன்பி னைந்திணை"யும், வாதவூரடிக ளருளிச்செய்த ஐந்திணைக்கோவையும் சிறப்புநூலாய் அருமறைமொழியாய் வீட்டியலைவிளக்கி நிலவுவன. இந்த நான்குநூலும் "தமிழர்நான்மறை"யென ஆன்றோரால் போற்றப் படுவன. பொன்னும் மணியும் பொருளெனக்கருதா நுண்மதித்தமிழ் மாந்தரால் பொருளெனக்காக்கப் படுவனவிவையே. தமிழ்முதுகுடிப் பிறந்த திருவுடைப்பெருமக்களனைவரும் இவற்றைப்போற்றிப் படித்து இம்மை மறுமைப்பயனைப் பெறுவார்களாக.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை.

பண்டித-மயில்வாகனன்
B. Sc. (Lond)

அருவியன் காதை.

[கூசு-ம் பக்கத்தொடர்ச்சி.]

(வேறு)

எத்திசைக்கு மெல்லைஎண்ணல் அற்றகன்ற பாதலம்
வைத்தகூ ரிருட்டிரள், வளர்ந்தபொங்கர் அங்கமேல்
தொத்துகார், எயிற்றுமின், துவைத்தலாம் மடங்கலும்
பெற்றலால், பிறங்கல்மீ துறங்குவானம் மானுமே. (32)

ஆரவாரத் தாலும்மஞ்சும் அஞ்சுகாரி ணுலும்மீ
சேரவாம் புலாவினாலும் தீயஜீவனாலும்நோம்
பேரவாவில் உயிர்கள்வவ்வு பெற்றியாலும் முற்றிலும்
கோரபாதலம் கொதித்தெழுந்த வேலை போலுமே. (33)

கருமையில் கடந்துதோன்று கங்குல்காளம் மங்குல்வான்
பெருமையில் பரந்த அம்பு ராசிமாதர் கேசம்மெய்ப்
பருமையில் சிறந்தமாப் பிறந்தகார்ப் பிழம்பெலாம்
தருமையென்ன மேனிபாத லத்தர்தாங்கு பான்மையே. (34)

உருண்டகண்ணர், ஒழுகுவாயர், உயருமூக்கர், எரியென
மருண்டகோபர், வாங்குநாவர் மடமைவஞ்ச இருளினும்
இருண்டஎண்ணர், எற்றுகாலர், இம்பரற்ற செம்புதோய்
சுருண்டரோமர், சுடுமனார்மெய் சொல்லலாம் தரத்ததோ? (35)

நெஞ்சில்வஞ்ச மதுமறந்து நேர்ந்திடார்நன் னெறியுமே,
துஞ்சினும் கனவிலன்ன தோற்றும்என்ன லாகுமோ?
நஞ்சினில் நறவும்,நாறு நாயின்நாவி வாசமும்,
பஞ்சிலுண் பழமும்,பாறை தன்னில்பாலும் வாய்க்குமோ? (36)

மதியிருண்டு மது அயின்று வழிமறித்து மனிதநற்
கதிமறந்து களிசிறந்து கலகமேல் கண்ணுடையராய்
புதியநஞ்சின் மொழிபுகன்று புலைவளர்ந்த குடியர்போல்
விதியில்பாத லத்தர்வாயின் வீழ்வதியில்த் தீயவே. (37)

மைவடித்த அந்தகாரம் வைத்தகானம் தத்துற
கைவடித்த மாவும்கண் கனல்பொடித்த மாவுமே
மெய்வெடிக்க விட்டஓசை வெடியினோடு மிடையுமேல்
பொய்வெடிக்கும் அன்னர்வாய்ப் புடைஇடிக்கி டென்னலாம். (38)

நல்லர்இல்லை, பொல்லர்இல்லை, நடுவும்இல்லை, நடுவிலா
வல்லர்இல்லை, வலியர்இல்லை, மெலியர்இல்லை, வாய்வதாம்
எல்லும்இல்லை, இருளும்இல்லை, இன்பம்இல்லை துன்பமும்
இல்லையாகி நின்றவூரின் தன்மைஎன்றும் ஒன்றரோ. (39)

ஆயஏத* தேசம்என்னும் அந்தகார பந்தமாம்
தீயதேசம் மீதுகோன்மை செய்பவன், திகில்தரு
காயன்,வாய் கடித்தகண்டன், கண்ணில்மின்னல் காட்டுவோன்,
பேய்கள்தாமும் பேய்என்றஞ்சும் பெற்றிஉற்ற புலுதனே. (40)

இடிக்குமின்னல் ஏய்ந்தபோல் இசைந்தசீர்ப் புலுதன்கை
பிடிக்கும்மாது பாசபன்னி பீடுகூறல் ஆவதோ ?
நொடிக்குள்ஜீவன் வவ்விநிற்கும் லோகம்மோதும் நாயகன்
முடிக்குமேலும் ஆட்சிபூக்கும் மூடெனைப் பிறங்கினள். (41)

வேறு.

பாதலத் தெங்கணும் பாவு சீர்த்தியன்,
மாதவள் மனதிற்கும் வாய்த்த காதலன்,
தீதுமுன் செய்தெலாம் தீமை அன்றெனப்
பூதலத் தொருமறம் புரிய எண்ணினன். (42)

மணம்கமழ் மேனியள், வனப்பின் செல்வியள்,
குணம்மிகு உருதேசிக் கொம்பனாள் தனை
கணம்ஒன்றில் இம்பரே கடத்திச்செய்கு வல்
அணங்கினுக் கணங்கும் யாழ்வலற்கும் அங்ஙனே. (43)

என்றுமேல் வரவெண்ணி இருந்த தூதர்பால்
ஒன்றுரை செய்தனன்: "உலகில் இந்நொடிச்
சென்றுரு தேசியை திசையெலாம் இசை
துன்றுபெண் ணரசியைத் துணைந்து சேர்ப்பிரால்" (44)

* Hades.

"அம்மதி கவர்ந்திவண் அடையினே இருள்
செம்மும்நந் தேயமும் தேசுவீ சிடும் ;
எம்முகம் தனில்நகை இலங்கும்" என்றனன்
தம்முகம் மலர்தரத் தூதர் தாவினர். (45)

வேறு.

பாவி நால்வர் தாவிப் பார்
மேவு முன் அருவி யன்
ஆவி யென்ன உன்ன லாம்
தேவி செய்கை தேர்கு வாம். (46)

வேறு.

கதிரவன் கதிரும்காணுக் கவின்மரப் பொதும்பர்மேவிச்
சதிருற இருளாம்நங்கை தனிக்கொலு விருக்கும் கானம்;
அதிசயம் காணஆங்கே அன்பனை அழைத்துப் புக்காள்;
புதியன வாகும்காட்சிப் பூவையர் விடுவாரோ காண் ? (47)

பாதையின் இருபால்பூத்த பன்மலர் நறவினேடு
தாதுகுத் தினியதோழர் தம்பதம் விளக்கி "எம்பால்
போதந்திர், ஏழையோம் என்புரிகுவம்? மனத்தால் நல்லீர்
ஏதமும் இல்லேம்"என்றே இன்னகை அரும்பி நின்ற. (48)

கொம்பனுள் வருதல்நோக்கி கொடியனர் ஒசிந்து "தோழி
வம்பவிழ் மரங்கள்ஆசை வரையாம் தழுவி நின்றேம்;
அம்புவிக் கழகுசெய்யும் அருவியன் தடந்தோ ளார்வத்
தின்புறத் தழுவிக்கொண்டாய்" என்றகம் ஏங்கி நின்றர். (49)

பஞ்சினிற் பனிக்குர்நொய்ய பதயுகம் பதைக்கும் என்ன
அஞ்சிய கொம்பனாரும் அலர்மழை வழியில் தூவி
"கஞ்சமென் முகத்தாய்!கானம் காணிய வந்தாய் கொல்லோ
வஞ்சகம் அறியாய்,இங்ஙன் வருந்தவோ வந்தாய்?" என்றார். (50)

காதலன் கையின்தன்கை கனிவினிற் பிணித்து மெள்ள
மாதவள் நடந்தாள்ஏனும் யாழ்கினள், மருங்குல் வாடி
வேதனை உழன்றாள்,முத்த வேர்வினைப் பொடித்தாள் மேனி,
ஆதலி னன்றேமந்த மாருதம் அசையா நிற்கும். (51)

செடிகளாம் தெரிவைமாரும் 'திருமலர் தூவிச் சாலும்'
கொடிகளாம் பேதைமாரும் கொம்பெனும் பெதும்பை மாரும்
முடிகளால் மங்கைக்கெங்கும் முறைப்படி சிறப்புக் காட்ட
கடிமலர்க் குழலினாளும் காந்தனும் கானம் புக்கார். (52)

வேறு.

பாசியின் கறைபடர் பாறை உள்ளது,
தூசியின் அம்பரம் தொடரும் குன்றது,
காசுலாம் கனிபல காட்டும் மாண்பது,
மாசுலாம் லோபர்போல் மறைத்தல் பூண்பது. (53)

குன்றின்வீ ழருவியின் குமுறல் கொள்வது,
பொன்றிணி மணல்தடம் புனையும் பொற்பது,
என்றுநீர் பாய்தரும் யாறும் ஏற்பது,
கன்றுணும் கரையெலாம் கரும்புல் போற்பது, (54)

கண்ணகல் நளிர்சுனை கதுவும் தாவது,
விண்ணகல் நெடுமரம் மிடையும் காவது,
மண்ணகல் மாட்சியும் மணமும் சான்றது,
எண்ணரும் இருட்பிழம் பிருக்கை போன்றது, (55)

தாவிவீழ் மாருதம் தடியும் சார்பது,
ஓவியப் புள்பல உலவும் கொம்பது,
கூவுதல் தாவுதல் குழைதல் புல்லுதல்
மேவுதல் உற்றது, மிளிரப் பெற்றது, (56)

உள்ளினில் உவகையோ டுழுவை மாமரை
துள்ளிவீழ் தடத்தது, துளக்கம் செய்வது,
நள்ளிருட் பேயொடு நடக்குங் கண்டகக்
கள்ளர்கள் திரிதரும் கடுமை மிக்கது. (57)

இத்தகை வனத்தில் எற்புலரும் காலையாழ்
வித்தக னொடொரு தேசி மேவவும்,
உத்தமர் சேர்இடம் உயரும் என்பரால்
அத்தடம் திரிந்ததும் அறைய வேண்டுமோ? (58)

வேறு.

சந்தநீள் தருவாம் தாங்குகா லோங்க,
 தழைதரு பாசிலைக் கொம்பாம்
பந்தல்மேல் விரித்துப், பழமொடு பூவில்
 பற்பல தீபமும் நாற்றி,
செந்திருப் பதங்கள் நொந்திடா வண்ணம்
 சீர்கெழு புல்விரி வீழ்த்தி,
பைந்தொடி கானப் பாவையும் இவரைப்
 பரிவுகூர்ந் தழைத்தநின் றனளே. (59)

அழகென்ப தொருசார் அவிர்ந்திட, ஒருசார்
 அழகென்ப தடங்கிட, அருகே
அழகென்ப வளர, அழகென்ப தளர,
 அழகென்ப அசைந்திட, அன்றி
அழகென்ப ஓட, அழகென்ப ஒலிப்ப,
 அழகென்ப தூங்கியே சலிப்ப,
அழகென்ப யாவும் அவ்வன மங்கை
 அணிந்தனள் காதலர் அழைப்பான். (60)

பாசிலை யாகும் தூசினைப் புனைந்து,
 பம்பு நன்மலர் அணிதிருத்தி,
ஏசவில் மனத்தின் இன்கனி கனிந்தே
 எழில்முகை யாம்நகை அரும்பி,
மாசறு கந்தப் பொற்பொடி தூவி,
 'வருக'என் றழைப்பபோல் கூவி,
வீசிய கொம்பாம் கைகளால் அவரை
 விளித்தனள் தருஎனும் தருணி. (61)

பெரியவர் செய்யும் பெருமையே போல
 பெரியவர் எனும்பெயர்க் கீண்டு
உரியவ ராவர் சிறியவர் சிறப்பும்
 ஓகையோ டேற்றிடு வாரால்,

அருகுறை செடியாள் அகமகிழ் தூங்கி
ஆடினள், அலர்ந்தவள் ளத்தே
முருகுறைதாது மூடினள், திறந்தாள்,
மொழிவதோ மகிழ்ச்சியின் செயலே? (62)

மரம்எனும் வன்மை மனத்தரே மகிழின்
மலரினும் மெல்லிய மனத்தர்
தரம்மிகு தொய்யல் தாங்குவர், ஐயம்
சாலுமோ, சார்வுள கொடியார்,
வரனெடு மங்கை வருதலு நோக்கி,
வாய்த்தபேர் வழுதெனக் காட்டி,
இரம்எழு நெஞ்சம் இன்புரை ஒழுக,
இழிகணீர் வரஒல்கி ஒசிந்தார். (63)

தண்ணெகு நெஞ்சம் தகையளி மிஞ்ச
சடலமும் கசிந்து தம் முகங்கள்,
ஒண்ணில வனைய ஒளித்திரள் விரிப்ப,
ஒதலாம் நிலைகடந் துருக்கும்
பெண்ணிளங் குயில்போல் இன்னிசை பெய்து,
பேரெழில் வாய்ந்தலைக் கரத்தில்
எண்ணரும் வாச மலர்த்தொகை ஏந்தி,
ஏரியாம் நாரியர் எதிர்ந்தார். (64)

ஓடைதண் முதுகர் ஓடியும், ஒலிதந்
துவதைதூந் திவலைநீர்க் கொண்டும்,
ஏடவிழ்வாச மலர்அளைந் துண்டும்,
இனையதென் றியம்பிட இயலா
ஆடவர் மகளிர்க் ககக்கனல் மூட்டும்
அம்முது குன்றுலாம் தென்றல்,
சேடவிர் கானம் சீரியர் சேர,
சிறந்தது களிர்ப்புது மணமே. (65)

புதியகல்விமுறை.

[அ0-ம் பக்கத்தொடர்ச்சி].

II

மாண்டிஸோரிமுறை.

மாண்டிஸோரி அம்மையென்பார் இதாலியதேசத்து மாது, அவருக்கு டாக்டர் என்றபட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மேலைத்தேசங்களில் அவ்வம்மையாருடைய முறையே கையாளப்பட்டுவருகிறது. இவ்வம்மையார் இத்தாலிபாஷையில் அநேக நூல்கள் எழுதியிருப்பினும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பவை இரண்டொருநூல்களே. அவைகள் மாண்டிஸோரிமுறை, மாண்டிஸோரி கையேடு (D. R. Montessori's own Handbook) ஆசிரியக்கூற்றுமுறை (Pedagogical Anthropology) என்பனவே. இவைகளுள் மாண்டிஸோரி கையேடு என்பது ஒருசிறுநூல். அதனில்மிக இளம் பருவமுள்ள மூன்றுவயதுதொட்டு பத்துவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு விளையாட்டு முறையாகக்கல்விபுகட்டவேண்டுமென்றும் இன்னின்னவிதமான விளையாட்டுப்பொருள்களை உபயோகிக்கலாமென்றும் கூறப்பட்டிருக்கிறது. மாண்டிஸோரிமுறை என்னுநூல் இருபகுதியினையுடையது. முதற்பகுதி 1. குழந்தைகளின் வாழ்க்கையின் மேனோக்கு (A Survey of the child's life) 2. இக்காலக்கல்வியின் மேனோக்கு (A Survey of Modern Education) 3. பிரத்தியட்சக் கல்விஞானத்திற்கு யான்செய்தஉதவிகள் (My contribution to expremental Science) 4. ஆசிரியனன்மதி (The preparations of the Teacher) 5. சுற்றிருப்பு; (Enviroaments) 6. கவனம் (Attention); 7. விருப்பு (Will) 8. அறிவுடைமை, (Intelligence) 9. கற்பனை (Imagination) என்பவைகளையுடையது. இரண்டாம்பகுதியில் எழுமுதல் பதினோருவயதுடைய மக்களுக்குக் கல்விகற்பிக்கவேண்டியமுறைகள் என்றுபெயரிடப்பட்டிருக்கிறது. அது 1. இலக்கணம் (Grammar) 2. வாசித்தல் (Reading) 3. கணிதம் (Arithmetic)

4. பூகணிதம் (Geometry); 5. சித்திரமெழுதல் (Drawing); 6. சங்கீதம் (Music); 7. யாப்பு (Metrics); எனப் பகுக்கப்பட்டிருக்கிறது. அதனில் முதற்பகுதியின் சாராம்சம் பின்வருமாறாகும்.

குழந்தைப்பருவத்தின்மேனேக்கு :—என்னே அநேகர் ஏழு வயதுக்கு மேம்பட்ட சிறுவர்கட்கூற்றமுறை அதற்கும் கீழ்ப்பட்டவயதுடையாருக்கும் பொருந்துமா? அக்குழவிகள் பெற்றோர்முதலானவர்களைப்பின்பற்றி நடக்கவேண்டாமா? மானிடவாழ்க்கை மிக்க அரிதாகையான் தன்னலமறுப்புடையவர்களாக விருக்கக்கற்றுக்கொள்ள வேண்டாமா? என்றவினுக்களை எழுப்புகின்றனர். இன்னும் சிலர் ஏழுவயதில்கற்கவேண்டிய எண்சுவடிவருங்கால் இடையூறுகள்பல உண்டாகுமாகலான் அவர்களை அவர்கள் விருப்பப்படிவிடலாமா? என்கின்றனர். இவ்வினுக்களெல்லாம் குழந்தைகளின் 'சுயேச்சை' சுதந்தரம் கொடுத்துக் கல்விபுகட்டவேண்டுமென யான்வெளியிட்டகொள்கைகளைப்பற்றி எழுகின்றன. இவைகள்காலம் செல்லச்செல்லமாறக்கூடுமாயினும், இக்காலத்து அதற்கு ஒருவிதமான சமாதானம் சொல்லியேதீரவேண்டும். முற்காலத்திலே பிள்ளைகளின் கால்கள் வளையாமலிருக்கக்கட்டுகட்டுவதுண்டு, நன்றாகப் பேசுவதற்கு நாவின் அடிபுறத்தைத்திறப்பதுண்டு; காதுகள் அகலப்படாமலிருக்கத்தலைமுடியிடுவதுண்டு; கண்நன்றாகத்தெரியகாதோலையிடுவதுண்டு; நன்றாய் மார்முக்கெடுப்பதுண்டு இவ்வழக்கங்கள் அநேகநாட்டில் நின்றுவிட்டன இன்னும் சில நாட்டில் வழங்குகின்றன. நிற்கக்காரணம் தற்காலக் குழந்தைவளர்க்கு முறையேயாம், இதனில் என்னசொல்லப் படுகிறது? குழந்தை அதனதன் உரியபருவத்தே நடக்கவும்; பேசவும், மூக்குண்டாகவும் பெறுமேயன்றி நாம் அதனைத்துன்புறுத்துவதாற் பிரயோஜனமில்லை; ஆகையால் அவைகளை இயற்கையின்படி காலக்கிரமத்துக்கு விடவேண்டுமென போதிக்கப்படுகிறோம். அப்படிதேகவளர்ச்சிக்குச் சொல்லும்போது அறிவுவளர்ச்சிக்கும் அதேவிதம்தானே செய்யக்கடமைபட்டிருக்கிறோம்? தேகவளர்ச்சிக்குச்சுயேச்சை கொடுக்கும்போது அறிவுவளர்ச்சிக்கும் சுயேச்சையாக அதாவது அவர்கள் விருப்பப்படி விட்டால் அறிவுவளருமென்பதே. எவ்வாறுதேக உருப்புக்களை நாம் தீண்டாமல் விட்டால்

நடை, நொடி, பாவனைகளில் குழந்தைகள் அழகுபெறுமோ அவ்விதமே கல்வியில் சுயாதீனம் கொடுத்தால் நடக்கை, அறிவு, மனப்பான்மை இவைகள்வெகு தெளிவாக விருத்தியடையும்; ஆசிரியன்மாரான நமக்கும் அது மனோசாந்தியையும் அறிவின் முதிர்ச்சியுண்டாகும் விதத்தையும் காட்டும்.

தேகப்பாதுகாப்புக்கும் அறிவுவளர்ச்சிக்கும் ஒற்றுமையுண் டென லாம். அதனிலிருந்தே அநேக உதாரணங்கள் காட்டலாம். முற்காலத் தில் குழந்தைமரணம் அதிகமாக இருந்தது. அக்காலத்தில் ஜனங்கள் குழந்தைகள் பிழைத்தால் போதுமென்றிருந்தார்களேயன்றி மூக்கு தட்டையாயிருக்கிறது, நீண்டு கூராகவில்லை; கால்நேராக இல்லை என்று சொன்னதில்லை. இவ்வளவு அதிகப்பட்ட மரணத்திற்குக் காரணம் சில தொற்றுவியாதிகளும், சுத்தமின்மையுமே. இவைகளைக் காப்பாற்றவே சுகாதாரநூல் ஏற்பட்டது. குழந்தைகளைப்பாதுகாக்குமுறையு முண்டாயிற்று. பாதுகாப்புமுறை இயற்கையான முறைகளை ஏற்படுத் திற்று. வயதுக்குத்தக்கஉணவும், பலகாலஉணவுநீக்கமும், மாசற்ற உடையும், வேண்டியவைகள் என்று குறிப்பிடப்பட்டது, பிள்ளைச் சாலைகள், தொட்டில்கள், குழந்தைகட்கேற்ற உணவுகள் இவைகளெல் லாம் பாதுகாப்புமுறையில் ஏற்பட்டபலனாகும். ஆகையால் குழந்தை களின் மனவளர்ச்சியை அவைகளின் தேகவளர்ச்சியோடு ஒருவாறு ஒப்பிடலாம்.

இவ்வாறாகக் சுகாதாரமுறை குழந்தைகட்குச்சுயேச்சையைக் கொடுத்தது, இதைவிட குழந்தை மரணத்தை நிறுத்தியும் நோயினின் றும் தவிர்த்ததும் பேருபகாரமாகும். ஆயினும் சுகாதாரமுறையா குழந்தைகளை உயரம், பருமன், அழகு, கனம் இவைகளில் வளர்ச்சி யடையச்செய்தது? இல்லை. ஆயினும் அம்முறை அக்குழந்தைகளின் வளர்ச்சிக்குத்தடையாயிருந்தவைகளை நீக்கிற்று. குழந்தைகளை மென் மையான மலருக்கு ஒப்பிடலாம். ஆனால்பூவேறு குழந்தைவேறு என்பதை உணரவேண்டும்.

குழந்தைகள் வேறு என்ற மாத்திரையான் அதன் பாத்தியங்கள், உரிமைகள், தானென்னவென்று உணரவேண்டும். அவைகள் வருங்கால மனிதர்களல்லவா? இப்பொழுது அவைகள் தேகவலு, மனோவலு,

இவைகளையிழந்து வேலை செய்கின்றன. அவைகளின்தாய்மார் ஆரம்பித்துச் செய்து காட்டியவைகளை விடாமற்செய்து வருகின்றனவாயினும் அவைகள் கஷ்டமானவைகளும், வேலைமிகுதியானதுமாம். அவைகள் பிறந்தகாலையில் அவைகளின் சக்தி அடங்கியிருந்தது. அதிர்ஷ்டம், அன்பு, தற்செயல் இவைகளிடம் குழந்தை ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. சமூகநிலையில் அவர்களது இருப்பு என்னநிலையுடையதென்று கவனிப்போம். நாம் இப்பொழுது இருபதாம் நூற்றுண்டில் வசிக்கிறோம்; அநேகநாகரீகம் பொருந்திய நாடுகளில் அநாதாசிரமமும், பால்கொடுக்கும் செவிலித்தாய்மாரும், அரசறிந்த நியமனங்களாம். (Recognised institutions). அநாதாலயம் (Orphan asylums) என்பதென்ன? மத்தியகாலங்களில் இருந்து பேர்அற்றுப்போகும்சிறையாளர்கள் வசித்தஅறைகள் போன்ற ஒருதனிப்பட்டஇடம், இருண்டபயங்கரமானமண்டபம் ஆனுல் சிறையாளர்கள் ஆண்மக்களாய், சிலகாரணங்களை முன்னிட்டும் பகைவர்களால் ஒரூரமாகநடத்தப்படுபவர்கள். குழந்தைகள் ஒன்றுமறியாதவர்களாயிற்றே! அதைக்கவனிக்கவேண்டாமா!! இன்னும், பாற்காரியைக்கவனியுங்கள். இதுவழக்கத்தின் கீழ்வந்தது. அவள் அதிகப்படி என்பது தோன்றவில்லையா? தான் பெற்றபிள்ளைக்குத்தான் பால்கொடுப்பதைவிட்டு வேறு ஒருவனை நியமிப்பது என்னகொடுமை. இதுவன்றி பாற்காரியிடம் பாலுண்ணும் குழந்தைக்கு பாலுடையஇருவர் இருக்க ஒருகுழந்தைக்கு (பாற்காரி குழந்தைக்கு) ஒருவருமின்றி அது தவிக்கிறது. கடவுள் இப்பொருளை அவரவர்களுக்கு அளந்து கொடுத்திருக்கிறார். அப்படியிருக்க ஒருவருடையதை ஒருவர் எடுத்துக்கொள்வது நியாயமாகுமா? ஒருவர் பாத்தியதைபை ஒருவர் எடுத்துக்கொண்டால் அதற்கு நியாயமன்றம்செல்கினறனர். இக்கொள்ளையைக்கவனிப்பார் ஒருவருமில்லையே! என்றுலும் இப்பொழுது சுகாதாரமுறையை யெண்ணி செல்வவந்தரின் மனைவிகளும் தங்கள் குழந்தைகளுக்குப்பால்கொடுக்கச் சம்மதித்துள்ளார்கள். அவர்களெல்லோரும் தங்களையொப்பச்செய்யாதவர்களை நாகரீகமுதிர்ச்சி பெறுதாரென்று கருதுகின்றனர். ஆனுல் நோயினுல் வருந்தும் தாய்மாரைப்பற்றியும் குழந்தைகளைப்பற்றியுமென்றுலோ, அது தெய்வசங்கற்பத்தைப்பொறுத்தது. எவ்வளவு ஒருவன் வருந்தினுலும் செல்வவானுடைய சொத்தை அடைய நியாயமில்லை. பூர்வகாலத்தைப்போல

இப்பொழுது ஒருசக்கரவர்த்திபிணியால்வருந்த அதற்கு மாற்முக நல்ல மனிதர்குருதியில் முழுகிஎழுந்தால் குணமடைவனென்முல் நடவாது. இவைகள்தான நாகரீகத்தின் அடிப்படை. கொள்ளைக்காரர்களிலும், நரமாம்சபட்சிணிகளிலிருந்து நம்மைப்பிரிப்பதும் இதுவே. பெரியோர் களுடைய பாத்தியங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆயினும் குழந்தைகளின் பாத்தியங்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆகையால் யாருக்குவாயுண்டோ அவர்களுக்கு ஒருவிதமும், வாயற்றவர்களுக்கு வேருருவிதமும் என்பது நிலைவரப்படுகிறது. அங்ஙனமாயின் பல வான்ஏற்படுத்தியது நாகரீகமென்முகும். ஆகையால் நாம் இது பொழுது கொடுத்திருப்பது தேகவளர்ச்சிக்குரிய சாதனங்களேயாம் அவர்களுடைய பாத்தியதைகள் கவனிக்கப்படவேயில்லை.

இனி, நாம் சுற்றுமுற்றும் பார்ப்போம். நாம் நல்ல வீடுகளில் சகல வைபவங்களையும் அனுபவிக்க அவர்களோ ஒன்றையும் அனுபவிப்ப தில்லை. அவர்களுக்குத்தகுந்த தட்டுமுட்டு சாமான்கள் கிடையாது. நாம் நம்மைவிட பருத்ததேகமுடைய ஒரு ஜாதியாரின் மத்தியில் மாட் டிக்கொண்டதாக வைத்துக்கொள்வோம்.

அவர்கள் தட்டுமுட்டு சாமான்கள் நம்மால் எடுத்து ஆளமுடியாத படியிருக்குமாயின் நாம் என்ன நினைப்போம்? நம்மனம் என்னபாடுபடும்? அதுபோலன்றோ குழந்தைகளின் மனமும். நம்மைவிட அவைகளுக்கு விருப்பம் அதிகம். அவைகளைத்திருப்திசெய்யவேண்டியது நமதுகடமை யல்லவா? திருப்தியுடைய குழந்தைகள் வளர்ச்சிக்கும் அப்படியில்லாத குழந்தைவளர்ச்சிக்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங் கள். குழந்தைகளின் மனம் திருப்தி அடையாவிட்டால் அதன் தேக வளர்ச்சிகுன்றுவது மாத்திரமன்றித்தேகவலுவும் குறைகிறது. அது வன்றி அன்புடன்நடத்திய குழந்தையும் தேகத்திலும் மனதிலும் வலு வடையும். மேலும் ஆகாரமும், நல்லகாற்றுமிருந்துவிட்டால் குழந்தை

தானேவளர்ந்துவிடுமென்று பொருளல்ல. அது சந்தோஷமுடைய தாகவுமிருக்கவேண்டும். உடல்நூல் எல்லா அவயவங்களும் அதததற்குத் தகுந்தவேலையைச் செய்யவேண்டுமென்பதால் அதற்குத்தக்கபடி நடப்பது நலம்.

ஆன்மாவளர்ச்சியடைந்தால்தான் தேகம்வளர்ச்சியடையும் என்றுசொல்லவேண்டும். ஏனெனில் துக்கம், சினம், களைப்பு, இன்பம் இவைகளுக்குத் தக்கவாறு தேகம்குன்றுவதும் வளர்வதுமுண்டென்பது எல்லோருமறிந்தவிஷயம். துக்கத்தில் இருதயத்தின் செய்கை குறைகிறது. வேண்டியரஸம் உண்டாவதில்லே, இரத்தப்பைகள் சுருங்குகின்றன; இவைகளால் முகம் வெளுப்படைகிறது. பின்னர்களைப்பு, தேகவலுக்குறைவு முதலான கெடுதிகள் உண்டாகின்றன. கோட்டாவிவிடுவதால் இரத்தம்மேலேறி அவயவங்கள் மறுபடிதன் காரியங்களைச் செய்யஆரம்பிக்கினறன. சினந்தால் நரம்புகள் ஒன்றுகூடிப்பித்தத்தை வெளிப்படுத்துகிறது. இன்பத்தில் இரத்தாசயங்கள் சுழற்றப்பட்டு அவயவங்கள் நல்லவேலை ஆரம்பிக்கின்றன. அது புதியஉணர்ச்சி (Injuction) உண்டாக்கியது போலாகிறது. இன்னொருஉதாரணம் கூறுவோம். இதாலிதேசத்தில் கொலைத்தீர்ப்பை நிறுத்தி ஆயுள்பரியந்தம் தனிக்காவல் விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஆகாயமும் ஆகாரமும் இருந்தும் தனியாகயிருக்கிறோமென்றகவலையால் வெகுசீக்கிரத்தில் உயிரிழக்கின்றனர். ஆகையால் குழந்தைகளின் நிலை இவ்விதமாக இருக்கிறதென சுருங்கக்கூறினேன்.

தொடரும்,

சோமசுந்தரதேசிகர்.

இலக்கணவிளக்கபாட்பரை.

புத்தக மதிப்புரை.

(ஏழுநகரத்தார்பேரில்) குழுவநாடகமும், பள்ளுநாடகமும் —இவை ஆண்டிபட்டி ஸமஸ்தானாதிபதியும் மற்றும் பல மூதன்மைபெற்றவரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உப அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீமத். சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்கள் விருப்பத்தின்படி ஷை ஸமஸ்தான வித்வான் ஸ்ரீமத். திருஞானசம்பந்தக் கவிராயரவர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பெற்றன. இப்புத்தகத்தின் முகப்பில் ஸ்ரீமத். பெத்தாச்சிசெட்டியாரவர்களால் எழுதப்பட்ட முக வுரையாலும், அதனையடுத்து ஸ்ரீமத். கவிராயரவர்களாலெழுதிய பதிப் புரையாலும் இந்நூல்களின் வரலாறுகளும், இந்நூல்களாலறியத்தகும் ஏழுநகரத்தார்களது குலபரம்பரையாகவரும் குணாதிசயங்களும், பெரு மைகளும் இனிது புலப்படும்.

'தமிழ் இலக்கியம் சங்கக்காலம்'.—இது வாலிப கிறிஸ்தவசங்கத் தைச் சார்ந்த திருநெல்வேலி ஸ்ரீமத். ஞா. சா. துரைசாமிபிள்ளையவர்க ளால் ஆராய்ச்சிமுறையிலெழுதப்பட்டது. இதில் தமிழ்மொழியையும், தமிழ்ப்புலவர்களையும், தமிழ்நூல்களையும், தமிழர் ஒழுக்கவழக்கங்களை யும்பற்றி ஆங்காங்கு அறியக்கிடக்கும் பல விஷயங்களும் ஒருங்கு தொகுத்துத் தமிழ்கற்கும் மாணவர்களும் எளிதிலுணரும்படி தெளி வான நடையில் எழுதப்பட்டுள்ளன. இப்புத்தகம் சரித்திரவாராய்ச்சி யில் நுழைவார்க்கு உபயோகமாகும்படி இதுகாறும் வெளியான காலக் குறிப்புகளும் ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளன. இதன் விலைவிவரங்கள் ஆக்கியோர்க்கெழுதியறிக.

கர்மயோகம்.—இது முதன்முதல் அமெரிக்காக்கண்டத்தில் 1895-ம் ஆண்டில் ஸ்ரீமத். விவேகானந்தஸ்வாமிகளால் ஆங்கிலமொழியில் உபந்யாசரூபமாகச்செய்யப்பட்டது; அதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியவிஷயங்களை ஆங்கிலங்கல்லாத தமிழர்களும் எளிதிலுணர்ந்து கொள்ளும்பொருட்டு ஸ்ரீமத். பண்டித. மயில்வாகனனாரால் இனிமையான தமிழ்நடையில் மொழிபெயர்ப்பெனத் தோன்றுவாறு செவ்விதினெழுதப்பட்டு சென்னை ராமகிருஷ்ணமடத்தாராற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதைப்படிப்பதனால் நன்மக்கட்கு மனநிலையும் செயலும் தன்னலமொழிந்தனவாயிருக்கவேண்டுமென்பது வெளியாம். இதன்விலை முதலியன மேற்கண்ட மடத்தார்க்கெழுதித் தெரிக

பத்திராதிபர்.